**26th AUGUST 2024**


www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 45 | பக்கங்கள் - 18 | editor.uthayam@gmail.com


## சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனம் வியாழக்கிழமை வெளியீடு!

எஸ்.எம்.மரிக்கார் எம்.பி



(ஐ.ஏ.காதிர் கான்)

"ஐக்கிய மக்கள் சக்தியினதும், ஐக்கிய மக்கள்

02ம் பக்கம்பார்க்க...

# இஸ்ரேலுக்கு விரைவில் பயங்கர பதிலடி



**ஒரே நேரத்தில் 8,000 ஏவுகணைகளை ஏவுவோம்**

(சிறப்பு நிருபர் எம்.என். முஹம்மட்)

ஈரான் பதில் தாக்குதலை எந்த நேரத்திலும் நடாத்தலாம் என அச்சத்தில் இருக்கும் இந்த நிலைமையில் ஹூத்திகளும் அதேபோன்று ஹிஸ்புல்லாக்களும் மறுபுறம்

04ம் பக்கம்பார்க்க...

**ஹிஸ்புல்லாஹ்வின் தலைவர் கடும் எச்சரிக்கை**

## ஆயிரத்தை அண்மிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்

எதிர்வரும் செப்டம்பர் 21 ல் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இதுவரை 925 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் விரைவில் இது ஆயிரத்தை எட்டலாமென்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஜூலை 31 முதல் இதுவரையான காலப்பகுதியில் தேர்தல் விதிகள் தொடர்பில் 901 முறைப்பாடுகளும் வன்முறைகள் தொடர்பில் 24 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்

02ம் பக்கம்பார்க்க...

# ரணில் வெற்றியீட்டினால் முதலில் பட்ஜெட் அதன் பின்பே பாராளுமன்ற கலைப்பு

**பிரதமர் தினேஷ் குணவர்தன**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றியீட்டினால் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமே முதலில் சமர்ப்பிக்கப்படும்.

அதன் பின்பே பாராளுமன்றத்தை உடனடியாக கலைப்பதா, இல்லையா என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த அவர் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாவிடின் அடுத்து வரும் மூன்று மாதங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு வாக்கெடுப்பு நடாத்த

02ம் பக்கம்பார்க்க...

## சு.க அமைப்பாளர்கள் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு



இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக, நீண்டகாலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலமான செயற்பாட்டாளர்கள் இணைந்து வருகின்றனர்.

02ம் பக்கம்பார்க்க...

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாடு!



**ஏறாவூர் கூட்டத்தில் சஜித் பிரேமதாச!**

யுத்தத்தின் பின்னர் வடகிழக்கு பிரதேசம் இன்னும் சரியான அபிவிருத்தியை நோக்கி செல்லவில்லை. வடகிழக்கு பிரதேசத்தை விருத்தியாக்கும் நோக்கில் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி, வடகிழக்கு பகுதியை மேம்படுத்துவதோடு, முழு நாட்டையும் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்போம் என எதிர்க்கட்சித்

02ம் பக்கம்பார்க்க...

## அனுரவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் புரட்சிகரமான திட்டங்கள்!

**பெருந்தொகையானோர் பிரசன்னத்துடன் இன்று வெளியீடு!**



வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான கொள்கைப் பிரகடனம் ஜயவர்தனபுர மொனாக் இம்பீரியல் ஹோட்டலில் இன்று ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திஸ ாநாயக்க தலைமையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பெருந்தொகையானோர் பிரசன்னத்துடன் இடம்பெற்ற இந் நிகழ்வில் கொள்கைப் பிரகடனத்தை அனுர குமார திஸாநாயக்க முன்வைத்தார்.

02ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## சு.க..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

களுத்துறைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளராக செயற்பட்ட முன்னாள் பிரதி அமைச்சரும், களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பிரியங்கனி அபேவீர, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா தொகுதியின் பிரதான அமைப்பாளர் எஸ்.டி. பண்டாரநாயக்கவின் பேரன், பண்டு பண்டாரநாயக்கவின் மகன்,பிரவீன் டயஸ் பண்டாரநாயக்க, கொலன்ன தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் சாந்த ரத்நாயக்க, ரக்வான தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம அமைப்பாளர் உபாலி சந்திரசேன, அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் அனுர முனசிங்க, தெனியாய தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் சாகர சுரேன் எதிரிவீர, பொத்துவில் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் விஜயமுனி நிபுண சொய்சா, களனித் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் திலக் வராகொட, லக்கல தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் அசித வேகொடபொல, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சமில டி சில்வா ஆகியோர் இன்று (26) முற்பகல் கொழும்பு பிளவர் வீதியில் உள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் அலுவலகத்திற்கு வந்து ஜனாதிபதியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக அறிவித்தார்கள்.

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை கருத்திற்கொண்டு கட்சி பேதமின்றி அனைவரையும் ஒன்றிணைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை காப்பாற்றியதாதாக சுட்டிக்காட்டிய பிரதிநிதிகள், நாட்டு மக்கள் அனைவரும் சாதி, மத, கட்சி, நிற பேதமின்றி எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் நின்று தவித்துள்ளதாகவும், நாட்டில் மீண்டும் இவ்வாறானதொரு நிலை ஏற்பட இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் உண்மையை மறைத்து பொய்யை விதைத்தாலும் நாட்டு மக்கள் தற்போது உண்மையை உணர்ந்து கொண்டுள்ளதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## அனுரவின்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

25 பேர் கொண்ட அமைச்சரவை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் நீக்கம்,

இலவச வாகன அனுமதிப் பத்திரம் இரத்து, ஜனாதிபதி இல்லங்களின் எண்ணிக்கையை ஒன்றாகக் குறைத்தல், நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழித்தல், சர்வஜன வாக்கெடுப்புடன் புதிய அரசியலமைப்பு, போன்ற பல்வேறு புதிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.இத் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முழுமையான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

www.uthayam.lk

## வடக்கு..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் 18 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இன்று (26) மாலை மட்டக்களப்பு, ஏறாவூர் அஹமட் பரீட் மைதானத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், அப்பகுதியை சேர்ந்த ஏராளமான மக்கள் என பெரும் திரளானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

-தேசிய போசாக்கு கொள்கையை நடைமுறைப்படுத்துதல் -

மந்த போசனை நிலைமை அதிகரித்து காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. தேசிய போசாக்கு கொள்கையை நாட்டிற்குள் நடைமுறைப்படுத்தி, அவற்றிற்குத் தீர்வு காணுவோம். மந்த போசனையே இல்லாமல் செய்வதற்கு நடவடிக்கை எடுப்போம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

- ஒன்லைன் கடன் மாபியாவுக்கு முற்றுப்புள்ளி -

சுற்றுலாத்துறையை விரிவுபடுத்தி அதனூடாக ஏற்படுகின்ற அபிவிருத்தியின் பிரதிபலனை மக்களுக்கு கிடைக்கச் செய்வதோடு, அதற்கு மேலதிகமாக கடன் மாபியா காரணமாக மக்களும் கடன் சுமைக்குள் சிக்கி இருக்கின்றார்கள். சூதையாடும் ஒன்லைன் கடன் மாபியாவில் இருந்து மக்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- புல்மோட்டை கனிய மணல் வளத்தை நிலையாகப் பேண நடவடிக்கை -

இளைஞர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை அமைத்து இளைய தலைமுறையினரை அறிவாற்றலுடன் உருவாக்கி, அதனூடாக தொழில் வாய்ப்பின்மையை நிவர்த்தி செய்வோம். அதிகாரத்திற்கு வந்த உடனே புல்மோட்டையில் உள்ள கனிம மணல் வளத்தை நிலையான அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்போம்.

புல்மோட்டையில் கனிம வளங்களை பயன்படுத்தி மக்கள் மயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

- வறுமையைப் போக்க புதிய செயற்றிட்டங்கள் -

நாட்டை பாதாளத்துக்குள் விழச் செய்து, வங்கரோத்து அடையச் செய்த தலைவர்கள் தற்போதைய ஜனாதிபதியின் கீழ் இருக்கின்றார்கள். மக்கள் வறுமையில் இருக்கின்ற போது ஆட்சியாளர்கள் சுகபோகமாக வாழ்கின்றார்கள். நான் மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு ஆட்சிக்கு வந்தவுடன் 24 மாதங்களுக்குள் வறுமையைப் போக்க நடவடிக்கை எடுப்பேன். இந்த வேலை திட்டங்கள் மகளிர் மையப்படுத்தியதாக அமையும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

## சஜித்தின்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

கூட்டணியினதும் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வின் தேர்தல் விஞ்ஞாபனம், எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்படும்" என, ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி தலைமையகத்தில் இன்று (26) நடந்த ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## ரணில்..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வேண்டியிருக்கும்.

தற்போதைய பாராளுமன்றம் 2025 ஒகஸ்ட் வரை பதவியிலிருக்க முடியும். எனவே அது குறித்தும் ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## ஆயிரத்தை..

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

இன்று அல்லது நாளைக்குள் ஆயிரத்தை அண்மிக்குலாமென்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒரு மாத காலத்துக்குள் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமை மிகவும் பாரதூரமான நிலையென்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.







# இன மத பேதங்களுக்கு அப்பால் எனது தந்தை, பாட்டனார் போல மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன்

## ரிஸ்லி முஸ்தபா தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான், எம்.என்.எம்.அப்றாஸ்)

இன மத பேதங்களுக்கு அப்பால் எனது தந்தை, பாட்டனார் போல மக்களுக்கு சேவை செய்ய விரும்புகிறேன் என்று ரிஸ்லி முஸ்தபா தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர்களின் மாபெரும் எழுச்சி மாநாடு "புதிய யுகம் நோக்கிய பயணம்" எனும் தொனிப் பொருளில் சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் சனிக்கிழமை (24) இடம் பெற்றபோது அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் கல்வித் திட்ட, சமூக அமைப்பின் தலைவருமான றிஸ்லி முஸ்தபா மேற்கண்டவாறு உரையாற்றினார்.

இன்றைய கட்சியின் அதிவு ஏற்பட உறுப்பினர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் என பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் யுவதிகளும் கலந்து கொண்டனர்.

இங்கு அவர் மேலும் தனதுரையில் குறிப்பிடும்போது,

எனது தந்தை மர்ஹூம் மாயோன் முஸ்தபாவின் திட்டங்களில் ஒன்றான அம்பாரை மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் மாவட்ட இளையோருக்கான வேலைவாய்ப்பு,அம்பாறை மாவட்ட இளைஞர்களுக்கான நவீன வசிதிகள் கொண்ட தொழினுட்ப கல்லூரி, நவீன வசதிகள் கொண்ட விளையாட்டு மைதானம்

மேலும் பல இளையோருக்கான தேவைப்பாடுகள் மக்கள் நலன் சார் இதர சேவைகள் என்பன இன்ஸா அல்லாஹ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிசாத் பதியுதீ தீனின் உதவியுடன் மேற்கொள்வேன்.

அம்பாறை மாவட்டத்தில் என்னை பல கட்சிகள் அழைத்தது. ஆனால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் கொள்கை சரியான பாதையை முன்னெடுக்கும் என்ற நம்பிக்கை என்னிடம் உண்டு. அதனால்தான் நான் ஏ.சி.எம்.சி கட்சியில் இணைந்து பயணித்து சேவையாற்ற உள்ளேன்.

இதற்காக இளைஞர்கள் என்னோடு ஒன்று சேர்ந்து பயணிக்க முன்வர வேண்டும். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் எமது அரசியல் பயணத்தில் இணைந்து கொள்வதற்காக வந்திருக்கின்ற இளைஞர்களை



பார்க்கும்போது மிகவும் சந்தோஷம் அடைகின்றேன். இது என் மீதும் எமது கட்சியின் தலைமை மீதும் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாடு என்று நான் நம்புகின்றேன்.

அது போன்று எனது எதிர்கால அரசியல் பயணத்தில் இளைஞர்களுக்கான சிறந்த எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்க நான் முன் நின்று உழைப்பேன்.

எனவே, நாம் இளைஞர்கள் ஒன்றிணைந்து கட்சித் தலைமையின் கைகளை பலப்படுத்துவதோடு, எமது உரிமைகளை, தேவைகளை பெற்றுக் கொள்வதுடன் சிறந்த

அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக இன மத பேதமின்றி நாம் ஒன்றிணைவோம் என்றும் கூறினார்.

## ருக்மன்சேனாநாயக காலமானார்

முன்னாள் அமைச்சரும், கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ருக்மன் சேனாநாயக்க காலமானார். இவர் இலங்கையின் முதலாவது பிரதமர் DS. சேனாநாயக்கவின் பேரனாவார்.

சுற்றாடல் அமைச்சுப் பதவியையும் ஐ.தே. கட்சியின் தவிசாளர் பதவியையும் வகித்த இவர் டட்லி சேனாநாயக்கவின் சகோதரரான ரொபட் சேனாநாயக்கவின் புத்திரராவார்.







www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 AUGUST 26 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# மக்கள் உரிமைக்கே

## உத்தரவாதமளித்த நீதிமன்றத் தீர்ப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்தில் நடாத்தாமை குறித்து மனித உரிமை மீறப்பட்டிருப்பதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதோடு அந்தத் தேர்தலை விரைவில் நடாத்துமாறு பணிப்புரையும் விடுத்துள்ளது. சில தினங்களுக்கு முன் உயர் நீதி மன்றம் இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கினை விசாரித்து அளிக்கப்பட்ட தீர்ப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், மற்றும் பெபரல் நிறுவனம் என்பன தாக்கல் செய்திருந்த அடிப்படை மனித மீறல் வழக்கை விசாரித்த போது உயர் நீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது. அதே நேரம் தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களும் நாட்டின் ஜனாதிபதியும் அடிப்படை மனித உரிமையை மீறியிருப்பதாக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உள்ளூராட்சி தேர்தல் கடந்த வருடம் மார்ச் மாதம் 9ஆம் திகதி நடாத்தப்பட்டிருக்க வேண்டும். தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி தேவையான நிதி ஒதுக்கீட்டை செய்திருக்கவில்லை.

அப்போதிருந்த தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடாத்துவதற்கென பல ஏற்பாடுகளை மேற்கொண்டு நியமனப்பத்திரங்களை ஏற்றுக்கொண்டிருந்த போதும் திறைசேரியானது உரிய காலத்தில் உரிய நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்காததால் தேர்தல் ஒத்திப்போடப்பட்டது.

தேர்தலை ஒத்திவைக்கவில்லை ஒத்திவைப்பதற்கு தேர்தலே இல்லை என அப்போதைய அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குட்டித்தேர்தல் எனப்படும் உள்ளூராட்சித் தேர்தல் கடைசியாக 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடாத்தப்பட்டது. சட்டப்படி உள்ளூராட்சித் தேர்தல்கள் 2017ஆம் ஆண்டு நடாத்தப்பட்டிருக்க வேண்டும். சட்டப்படி, உள்ளூராட்சித் தேர்தலை ஒரு வருடம் வரை ஒத்தி வைக்கும் அதிகாரம் உள்ளூராட்சி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனைப் பயன்படுத்தி அப்போதைய அரசு உள்ளூராட்சித் தேர்தலை அடுத்த வருடம் வரை ஒத்தி வைத்திருந்தது.

2022 ஆம் ஆண்டு நடாத்த வேண்டிய தேர்தலை நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையைக் காரணமாகக் காட்டி ஒத்திவைக்கப்பட்டது. இதற்கு பல அரசியல் காரணங்களும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. பதவியிலிருந்த அரசுக்கு தேரதல் சாதகமான முடிவுகளை பெற்றுத் தராது என்ற நோக்கில் தேர்தல் பிறபோடப்பட்டதாக செய்திகள் கசிந்தது.

உரிய காலத்தில் தேர்தல் நடாத்தப்படாமையால் 340 உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகமானது மக்கள் பிரதிநிதிகளின் கையிலிருந்து அதிகாரிகளின் கைக்கு மாற்றப்பட்டது.

24 மாநகர சபைகள் 41 நகர சபைகள் 175 பிரதேச சபைகள் மூலமாக தெரிவுசெய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 8711 ஆகும்.

குட்டி அரசாங்கம் மூலம் இவர்கள் மக்களுக்கு நெருங்கிச் சேவை செய்பவர்களாக இருந்தனர். வசதி குறைந்த கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் பல சேவைகள் கிடைக்கப்பெற்றன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்தலை நடாத்தாமை மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்து, இவ்விடயத்தில் ஜனாதிபதியும் தேர்தல் ஆணைக்குழுவும் தவறிழைத்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது. உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இத்தீர்ப்பு மக்களது மனித உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது. தேர்தலை ஒத்திப்போட முனைந்தவர்களுக்கு இத்தீர்ப்பு ஒரு பாடமாக அமைவது நிச்சயம்.

## இஸ்ரேலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹமாஸூம் இன்னொரு பக்கம் பத்தாஹூம் என பல முனைகளிலும் தாக்குதல்களை நடாத்துவது இஸ்ரேலை திக்குமுக்காட செய்துள்ளது. இதனாலேயே அபூ உபைதா தனது டுவிட்டரில், ”எல்லா முனைகளும் நெருப்பாக இருக்கின்றன் நீங்கள் அவதானத்தோடு இருங்கள் நாம் உங்களுக்கு தக்க பாடம் கற்பிப்போம்” என கடுமையாக எச்சரித்திருக்கின்றார். ஈரான் ஒரு பதிலடி வழங்குமாக இருந்தால் அது மத்திய கிழக்குக்கு ஒரு பாரிய சிக்கலான நிலைமை ஒன்றை உருவாக்கும் என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் குறிப்பாக தனது நுட்பமாக சுற்றி இருக்கும் தன் ஆதரவாளர்களை கொண்டு இஸ்ரேலைத் தாக்கி, பலவீனப்படுத்தி, இஸ்ரேலின் இராணுவத்தில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தி ஒரு தாக்குதலை நடாத்துவதற்கு திட்டமிடுவதாக ஒரு சில இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எவ்வாறு இருந்தாலும் ஈரான் இதுவரைக்கும் தான் தாக்குதலை நடாத்தும் நேரத்தையோ, அல்லது தாக்குதல் முறைமைகள் பற்றியோ எந்த ஒரு அறிவித்தலையும் விடுக்காத நிலையில், ஈரானுடைய பாதுகாப்பு அமைச்சர் இதற்கு முன்பு எந்த நாடும் கண்டிராத ஒரு தாக்குதலை நாங்கள் இஸ்ரேல் மீது நடாத்துவோம் என மீள மீள தெரிவித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

நேற்று ஹிஸ்புல்லாக்கள் நடாத்திய தாக்குதலை அடுத்து ஆயிரக்கணக்கான இஸ்ரேலியர்கள் நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர். பென் குரியன் விமான நிலையம் பெருமளவு இஸ்ரேலியார்களால் நிரம்பி வழிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக ஹிஸ்புல்லாக்கள் ஒரே நேரத்தில் 320 ரொக்கட்டுகளை தாக்கியதோடு பதிலுக்கு செயற்பலமான விமான தாக்குதல்களையும் நடத்தியது. குறிப்பாக இதில் இஸ்ரேலின் கடலில் இருந்த இஸ்ரேலிய அதிநவீன ரேடார் படகு ஒன்று முற்றாக அழிந்து உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஹஸன் அஸ ருல்லாஹ் நேற்று விஷேட உரையொன்றை ஆற்றுகின்ற போது, ”முன்பு போன்று உங்களுக்கு நினைத்த நேரத்தில் லெபனானைத் தாக்கவும் முடியாது நீங்கள் சங்கீத ஒலியுடன் இங்கே வந்து ஆக்கிரமிக்கவும் முடியாது நாங்கள் தேவைப்பட்டால் உங்கள் மீது ஒரே அடியாக 8000 6000 என பல்லாயிரக்கணக்கில் ஏவுகணைகளை உங்கள் மீது ஏவி தாக்குதல் நடாத்துவோம். எங்களுடைய மொத்த தாக்குதலில் இது மிக ஆரம்ப கட்டம் மட்டுமே. எதிர்காலத்தில் நீங்கள் இதைவிட மிக பயங்கரமான பதிலடியை எதிர்பார்க்க முடியம் என யூஸ் புல்லாவின் தலைவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

மற்றொருபுறம் ஹமாஸின் உத்தியோகபூர்வ பேச்சாளர் அபூ உபைதா அவர்கள் இந்த தாக்குதலை பாராட்டி இருப்பதோடு, இந்த தாக்குதல் அல் அக்ஸா வின் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக் கூறியிருப்பதோடு ஆக்கிரமிப்பு தொடரும் மட்டும் இவ்வாறான தாக்குதல்கள் தொடரும் என்று மிகத் தெளிவாக காட்டி இருக்கிறது. பிந்தி கிடைத்த செய்திகளின்படி எமனிலிருந்தும் தொடராக பல ட்ரோன்கள் இப்போதே இஸ்ரேலை நோக்கி ஏவப்பட்டுக் கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று அதிகாலை ஹமாஸ் ஆ90 விஷேட வகை ஏவுகணைகள் மூலம் டெல் அவெவ் இலுள்ள உள்ள முக்கிய இராணுவ முகாம் ஒன்றில் தாக்குதல் நடாத்தி உள்ளது. இஸ்ரேலின் “அயன் டோம்“ முறைமை இத்தாக்குதலை முற்றாக தடுப்பதற்கு தவறியுள்ளமையானது மக்கள் மத்தியில் தம் பாதுகாப்பினை கேள்விக்குறியாக்கி இருக்கிறது. இதில் பல இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு இராணுவத்துக்கு கடுமையான சேதாரங்கள் ஏற்பட்டுள்ளதாக சில தரப்புகளில் தெரிவிக்கப்பட்டாலும், இந்த செய்திகளை வெளியிட வேண்டாம் என்று இஸ்ரேல் தரப்பு ஊடகங்களுக்கு மிகக் கடுமையான சட்டங்களை விதித்துள்ளதோடு இதுவரையில் எந்த ஒரு ஊடவியலாளரையும் தாக்குதல் நடாத்தப்பட்ட இடத்துக்கு அனுமதிக்காமையும் குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் தமது அறிக்கையில், ”நாங்கள் இவ்வாறான தாக்குதல்களை தொடர்ந்து நடாத்துவோம் ஆக்கிரமிப்பு படை பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடாத்தும் வரை அவர்களுடைய பொது மக்களை நாங்கள் நிம்மதியாக வாழ விட மாட்டோம். எப்பொழுது பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படுமோ மற்றும் ஆக்கிரமிப்புகள் முடிவுக்குக் கொண்டு வரப்படுமோ அப்பொழுதுதான் யாவரும் நிம்மதியாக வாழ முடியும்” என குறிப்பிட்டுள்ளது.

மேலைத்தேய ராணுவ ஆய்வாளர்கள் தற்பொழுது ஏற்பட்டுள்ள இந்நிலைமை மிகவும் சிக்கலானது எனவும் இன்னும் சில மாதங்களுக்கு இது நீடிக்குமாக இருந்தால் பலத்த இழப்புகளோடு இஸ்ரேல் வெளியேற வேண்டி வரும் என தெரிவித்திருக்கின்ற அதே வேளை அமெரிக்காவும் சில அரபு நாடுகளும் தொடராக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.




## அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த டாக்டர் இல்யாஸ்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், பிரபல அரசியல்வாதியுமான டாக்டர் ஐதுருசில் இல்யாஸின் மரணம் முஸ்லிம் சமூகத்தில் ஒரு பேச்சுபொருளாக மாறியுள்ளது. பாராளுமன்ற உறுப்பினராகவும், மாகாண சபை உறுப்பினராகவும் புத்தளம் மாவட்டத்தில் மட்டுமன்றி நாடு பூராகவும் பிரபல்யமடைந்திருந்த டாக்டர் இல்யாஸ் துணிச்சல் மிக்க ஒரு அரசியல்வாதி ஆவார். போராட்டங்கள் மூலம் மக்கள் பிரச்சினைகளை பகிரங்கப்படுத்தி தீர்வு பெற்றுக்கொடுப்பவராக டாக்டர் இல்யாஸ் வரலாற்றில் பதியப்பட்டிருப்பதை தவிர்க்க முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் மர்ஹூம் ஆஉஆ அஷ்ரபுடன் இணைந்து அக்கட்சியை உருவாக்குவதில் முக்கிய பங்களிப்புச் செய்ததோடு, முஸ்லிம் காங்கிரஸின் மூலம் 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார். வடக்கிலிருந்த இடம்பெயர்க்கப்பட்ட முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக மர்ஹூம் டாக்டர் இல்யாஸ் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தமை மட்டுமன்றி அம்மக்களின் பல உரிமைகளை பெற்றுக்கொடுக்க தொடர்ந்தும் பங்களித்தவராவார். நாட்டில் நடைபெற்ற பல ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டதன் மூலம் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை பகிரங்கப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார். இத்தேர்தல்களில் தான் வெற்றி பெற முடியாது என தெரிந்திருந்தும் தான் சார்ந்த சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பகிரங்கப்படுத்த இதை ஒரு சந்தர்ப்பமாக கருதி செயற்பட்டார். டாக்டர் இல்யாஸ் எப்போதும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களின் குரலாக இருந்தார். பலஸ்தீன் மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களை எடுத்துக் காட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் டாக்டர் இல்யாஸ் முதன்மை வகித்தார். வீட்டிலிருந்து வெளியேறும் போது தனது கைகளில் பலஸ்தீனிய ஆநரவுக் கொடிகளை எடுத்துச்செல்லும் வாடிக்கையுடைவராக காணப்பட்டார். தனக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களையெல்லாம் பலஸ்தீனிய மக்களுக்கு குரல் கொடுப்பதற்கென பயன்படுத்திக்கொண்டார். இது தவிர ஈரானின் இஸ்லாமியப்புரட்சியின் நெருங்கிய ஆதரவாளராகவும் செயற்பட்டு வந்த டாக்டர் இல்யாஸின் பெயர் அடிக்கடி அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்களுக்கான இன மத பேதமற்ற ஒரு தொண்டனின் குரலாக ஒலித்து வந்தமை இலங்கை வரலாற்றில் இடம்பெறத்தக்கது. மர்ஹூம் டாக்டர் இல்யாஸ ின் மறுமை வாழ்வுக்காக அனைவரும் இருகரமேந்திப் பிரார்த்திப்போமாக..!

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....

(இப்னு தவ்பீக் ஆலீம்)

### "ஒரே உம்மத்"

"விசுவாசிகளே! நீங்கள் யாவரும் (ஒரே மார்க்கத்தை பின்பற்றக்கூடிய) ஒரே (உம்மத்-சகோதரத்துவ) சமுதாயத்தை சேர்ந்தவர்கள் தாம். (இதில் எத்தகைய வேற்றுமையும் கிடையாது.) உங்கள் யாவருக்கும் இறைவன் நான் ஒருவனே ஆகவே என்னையே நீங்கள் வணங்குங்கள்" (21:92)

"எனினும் இவர்கள் தங்களுக்குள் பல பிரிவுகளாக பிரிந்து விட்டனர். இவர்கள் யாவரும் நம்மிடம் திரும்பி வரக்கூடியவர்கள் தாம்." (21:93)

"ஆகவே (இவர்களில்) எவர்கள் விசுவாசம் கொண்டு நற்கருமங்கள் செய்கிறார்களோ அவர்களுடைய முயற்சி வீணாகி விடாது நிச்சயமாக நாம் அவர்களை பதிவு செய்து வருகிறோம் "

### அருட்கொடை

"(நபியே) நாம் உம்மை உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாகவே அனுப்பியிருக்கிறோம்" (21:107)

(ஆகவே) நீர் கூறும்! எனக்கு வஹி அறிவிக்கப்பட்டதெல்லாம் உங்களுடைய ஆண்டவன் ஒரே ஒருவன் என்றுதான். ஆகவே நீங்கள் அவனுக்கு முற்றிலும் வழிபட்டு நடப்பீர்களாக! (21:108)

"மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்கு பயப்படுங்கள் நிச்சயமாக விசாரணை நாளின் அதிர்ச்சி மகத்தான நிகழ்ச்சியாகும்" (22:01)

### ஹலாலன் தையிபன்

"(விசுவாசிகளே) அல்லாஹ் உங்களுக்கு அளித்தவைகளில் ஆகுமான நல்லவைகளை புசியுங்கள். நீங்கள் அல்லாஹ்வை வணங்குவதாக இருந்தால் அவனுடைய அருட்கொடைகளுக்கு நீங்கள் நன்றி செலுத்திக் கொண்டும் இருங்கள்." (16:114)

"(புசிக்கக் கூடாதென்று) உங்களுக்கு விலக்கப்பட்டிருப்பதெல்லாம் செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாதவைகளின் பெயர் கூறப்பட்டனவுமாகும். எவரேனும் வரம்பு மீறாமலும், பாவம் செய்யும் எண்ணமின்றியும், (எவராலும்) நிர்பந்திக்கப்பட்டு (அல்லது பசியின் கொடுமையால் அவசியத்துக்கு அதிகப்படாமல் இவைகளை புசித்து) விட்டால் (அவர் மீது குற்றமாகாது. ஆகவே இத்தகைய நிலைமையில் அவரை) நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்போடும் கிருபை செய்வோமாக இருக்கிறான்." (16:115)

### நாவில் வந்தவாரெல்லாம் கூறலாமா?

"உங்கள் நாவில் வந்தவாறெல்லாம் பொய் கூறுவதைப் போல் (எதை பற்றியும் மார்க்கத்தில்) இது ஆகும் இது ஆகாது என்று அல்லாஹ் மீது (அபாண்டமாக) பொய் கூறாதீர்கள். எவர்கள் அல்லாஹ்வின் மீது பொய்யை கற்பனை செய்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக சித்தி அடையவே மாட்டார்கள்" (16:116)

"(இத்தகையோர் இவ்வுலகில் அனுபவிப்பதெல்லாம்) சொற்ப இன்பம் தான். (மறுமையில்) அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனை உண்டு." (16:117)

### அறியாமையினால் செய்யப்படும் பாவத்திற்கு மன்னிப்பு உண்டா?

"(நபியே) நிச்சயமாக உமது இறைவன் எவர்கள் (தங்கள்) அறியாமையினால் பாவத்தை செய்துவிட்டு, அதன் பின்னர் அதிலிருந்து விலகி (நற்கருமங்களை செய்து) சீர்திருத்திக் கொள்கிறார்களோ அவர்களை (மன்னிப்பவனாக இருக்கிறான். அவர்கள் பாவத்திலிருந்து விலகி நற்கருமங்களை செய்த) பின்னர் நிச்சயமாக உமது இறைவன் மிக்க மன்னிப்பும் கிருபை புரிவோனும் ஆக இருக்கிறான்" (16:119)

### நன்னடத்தை உடையவர்களாக பாவமன்னிப்புக் கோருங்கள்

"உங்கள் மனதில் உள்ளதை உங்கள் இறைவன் மிக்க நன்றிவான். நீங்கள் நன்னடத்தையுடையவராக இருந்தால், நிச்சயமாக (உங்களில்) எவர் மன்னிப்பு கோரிய போதிலும் அவர்களின் குற்றங்களை அல்லாஹ் மன்னிப்பவனாக இருக்கிறான்." (17:25)

### செல்வம் பகிரப்பட வேண்டியவர்கள்

"பந்துக்களுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் அவரவர்களுக்கு உரிய பாத்தியதைகளை கொடுத்து வரவும். செல்வத்தை அளவு கடந்து வீண்விரயம் செய்ய வேண்டாம்." (17:26)

"ஏனென்றால் மிதமிஞ்சு செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ தன் இறைவனுக்கு கூட நன்றி செலுத்தாது மாறு செய்பவன்" (17:27)

### கடுகடுப்பும் அன்பான வார்த்தையும்

(நபியே! உம்மிடம் பொருள்கள் இல்லாமல் அதற்காக) நீர் உமது இறைவனின் அருளை எதிர்பார்த்திருக்கும் சமயத்தில் (உம்மிடம் யாரேனும் வந்து) ஏதும் கேட்டு அவர்களை நேரு புறக்கணிக்கும் படி நேரிட்டால் (அவர்களுடன் கடுகடுப்பாக பேசாதீர்) மிக்க அன்பான வார்த்தைகளையே அவர்களுக்கு கூறுவீராக. (17:28)

### பாவங்கள் நன்மையாக மாற்றப்படுகின்றன

"எவர்கள் பாவத்திலிருந்து விலகி (மன்னிப்பு கோரி) விசுவாசம் கொண்டு நற்கருமங்களை செய்கின்றார்களோ அத்தகையோருடைய பாவங்களை அல்லாஹ் (மன்னிப்பது மட்டுமல்ல் அதனை) நன்மையாகவும் மாற்றி விடுகிறான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கிருபையுடையோனுமாக இருக்கிறான்." (25:70)

"எவர்கள் பச்சாத பட்டு (பாவத்திலிருந்து) விலகி நற்கருமங்களை செய்கிறார்களோ அவர்கள் நிச்சயமாக முற்றிலும் அல்லாஹ்விடமே திரும்ப விடுகின்றனர்." (25:71)

"அன்றி அவர்கள் பொய் சாட்சி சொல்ல மாட்டார்கள். (வீணான காரியங்கள் நடைபெறும் இடங்களுக்கு செல்லவும் மாட்டார்கள்) ஒருக்கால் வீணான காரியம்( நடக்கும் இட)த்தின் பக்கம் சென்றுவிட்ட போதிலும், (அதில் சம்பந்தப்படாது) கண்ணியமான முறையில் (அதனைக் கடந்து) சென்று விடுவார்கள். (25:72)

### குருடனையும் செவிடனையும் போல் ஆகலாமா?

"அன்றி, அவர்கள் தங்கள் இறைவனின் வசனங்கள் ஓதி காண்பிக்க பெற்றால் குருடனையும் செவிடனையும் போல அதன் மீது அடித்து விழுவதில்லை. அதனை முற்றிலும் நன்குணர்ந்து கொள்வதுடன் அதனை கை கொண்டும் நடப்பார்கள்." (25:73)

"மேலும் அவர்கள் "எங்கள் இறைவனே எங்கள் மனைவிகளையும் எங்கள் சந்ததிகளையும் எங்களுக்கு கண்குளிர்ச்சியாக்கித் தந்தருள்வாயாக. நன்றி பரிசுத்தவான்களுக்கு வழிகாட்டியாகவும் எங்களை நீ ஆக்குவாயாக" என்று பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்." (25:74)

"இத்தகையோருக்கு அவர்கள் நஷ்டங்களை சகித்துக் கொண்டதன் காரணமாக உயர்ந்த மாளிகைகள் (மறுமையில்) கொடுக்கப்படும். சாந்தியும் சமாதானமும் (உண்டாவதாக) என்று ஆசீர்வாதத்துடன் அதில் வரவேற்கப்படுவார்கள். அதில் என்றென்றும் தங்கி விடுவார்கள்." (25:75-76)

"(நபியே!) நீர் கூறும்! நீங்கள் என் இறைவனை அழைத்து பிரார்த்தனை செய்யாவிடில் (அதற்காக) அவன் உங்களை பொருட்படுத்த போவதில்லை. ஏனெனில் நீங்கள் (அவனுடைய வசனங்களை) நிச்சயமாக பொய்யாக்கி கொண்டே இருந்தீர்கள். அதன் வேதனை உங்களை பிடித்தே தீரும்." (25:77)

# சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் எமக்கு ஏற்பட்டுள்ள வேதனைகள் வலிகள் நீங்கிவிடும் நம்பிக்கை வைத்து அவருக்கு வாக்களியுங்கள்

## - றிஷாத் பதியுதீன் வேண்டுகோள் -

(ஐ.ஏ. காதிர் கான் )

"சமூக வாக்குகளால் பதவிக்கு வந்து, கொடுங்கோல் ஆட்சியாளருக்கு விலைபோன முஸ்லிம் எம்.பி. க்களை ஒருபோதும் மன்னிக்க முடியாது" என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சாய்ந்தமருதில் (24) சனிக்கிழமை நடைபெற்ற கட்சியின் இளைஞர் மாநாட்டில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் அவர் மேலும் உரையாற்றியபோது,

"சந்தர்ப்பவாத அரசியலுக்கு விலை போனவர்களை, கட்சி ஒருபோதும் மன்னிக்கப்போவதில்லை. எங்களை விட்டும் பிரிந்த மூவரையும் துணிச்சலுடன் கட்சியிலிருந்து நீக்கியுள்ளோம். இதேபோன்று, துணிச்சலான முடிவுகளையே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுக்க வேண்டும். அப்போதுதான், சமூகத் துரோகிகளுக்கு சிறந்த பாடம் புகட்ட மக்கள் முன் வருவார்கள்.

துரோகிகளை மன்னிப்பது, பின்னர் மீண்டும் கட்சியில் இணைப்பது என்பதெல்லாம் கோமாளித்தன அரசியலாகும். மக்கள் மீது நம்பிக்கையுள்ள தலைமைகள், துரோகிகளைத் தண்டிப்பதற்குத் தயங்கப்போவதில்லை.

மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் வந்த எமது எம்.பி.



க்கள், கொடுங்கோல் ஆட்சி புரிந்த கோத்தாபயவைப் பலப்படுத்தவே, இருபதாவது திருத்தத்துக்கு வாக்களித்தனர். பாராளுமன்றத்தில் 144 எம்.பி. க்களை வைத்திருந்த இவருக்கு, சில சட்டங்களைத் திருத்துவதற்கு முடியாமலிருந்தது. இதனால், கொடுங்கோல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்காக, எமது எம்.பி. க்களை விலை பேசினார்.

சமூகத்தின் மானத்தை அடகு வைத்து, கோத்தாவிடம் இவர்கள் விலை போகினர். இவர்களின் ஆதரவால் பலமடைந்ததாலேயே, எமது ஜனாஸாக்களை எரிப்பதற்கு கோத்தாபய துணிந்தார். விலை போன எம்.பி.க்களின் உறவினர்கள் எரிக்கப்பட்டிருந்தால், சமூக வலிகளை உணர்ந்திருப்பர். இதனால்தான், சமூக நெறிக்கு உட்பட்டும், நீதிக்குக் கட்டுப்பட்டும் இந்த எம்.பி. க்களைத் தூக்கி எறிந்துள்ளோம்.

சமுதாயத்தை வழி நடத்துவதில் தர்ம வழியில் செல்லும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வளர்ச்சிக்கு இறைவனின் உதவி நிச்சயம் கிடைக்கும். மறைந்த தலைவர் அஷ்ரபின் சிந்தனையிலேயே எமது கட்சியும் இளைஞர்களை வழி நடத்துகிறது.

உணர்ச்சிகளுக்கு தமிழ் இளைஞர்கள் அடிமையானதால், நாட்டில் பாரிய யுத்தமே மூண்டது.

இது போன்றதொரு நிலைக்கு முஸ்லிம் இளைஞர்கள் சென்றுவிடக் கூடாது. ஒரு சிலரின் தவறுகளைத் தண்டிப்பதற்காக, சமூகத்தையே நெருக்கடிக்குள்ளாக்கும் தீர்மானத்தை எடுத்து விடாதீர்கள்.

ஸஹ்ரான் தலைமையில் பத்து இளைஞர்கள் செய்த தவறுகள்தான், எமது சமூகத்தை நெருக்கடிக்குள்ளாக்கின. இதனால், நானுட்பட எனது குடும்பம், சமூக முன்னோடிகளான சிறந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ், டொக்டர் ஷாபி ஷிஹாப்தீன், மௌலவி ஹஜ்ஜுல் அக்பர், அப்பாவி இளைஞர்கள் மற்றும் எமது தாய்மார்கள் சிறை செல்ல நேரிட்டது. இவை, இன்னும் வேதனைகளாகவும், காயங்களாகவுமே உள்ளன. சாய்ந்தமருதிலும் இதன் தாக்கமும் எதிரொலியும் உணரப்பட்டது.

சஜித் பிரேமதாஸவின் ஆட்சியில் இந்த வலிகள் நீங்கிவிடும். எனவே, எமது தலைமையில் நம்பிக்கை வைத்து வாக்களியுங்கள்" - என்றார்.



திக்குவல்லை ஸ்ம்ரியின் சிறுகதை நூல் வெளியீட்டு விழா கொழும்பு தபாலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றபோது நூலாசிரியரிடமிருந்து பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் நூலின் பிரதியொன்றினை பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.




# இஸ்லாமிய வெறுப்பு அச்சமே பிரித்தானிய கலவரங்களுக்கு மூல காரணம்!


எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

இஸ்லாமோஃபோபியா என்பது இஸ்லாம் அல்லது பொதுவாக முஸ்லிம்களின் மதத்தின் மீதான பகுத்தறிவற்ற பயம், விரோதம் அல்லது பாரபட்சம் என்பதேயாகும். இது தான் தற்போது வேறு வடிவம் எடுத்து பிரித்தானிய நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரமாக மாறி விட்டது.

இஸ்லாமோஃபோபியா முதன்மையாக இன, மத அல்லது கலாச்சார மதவெறியின் ஒரு வடிவமாகும் இத்தகைய உணர்வுகளைக் கொண்டவர்கள் பெரும்பாலும் முஸ்லிம்களை ஒரு புவிசார் அரசியல் அச்சுறுத்தல் அல்லது பயங்கரவாதத்தின் ஆதாரமாகக் கருதுகின்றனர் .

1990 களில் இருந்து மேற்கத்திய ஊடகங்கள் மூலம் பரவிய முஸ்லிம்களுக்கு எதிரான அரை-இனவாத ஒரே மாதிரியான கருத்துக்கள், மற்றும் செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்காவால் தொடங்கப்பட்ட " பயங்கரவாதத்தின் மீதான போர் " பிரச்சாரம் இவைகள் தான் இது போன்ற தவறான முத்திரைகள் பதிய காரணமாக அமைந்துள்ளது.

2013 இல் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், முஸ்லீம் ஆண்களை விட, முஸ்லீம் பெண்கள், குறிப்பாக முக்காடு அல்லது முகத்திரை அணிந்தவர்கள், இஸ்லாமிய வெறுப்பு தாக்குதல்களால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த ஆண்டு 2024 ஜுலை மாதம் இறுதியிலிருந்து இங்கிலாந்தின் பல பகுதிகளில் வெள்ளை இனவாதிகள் மிகப் பெரிய கலவரத்தை புலம்பெயர்ந்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக மேற்கொண்டிருக்கிறார்கள். அதில் முஸ்லிம்களின் வீடுகள், கடைகள், பள்ளிவாசல்கள், வாகனங்கள், தங்கும் விடுதிகள் எனப் பலவும் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. கலவரத்தைக் கட்டுப்படுத்த முயன்ற காவல்துறையினரும் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கின்றனர். எந்தவொரு உண்மையும் இல்லாமல் அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிரான மனநிலையில் மக்கள் இருக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணம் சர்வதேச நாடுகளை முழுமையாக ஆட்கொண்டு வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

கலவரம் தொடங்கியது எப்படி?

சரியாக ஜுலை 29ஆம் தேதி திங்கட்கிழமை இங்கிலாந்தில் உள்ள சவுத்போர்ட் பகுதியில் ஒரு கோரச் சம்பவம் அரங்கேறியது. அதுவே இந்தக் கலவரத்தின் தொடக்கப்புள்ளி. ஒரு 17 வயது சிறுவன் மூன்று குழந்தைகளைக் கத்தியால் குத்திக் கொன்றான். அதேபோல் இன்னும் 8 குழந்தைங்கள் உட்பட 10 பேரைக் கத்தியால் தாக்கினான். இது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இங்கிலாந்தின் சவுத்போர்ட் பகுதியில் ஒரு நடனப் பயிற்சி வகுப்பு நடந்தது. அதில்தான் அந்தச் சிறுவன் இப்படியொரு கொடூரத்தை நிகழ்த்தியிருக்கிறான். ஏன் இவ்வாறு செய்தான் என்ற விளக்கம் இதுவரை காவல்துறையினர் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இதைச் செய்தது ஒரு முஸ்லிம் என்றும், அவன் பெயர் அலி அஷ்ஷகாதி என்றும், அவன் ஒரு படகு மூலம் நாட்டுக்குள் குடியேறியவன் என்றும் பொய்ச் செய்தி தீவிர வலதுசாரிகளால் பரப்பப்பட்டது. இது சமூக ஊடகம் முதல் மைய நீரோட்ட ஊடகங்கள்வரை பரவியது.

குறிப்பாக, டாமி ராபின்சன் என்ற ஓர் இனவாதி, இஸ்ரேலிய ஆதரவாளர், இஸ்லாமிய வெறுப்பாளர் சமூக ஊடகத்தில் இதைப் பரப்பினார். அதைத் தொடர்ந்து புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டும் வகையிலும் பேசினார். அதன் விளைவுதான் இன்றைக்கு இங்கிலாந்து பற்றியெரிகிறது.

டாமி ராபின்சனுக்குப் பின்னால் ஒரு மிகப் பெரிய இஸ்ரேலிய, சியோனிச வலைப்பின்னல் இருப்பதாகவும், சியோனிஸ்டுகளில் ஒரு சாரார் இங்கிலாந்தில் கலவரத்தை ஊக்குவிப்பதாகவும் சொல்லப்படுகிறது. டாமி ராபின்சனின் கலவரத்தைத் தூண்டும் விஷமக் கருத்துகளுக்கு வலுச்சேர்க்கும் விதமாக ஆன்ட்ரூ டேட் என்ற சர்ச்சைக்குரிய நபர் கருத்து தெரிவித்தார். அதுவும் சமூக ஊடகத்தில் காட்டுத்தீயாய் பரவியது.

அதில் அவர் கொலை செய்த குற்றவாளி சட்ட விரோதக் முஸ்லிம் குடியேறி என்று பதிவுசெய்திருந்தார். அதாவது பிரிட்டன் இனவாதிகளின் கோபத்தில் நியாயம் இருக்கிறது என்ற தன்மையில் அவருடைய வீடியோ இருக்கிறது. உலகப் பணக்காரரான எலான் மஸ்க் இங்கிலாந்துக் கலவரம் பற்றிய ஒரு பதிவைப் பகிர்ந்திருந்தார் அதில் 'ஊளைடை றுயச' தவிர்க்க இயலாதது என்ற கருத்தைச் சொல்லியிருந்தார். இது இங்கிலாந்து அரசால் கடுமையாகக் கண்டிக்கப்பட்டது.

இங்கிலாந்து அமைச்சர் ஹைதி அலெக்சாண்டர் எலான் மஸ்கின் கருத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், “பொறுப்போடு நடந்துகொள்ளுங்கள்” என அறிவுரை வழங்கினார். அது மட்டுமல்லாமல், ஒரு கலவரத்தை 'சிவில் யுத்தம்' என்று அழைப்பது நியாயமற்றது என்றும் கூறினார்.

நான் முன்பு குறிப்பிட்ட டாமி ராபின்சன், ஆன்ட்ரூ டேட் போன்ற நபர்கள் ட்விட்டரில் இருந்து முன்னர் தடை செய்யப்பட்டிருந்தனர். இலான் மஸ்க் இவர்களை மீண்டும் சுதந்திரமாக இயங்க வழிசெய்தார். சமூக ஊடகம் என்பது கலவரத்தைத் தூண்டப் பயன்படுத்தப்பட்டு இருப்பதால் அதுசார்ந்த விவாதமும் இன்று இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

டாபி ராபின்சனின் களேபரக் கருத்துகளால் இன்றைக்கு பிரிட்டனே பற்றி எரிகிறது. ஆனால் இதற்குக் காரணமான அவர் இப்போது பிரிட்டனை விட்டு வெளியேறி மகிழ்ச்சியாக சைப்ரஸ் நாட்டிலிருந்தபடி நிழற்படங்களைப் பகிர்ந்துகொண்டு இருக்கிறார். இவ்வளவு பெரிய கலவரத்தைத் தூண்டி விட்டு அவர் அதற்கான எந்த ஒரு பின் விளைவையும் சந்திக்காமல் இருக்கிறார். எனவே, பிரிட்டன் அரசு நினைத்தால் அவரைக் கைது செய்ய முடியும் என்றும், அவரைக் கைது செய்து இங்கிலாந்திற்குக் கொண்டு வர வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை வலுப்பெற்று வருகிறது.

சவுத்போர்ட் பகுதியில் குழந்தைகளைக் கொன்றவனின் உண்மையான பெயர் ஆக்சல் ருடாகுபனா. இவனுக்கும் முஸ்லிம்களுக்கும் எந்த வழியிலும் சம்பந்தம் இல்லை .

இவன் ருவாண்டா வம்சாவளியைச் சார்ந்தவன். இந்த குற்றவாளி 17 வயது சிறுவன் என்பதால் பிரிட்டன் சட்டப்படி அவனுடைய உண்மையான பெயரைப் பத்திரிகைகள் வெளியிடக் கூடாது.

அதனால்தான் தொடக்கத்தில் அவனுடைய பெயர் வெளிவராமல் இருந்தது. இதைப் பயன்படுத்திக்கொண்ட வெள்ளை இனவாதிகள் அந்தச் சிறுவனைப் பற்றிய தவறான தகவல்களைப் பரப்பி ஒரு பெரும் கலவரத்தையே ஏற்படுத்திவிட்டனர். அதனால் நீதிமன்றமே அந்தப் சிறுவனின் உண்மையான அடையாளத்தை வெளிப்படுத்த அனுமதி வழங்கியது.

ஆனாலும் கலவரக்காரர்கள் ஓயாமல் தொடர்ந்து பதற்றமான சூழ்நிலையிலையே பிரிட்டனை வைத்து இருக்கின்றனர். கொல்லப்பட்ட, படுகாயமடைந்த குழந்தைகள் குறித்தெல்லாம் இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது என்பது தெளிவு. கலவரம் செய்ய வேண்டும் என்ற நோக்கில் தான் அவர்களின் மனநிலை உள்ளது. இவ்வாறு கொல்லப்பட்ட அப்பாவி குழந்தைகளுடைய உயிரிழப்பை தமது அரசியல் இலாபத்துக்காகப் பயன்படுத்துவது மிகவும் இழிவான ஒரு செயல். இது அந்தப் பிஞ்சுக் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதியும்கூட என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

கொலைச் சம்பவம் நடந்தது 29ஆம் தேதி. இந்த வெள்ளை இனவாதிகள் 30ஆம் தேதியே, அதாவது மறுநாளே தங்களுடைய ஆதரவாளர்கள் அனைவரையும் திரட்டிக்கொண்டு போராட்டம் எனக் கிளம்பிவிட்டனர். ஒரு பள்ளிவாசல் முன் திரண்டு தாக்குதல் நடத்தி அந்தப் பகுதியிலுள்ள கடைகளையெல்லாம் அடித்து உடைத்தனர். இவர்களை காவல்துறையினர் கட்டுப்படுத்த முயன்றும் முடியவில்லை.

இது நடந்து முடிந்த மறுநாள் முதல் இனவாதிகளுடைய போராட்டம் மற்ற பகுதிகளுக்கும் தீயாய்ப் பரவியது. அனைத்து இடங்களிலும் இவ்வாறான வன்முறைச் சம்பவங்கள் அரங்கேறின. இங்கிலாந்து வீதிகளில் “இங்கே பிற நாட்டவர்கள் குடியேற அனுமதிக்க மாட்டோம்” என்றெல்லாம் இந்த வலதுசாரி கலவரக்காரர்கள் முழங்கினர். இன்னும் பல இனவாத முழக்கங்களையும் எழுப்பினர்.

ஆகஸ்ட் 1 அன்று எந்தப் போராட்டமும் நடக்கவில்லை. ஆனால் அடுத்தடுத்த நாள்களில் பல பள்ளிவாசல்கள் இலக்காக்கப்பட்டன. ஒரு காவல் நிலையம் சூறையாடப்பட்டது. ஒரு கார் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இப்படியான சூழலில் இனவாதிகளுக்கு எதிரான போராட்டம் வெடித்ததைத் தொடர்ந்து போராட்டக்காரர்களுக்கும் கலவரக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ரோதர்ஹம் பகுதியில் இங்கிலாந்திற்குப் புகலிடம் தேடி வந்தவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் இனவாதிகளால் தாக்கப்பட்டது.

13 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த லண்டன் கலவரத்தை அடுத்து இப்போதுதான் இப்படியான ஒரு பெரிய கலவரம் பிரிட்டனில் ஏற்பட்டுள்ளது. பிரதமர் கியர் ஸ்டாமர் கலவரக்காரர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் பாயும் எனத் தெரிவித்தார். இங்கு நடப்பது ஒரு போராட்டமே இல்லை, இது வலதுசாரி குண்டர்களால் நடத்தப்படும் கலவரம் என்றும் வன்மையாகச் சாடினார்.

பொதுவாகவே மேற்கத்திய நாடுகளில் புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான ஒரு எதிர்மறை மனநிலை இருக்கிறது. நாட்டின் கலாச்சாரம், பொருளாதாரம் என அனைத்தையும் இவர்கள் அழிக்கிறார்கள் என்று இனவாதிகள் கருதுகின்றனர். இதையே தம் இனவாதத்திற்கான நியாயவாதமாகவும் அவர்கள் முன்வைக்கின்றனர்.



பிரிட்டனில் பொருளாதாரப் பிரச்னைகள், வேலையின்மை போன்றவை ஒரு பெரும் சிக்கல். அந்த நிலை உருவாகக் காரணம் புலம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்கள், ஆப்பிரிக்கர்கள் போன்றவர்கள்தாம் என்ற பொய்யான கருத்தை அவர்கள் பரப்புகின்றனர். உண்மையைச் சொன்னால், இனவாதிகளின் வெறுப்பு புலம்பெயர்ந்தோர் சம்பந்தப்பட்டது மட்டுமில்லை. இவர்களிடம் நிறவெறி, மதவெறியென அனைத்தும் ஒருசேர இருக்கிறது.

பிரிட்டன் போன்ற நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் ஓர் அத்தியாவசியத் தேவை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழிலாளர்கள், கல்வியாளர்கள், இன்னபிற ஆற்றலுடையவர்கள் தேவை. முக்கியமாக இளைஞர்கள் தேவை.

ஆனால், பிரிட்டன் போன்ற நாடுகளில் வயதானவர்கள் எண்ணிக்கைதான் அதிகம். இவ்வாறான சூழலில் புலப்பெயர்ந்த இளைஞர்கள் மூலமாக பிரிட்டன் பல வகையில் செழிப்படைகிறது. புலம்பெயர்ந்தோர் அரசுக்கு வரி செலுத்துகின்றனர். அந்த வரியில் ஒரு பகுதி முதியோர் நலனுக்காக ஒதுக்கப்படுகிறது. கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் என அனைத்துக்கும் புலம்பெயர்ந்தோர் பங்களிக்கின்றனர்.

மிக முக்கியமான கேள்வி என்னவென்றால் பிரிட்டன், அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் மற்ற மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களை, பொருளாதாரத்தை பெருமளவில் சுரண்டிக் கொழுத்துள்ளன. மக்களை அடிமைப்படுத்தியுள்ளன. மிகப் பெரிய நாசத்தையும் போரையும் மற்ற நாடுகளில் ஏற்படுத்தியிருக்கின்றன. இப்படியான சூழலில், மூன்றாம் உலக நாடுகளிலிருந்து வரக்கூடிய அகதிகள், புலம்பெயர்ந்தோர் மட்டும் ஏன் அவற்றுக்கு கசக்கின்றர் என்ற கேள்வி எழுகிறது.

பிரிட்டனின் வளர்ச்சியில் ஆப்பிரிக்கர்களும் , முஸ்லிம்களும் மிகப் பெரிய அளவில் பங்காற்றி இருக்கின்றனர். இவை அனைத்தையும் புறந்தள்ளிவிட்டு, அங்கேயே பல தலைமுறையாக வாழ்ந்துவரும் கறுப்பினத்தவர்களையும் பழுப்பு நிறத்தவர்களையும் எதிரியாகக் கட்டமைப்பது அபத்தமானது. அதாவது இந்திய வம்சாவளிகளுக்கு எதிரான மனநிலை அதிகரித்து வருவது மிகுந்த கவலைக்குரிய விடயமாகும்.

மேற்கு உலகிலும் மற்ற பல நாடுகளிலும் வலதுசாரித் தீவிரவாதம்தான் உண்மையான அச்சுறுத்தலாக உள்ளது. அரசியல், ஊடகம் என அனைத்துத் தளங்களிலும் இவர்கள்தாம் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இளைஞர்களை மூளைச் சலவை செய்து வன்முறையைத் தூண்டுகின்றனர். இதற்கு எதிராக உலகம் முழுவதும் பலமான குரல் எழ வேண்டும். அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகள் வலதுசாரித் தீவிரவாதத்தை தனிக் கவனமெடுத்து முறியடிக்க வேண்டும். இனவாதத்தையும், இஸ்லாமிய வெறுப்பையும் முற்றாக வேரறுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த நாடுகள் ‘உண்மையான வளர்ச்சி’யை நோக்கிச் செல்ல முடியும்.

தேசிய காவல்துறை தலைவர்கள் கவுன்சில் அதன் சமீபத்திய நடவடிக்கைகள் காரணமாக 1,024 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 575 பேர் இங்கிலாந்து முழுவதும் இந்த பாரதூரமான குற்ற செயல்களில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது . இதுவரையில் கைது செய்யப்பட்டவர்களில் லிவர்பூலில் நாசவேலையில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவரின் வயது 69 வயது என்பதையும் நாம் புரிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது.

இந்த வெறுப்பை தொடர்ந்து இனி வரும் நாட்களில் முஸ்லிம்களுக்கு எதிரான மற்றும் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான கலவரங்களைக் கையாள போதுமான போலீசார் தொடர்ந்து கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கூறினார்.

அதே சமயம் 400 க்கும் மேற்பட்டோர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர், 100 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த தீவிர குற்றங்களில் ஈடுபட்டு வந்தவர்களுக்கு எதிராக மிகவும் விரைவில் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கும் என எதிர்பார்ப்பதாக இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மர் கூறினார். இது போன்ற வன்முறைகளில் தங்களை ஈடுபடுத்தும் எவரும் சட்டத்தின் முழு வலிமையையும் இனி உணரப் போகிறார்கள்," என்று அவர் மிகவும் கடுமையாக எச்சரிக்கை விடுத்தார்.

அதே நேரத்தில் வெ ளிப்படையான நோக்கம் எதுவாக இருந்தாலும், இது போன்ற வன்முறைகள் எந்த வழியிலும் ஏற்புடையதாக இல்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் ஸ்டார்மெர் உறுதிபட தெரிவித்தார். இது போன்ற வன்முறை மற்றும் மசூதிகள் , முஸ்லிம் சமூகங்கள் மீதான தாக்குதல்களை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்" என்றும், காவல்துறை மற்றும் சிறைத் தலைவர்களுடனான அவசர கூட்டத்திற்குப் பிறகு பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மெர் கூறினார்.

இதுவரை இந்த கலவரங்களுக்கு காரணமாக இருந்த பல நூற்றுக்கணக்கான கலவரக்காரர்களைக் காவல்துறை கைது செய்துள்ளது. இனவெறி, இஸ்லாமிய வெறுப்பு, புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான வெறுப்பு, தீவிர தேசியவாதம் போன்றவையே இன்றைக்கு பிரிட்டன் பற்றி எரியக் காரணமாக அமைந்துள்ளது.

பிரிட்டனை உலுக்கிய புலம்பெயர்ந்தோருக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் கலவரங்களுக்குப் பிறகு, இந்த மாதம் (07-08-2024) இங்கிலாந்து முழுவதும் உள்ள நகரங்களின் வீதிகளில், அந்தக் கலவரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஆயிரக்கணக்கான 'இனவெறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள்' அமைதிப் பேரணிகளை நடத்தினர். மிகப் பெரிய அளவில் ஆன வன்மம் மற்றும் வெறுப்பின் காரணமாகவே இங்கிலாந்தில் உள்ள வலது சாரி சித்தாந்த தத்துவங்களின் மிரட்டல் நடவடிக்கைகளாக அமைந்துள்ளது.

இந்த கலவரத்தின் மூலம் புலம் பெயர்ந்த சமூகங்கள் மத்தியில் மிகப் பெரிய அளவில் ஆன அச்ச உணர்வை அவர்களால் ஏற்படுத்த முயற்சி செய்து அதில் அவர்கள் ஓரளவு வெற்றி பெற முடிந்தது என்பதே உண்மையாகும்.

வடக்கு லண்டன், பிரிஸ்டல் மற்றும் நியூகேஸில் உட்பட, புலம்பெயர்ந்தோருக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்பட்ட இடங்களில் இவர்கள் ஒன்றுகூடி பெரும்பாலும் அமைதியான முறையில் ஊர்வலம் சென்றனர்.அகதிகள் இங்கு வரவேற்கப்படுகிறார்கள்" என்று கோஷமிட்டவாறு இவர்கள் சென்றனர். கடந்த வார நிகழ்வுகளுக்கு பிறகு, மேலும் 100க்கும் மேற்பட்ட 'புலம்பெயர்ந்தோர் எதிர்ப்பு போராட்டங்கள்' நடக்கும் என எதிர்பார்க்கப்படுவதால், ஆயிரக்கணக்கான காவல்துறை அதிகாரிகள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிகழ்வுகளுக்கெல்லாம் தொடக்கப்புள்ளி, ஜுலை 29 அன்று சவுத்போர்ட்டில் மூன்று சிறுமிகளை கத்தியால் தாக்கி, கொலை செய்த நபர் 'ஒரு முஸ்லிம் என்றும், அவர் படகு மூலம் பிரிட்டனுக்குள் நுழைந்த அகதி' என்றும் சமூக ஊடகங்களில் வதந்திகள் பரவியதே ஆகும். இதன் தொடர்ச்சியாக பிரிட்டனில் கலவரங்கள் வெடித்தன. சுருக்கமாக சொல்வதென்றால் இது ஒரு முஸ்லிம் சமூகம் சார்ந்த வெறுப்பின் காரணமாகவே இது போன்ற கலவரங்களை நடத்தி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மசூதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் வசிக்கும் விடுதிகள், இந்த கலவரங்களின் போது குறிவைத்து தாக்கப்பட்டன. சில கடைகள் எரிக்கப்பட்டு, சூறையாடப்பட்டன.

இந்த கலவரங்கள் இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தில் உள்ள நகரங்களில் பரவியுள்ளது. ஆன்லைனில் தவறான தகவல், தீவிர வலதுசாரிகள் மற்றும் குடியேற்ற எதிர்ப்பு உணர்வு ஆகியவற்றால் வன்முறை தூண்டப்பட்டு அரங்கேறியது. பெரும்பாலான முஸ்லிம்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் முஸ்லிம்கள் எதிரான மனநிலையில் தான் இது போன்ற கலவரங்களை நாம் அடையாளம் காண கூடியதாக இருக்கிறது.

இந்த சம்பவத்தில் சவுத்போர்ட் கத்தி குத்து நிகழ்வுக்கு பிறகு, இந்த சம்பவத்தில் குற்றம் செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒரு படகில் சட்டவிரோதமாக பிரிட்டனுக்குள் வந்த புகலிடக் கோரிக்கையாளர் என்று சமூக ஊடகங்களில் பொய்யான தகவல் பரவியது. அவர் முஸ்லிம் என்றும் ஆதாரமற்ற வதந்திகள் பரவின.

வழக்கறிஞர்களின் நிறுவனங்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களின் மீது தாக்குதல் நடக்கும் என வாட்சாப் குழுக்களில் எச்சரிக்கைகள் பகிரப்பட்டதால், குடியேற்றம் தொடர்பான வழக்குகளை கையாளும் வழக்கறிஞர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு காவல்துறையினரால் அறிவுறுத்தப்பட்டனர்.

அதே சமயம் வழக்கறிஞர்களின் நிறுவனங்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களின் மீது தாக்குதல் நடக்கும் என வாட்சாப் குழுக்களில் எச்சரிக்கைகள் பகிரப்பட்டதால், குடியேற்றம் தொடர்பான வழக்குகளை கையாளும் வழக்கறிஞர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யுமாறு காவல்துறையினரால் அறிவுறுத்தப்பட்டனர்.மசூதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் வசிக்கும் விடுதிகள், இந்த கலவரங்களின் போது குறிவைத்து தாக்கப்பட்டன. சில கடைகள் எரிக்கப்பட்டு,

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

## கத்தார்...
(6ம் பக்கத் தொடர்ச்சி)

சூறையாடப்பட்டன.2011 ல் நடந்த கலவரங்களுக்குப் பிறகு காணப்படாத அளவுக்கு அழிவுக் காட்சிகளை இந்த கலவரங்கள் பின் காண முடிந்ததாக பலர் கூறுகிறார்கள்.

மோஸ்சைட் (ஆழளள ஸுனைந) என்னும் பகுதியில் ஆசியா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்காவிலிருந்து அதிகளவிலான முஸ்லிம் சமூகத்தினர் வசிக்கின்றனர். அப்பகுதியில் வேலை செய்யும் மற்றும் வசிக்கும் பலர் "எந்த பிரச்னையும் இல்லை, பாதுகாப்பாக உணர்கிறோம் " என்று கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் அங்கு நடக்கும் அடுத்தடுத்த நிகழ்வுகளை கவலையுடன் கண்காணித்து வருகின்றனர். ஏனெனில் தாக்குதல் எந்த நேரத்திலும் நடைபெறலாம் என்கிற அச்ச உணர்வு தான் இதற்கு காரணம் என்று பலர் கூறுகிறார்கள். அயலகத்தில் இருந்து குடியேறியவர்கள் எதிராக நடைபெற்ற இந்த கலவரங்கள் மற்றும் "சமீபத்திய நிகழ்வுகள் நாட்டு மக்களின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பதே பெரும்பாலான மக்களின் கருத்தாக இருக்கிறது .முஸ்லிம்கள் மசூதிகள், வணிகங்கள் மற்றும் வீடுகளைப் பாதுகாக்க முஸ்லிம் சமூகத்தின் அழைப்பு குறித்தும் பல முஸ்லிம்கள் மிகவும் வருத்தப்படுகிறார் – "தேவைப்பட்டால் வன்முறையைப் பயன்படுத்துங்கள்" என்னும் பலரை மிகவும் கவலையில் ஆழ்த்தியுள்ளது."ஆனால் இது போன்ற வன்முறை நடவடிக்கைகளில் பல்வேறு இஸ்லாமியர்கள் உடன்பாடு இல்லை என்பதே உண்மையாகும். அதேநேரத்தில் முஸ்லிம்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் ஏற்கெனவே உறுதியளித்துள்ளது. உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்தும் நடக்க வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடக இருக்கிறது. பல முஸ்லிம்கள் தங்கள் மசூதிகளைப் பாதுகாக்க தங்களுக்கு உரிமை உள்ளது என்று உறுதியாக நம்புகின்றனர்.

மேலும் தமது நம்பிக்கை சுதந்திரத்திற்கான உரிமையை நாங்கள் பாதுகாக்க வேண்டும், ஆனால் இதை நாமாக செய்தால், நம்மை பயங்கரவாதிகளாக முத்திரை குத்துவார்கள். அதற்கு நாம் வழிவகுக்கக் கூடாது." என்கிறார்கள் பல முஸ்லிம்கள். அவர்கள் இங்கிலாந்து தேசத்தை பெரிதும் விரும்புகின்றனர்.இந்த கலவரத்தால் இளைய தலைமுறையினருக்கும் மிகப் பெரிய அளவிலான பாதிப்பு உள்ளது என்கிற கவலைக்குரிய செய்தியை பல முஸ்லிம்கள் தெரிவித்து வருகின்றனர்.

பல முஸ்லிம்கள் இங்கிலாந்து பூர்வ குடிகள் மிகவும் அன்பானவர்கள். அவர்கள் உதவும் பண்பு கொண்டவர்கள். அவர்கள் என் மொழி தடையை உடைக்க உதவுகிறார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் நான் நம்பியதை விட இங்கு நடக்கும் செயல்கள் மிகவும் மாறுபட்ட ஒன்றாகவே இருக்கிறது என்று பல முஸ்லிம்கள் தங்கள் தரப்பில் அனுபவங்களை சர்வதேச மீடியாக்களில் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். இஸ்லாமிய மார்க்கம் மற்றும் அதனை பின்பற்றும் அனைவரும் கருத்தியல் ரீதியாக மோசமான நடவடிக்கைகள் கொண்டவர்களாகவே மேற்கத்திய நாடுகளில் சித்திரிக்கும் வேலைதான் இது போன்ற தவறான கலவரங்களுக்கு மூல காரணமாக அமைந்து விட்டது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் வெறுப்பை பரப்ப விரும்புபவர்களால் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தவறான தகவல்களால் இந்த கலவரம் தூண்டப்பட்டது என்பது தான்" பெரும்பாலான மக்களின் அதிகார பூர்வ கருத்தாக இருக்கிறது. அதே நேரத்தில் ஐரோப்பிய சமூகம் இது போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டதாக நாம் பொதுவாக அறிந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும்

சமீபத்திய இனவெறி நிகழ்வுகளைப் பற்றி கேள்விப்பட்டபோது தாங்கள் மிகவும் அதிர்ச்சியடைந்ததாக பலர் கூறுகிறார்கள்.

நாங்கள் இங்கு இனவெறியைக் கண்டதில்லை. இந்த செய்தியைப் பற்றி முதலில் கேள்விப்பட்டபோது நாங்கள் கொஞ்சம் பயந்தோம், இது எங்களுக்கு அசாதாரணமான ஒன்று, ஏனென்றால் நாங்கள் இப்படி நிகழ்வை பார்ப்பது அல்லது கேட்பது இதுவே முதல் முறை." என்று பல முஸ்லிம்கள் வாய்மொழியாக கூறுவதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது . நிச்சயமாக இந்த கலவரங்களுக்கு காரணம் இங்கிலாந்து நலன்களை தவிர்த்து மதவாதம் சார்ந்த செயல்பாடுகள் இதற்கு பின்னால் இருக்க அதிகம் வாய்ப்பு உள்ளது. ஆசிய நாடுகளில் இருந்து பெரும்பாலான மக்கள் இங்கிலாந்து முழுவதும் குடியேறி வாழ்ந்து வருகின்ற நிலையில் முஸ்லிம்கள் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட நிலையில் பல்வேறு தேசங்களில் இருந்து குடியேறியவர்கள் இஸ்லாம் என்கிற அடிப்படையில் ஒருங்கிணைந்த நிலையில் இங்கு வாழ்வது பலருக்கு மிகவும் மன வெறுப்பை ஏற்படுத்தி உள்ளது . அதேநேரத்தில் கிறித்தவ சமய கோட்பாடுகளில் நம்பிக்கை அற்ற நிலையில் பலர் இஸ்லாமிய சித்தாந்தத்தின் அடிப்படையில் வாழ முற்படும் கள சூழல் தற்போது இங்கிலாந்தில் அதிகரித்து வருவதை காண முடிகிறது. பல தேவாலயங்கள் விற்பனை செய்யப்படும் நிலையில் அவைகள் முஸ்லிம்கள் பணம் கொடுத்து வாங்கி இஸ்லாமிய கலாச்சார மையமாக மாற்றி பலருக்கு போதனைகளை செய்து வருவது பலருக்கு அடிவயிற்றில் புளியை கரைப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்படுகிறது . இது போன்ற தவறான புரிதல் மற்றும் வெறுப்பின் உச்சகட்டம் தான் இது போன்ற தூண்டி விடப்பட்ட கலவரங்களுக்கு மூல காரணமாக இருக்கலாம் என்று நாம் நம்புவதற்கு அதிக காரணம் இருப்பதை எந்த நிலையிலும் தவிர்த்து விட முடியாது என்பதே நிதர்சனமான உண்மையாகும்.....!

# முஸ்லிம் லீக் வாலிப முன்னணி ஏற்பாட்டில் பலஸ்தீன் தூதுவருக்கு கௌரவம்

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

*இலங்கைக்கான பலஸ்தீன தூதுவர் டொக்டர் சுஹைர் ஹம்டல்லாஹ் டார் ஸெய்ட் தனது பதவிக்காலம் முடிவடைந்து தனது நாட்டுக்கு செல்ல இருப்பதை முன்னிட்டு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மளனத்தின் ஏற்பாட்டில் தூதுவரை கௌரவிக்கும் பிரியாவிடை வைபவம் ஒன்று சம்மேளனத்தின் தலைவர் சாம் நவாஸ் தலைமையில் நேற்று (19) கொள்ளுப்பிட்டி மென்டரினா ஹோட்டலில் இடம் பெற்றது.*







*இதன்போது வரவேற்புரையை சம்மேளனத்தின் தலைவர் சாம் நாவஸ் நிகழ்த்தினார். இலங்கை பலஸ்தீன் உறவுகள் தொடர்பான விசேட உரைகளை இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டின் இணைத்தலைவர் பிமல் ரத்நாயக்காவும், ஊடகவியலாளரும் சமுகசேவையாளருமான மஹிந்த கட்டகே ஆகியோர் வழங்கினர். பிரதம அதிதியான பலஸ்தீன தூதுவர் டொக்டர் சுஹைர் ஹம்டல்லாஹ் டார் ஸெய்ட் இலங்கைக்கான தனது சேவை தொடர்பாகவும் இலங்கை மக்கள் தமது நாட்டு மக்கள் மீது வைத்துள்ள அன்பு, கருணை தொடர்பாகவும் தமது நாட்டு மக்கள் அநியாயமாக கொள்ளப்படுவதை நினைத்து கண்ணீர்மல்க தனது உரையை நிகழ்த்தினர். நன்றி உரையை சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் மெஹமட் அஜ்வடீன் வழங்கினார்.*




# கற்றல் செயற்பாடுகளை பாதிக்கும் எதிர்மறையான வீட்டுச் சூழல்

பிள்ளைகளின் கற்றலுக்கும் வீட்டுச் சூழலுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. வீட்டுச் சூழல் எந்தளவு தூரம் கற்றலுக்கு உகந்ததாக, ஆரோக்கியமானதாக, அமையுமோ அந்தளவு தூரம் பிள்ளையின் கற்றலில் மேம்பாடும் விருத்தியும் ஏற்படும். கற்றல் தத்தமது நடைமுறை வாழ்வோடு தொடர்பு படுகின்ற இடமாக வீடு அமைந்து காணப்படுகின்றது. மாணவன் என்னென்ன விடயங்களை பாடசாலையில் கற்கின்றானோ அவற்றை வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான களமாக வீடு அமைகிறது. கல்வி எந்தளவு தூரம் வாழ்க்கைக்கு உதவுகின்றது, பயனளிக்கின்றது என்பதனையும் வீட்டுச் சூழலில் வைத்து அவனால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

அதே நேரம் கற்றலின் மீது, பாடசாலையின் மீது, ஆசிரியர்கள் மீது, பாடல்களின் மீது அதீத அதிருப்தியும் வெறுப்பும் ஏற்படவும் வீட்டுச் சூழல் நிச்சயம் காரணமாக அமையும். கற்றலுக்கு எந்த வகையிலும் உதவி ஒத்தாசை புரியாததாக வீட்டுச் சூழல் வீட்டிலே இருக்கக்கூடிய பெற்றோர் உறவுகள் காணப்பட்டால் பிள்ளையின் கற்றல் நிச்சயம் பாதிக்கப்படும். கற்றலின் மீது வெறுப்பு, அதிருப்தி ஏற்படும். கற்றலை கடமைக்காக, காலம் கடத்துவதற்காக கற்கக்கூடிய ஒரு நிலை உருவாகும்.

பாடசாலைக்கு தொடராக விட்டு விட்டு வரக்கூடிய நிலைமை, அல்லது பாடங்களில் கவனம் செலுத்தாத ஒரு தோற்றப்பாடு, உண்மையிலேயே கவனம் செலுத்தாத, செலுத்த முடியாது ஒரு நிலை கூட ஏற்பட முடியும்.

பெற்றோர் கல்விக்கு, கற்றல் செயல்பாடுகளுக்கு உகந்ததாக எந்த அளவு தூரம் வீட்டுச்சூழலை தரமானதாக, ஆரோக்கியமானதாக, அமைதியானதாக, உகந்ததாக அமைத்துக் கொள்வார்களோ, அமைத்துக் கொடுப்பார்களோ அந்த அளவு தூரம் பிள்ளைகள் வீட்டில் கற்கக்கூடிய, சுயமாக கற்றலில் ஈடுபடக்கூடிய, தேடலும் ஆர்வமும் கொண்ட ஒரு நிலையை கண்டு கொள்ளலாம்.

வீட்டுச் சூழல் எப்பொழுதும் பாதுகாப்பானதாக பிள்ளையின் கற்றலுக்கு ஊக்கமளிக்கக் கூடியதாக, ஒத்தாசை புரியக்கூடியதாக, வழிகாட்டக் கூடியதாக அமைய வேண்டும்.

பிள்ளைகளை ஊக்குவிக்க கூடிய முதற்தரப்பினராக பெற்றோர்களே காணப்படுகின்றார்கள். எனவே பிள்ளையின் உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் போன்றன வீட்டுச் சூழலின் நடைமுறைகளை வைத்தே தீர்மானிக்கப்படும்.

கற்றலுக்கு உதவி ஒத்தாசை புரியக்கூடியதாக வீட்டுச் சூழல் அமையாத பட்சத்திலே ஆரோக்கியமான, தரமான கற்றல் நிகழாது. தமக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்களை செய்து கொள்ளும் பெற்றோர்கள், பிள்ளையின் கற்றலிலேயே கரிசனை, கவனிப்பு, கண்காணிப்பு காட்டாத பெற்றோர்கள், பிள்ளைகளின் முன்னால் சண்டை பிடிக்கக்கூடிய பெற்றோர்கள், பிள்ளைகளின் முன்னால் போதைப் பொருள்களை பாவிக்கக்கூடிய பெற்றோர்கள், பிள்ளைகளின் முன்னால் எந்த நேரமும் தொலைக்காட்சியோடும், திறன் பேசிகளோடும் காலத்தை கடத்துகின்ற பெற்றோர்கள் உள்ள வீட்டிலே பிள்ளைகள் நிச்சயம் படிப்பிலே தனது முழு மொத்த கவனத்தையும் செலுத்தி கற்க முடியாத ஆபத்தான ஒரு நிலை ஏற்படும்.

அதேபோன்று பிள்ளைகளுக்கு அளவு கடந்த வீட்டுச் சுமைகளை கஷ்டங்களை பாரங்களை பொறுப்புக்களை கொடுத்து அழுத்துகின்ற பொழுதும் கூட கற்றலிலே ஒரு விதமான வெறுப்பும் உருவாகி விடும்.

சிறந்த கற்றலுக்கு ஆரோக்கியமான உணவும் அவசியமாகும். அது போலவே ஆரோக்கியமான மனமும் அவசியமாகும். இந்த இரண்டையும் முழுமையாக கொடுக்க வேண்டியவர்கள், தார்மீக கடப்பாடு கொண்டவர்கள் பெற்றோர்களாக தான் இருக்கின்றார்கள்.

எனவே பிள்ளையின் கற்றலில் ஆர்வமும் ஆசையும் ஈடுபாடும் கொண்ட பெற்றோர்கள் நிச்சயம் பிள்ளையின் பாடசாலையோடு பிள்ளையின் பாட ஆசிரியர்களோடு பிள்ளையின் வகுப்பாசிரியரோடு நேரடியாக தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணி வரக்கூடிய நிலைமையில் இருப்பார்கள். வீட்டுக்கும் பாடசாலைக்கும் இடையிலான இணைப்பு பாலமாக பெற்றோர்கள் இருக்கின்ற பட்சத்தில் தான் மாணவர்களை சமூகமயமாக்கவும் முடியுமாக இருக்கும்.

கற்றல் மீதும் பாடசாலை மீதும் ஆசிரியர்கள் மீதும் ஈடுபாடும் மதிப்பும் கௌரவமும் ஏற்படுவதற்கு இந்த பெற்றோர் வழியான இணைப்பு மற்றும் உறவுக் கூடான தொடர்பு நிச்சயம் களம் அமைக்கும்.

பெற்றோர்கள் பிள்ளைகளின் கற்றல் நிலைகளில் எந்தவிதமான கவனமும் கரிசனையும் எடுக்காது பாடசாலையோடு இருக்கின்ற அல்லது இருக்க வேண்டிய தொடர்புகளை முற்றும் முழுதாக அறுத்துக் கொண்டிருந்தால் பிள்ளையின் கற்றல் அதல பாதாளத்தில் நிச்சயம் விழுந்துவிடும். எனவே பிள்ளையின் கற்றல் மேம்பாட்டுக்கு பாடசாலைக்கு அடுத்தபடியாக அல்லது பாடசாலையின் கற்றல் செயற்பாட்டுக்கு மென்மேலும் உத்வேகம் அளிக்கக் கூடியதாக அதனை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருக்கக்கூடியதாக வீட்டுச் சூழலும் வீட்டின் அங்கத்தவர்களும் இருக்கும் பட்சத்தில் நிச்சயம் பிள்ளையின் கல்வி ஆரோக்கியமானதாக தரமானதாக இலக்குமாயப்பட்டதாக இருக்கும். மாற்றமாக அமையும் பட்சத்தில் பிள்ளையின் கற்றல் பாதிக்கப்படும். பிள்ளையின் எதிர்காலமும் நிச்சயம் பாதிக்கப்படும்.

# ஜனாதிபதித் தேர்தல் வெற்றி; அநுரகுமாரவின் தப்புக் கணக்கு



எம்.எஸ். அமீர் ஹுசைன்



2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணம் செலுத்தி இருந்தாலும் ஒருவர் வேட்புமனு தாக்கல் செய்ய வரலில்லை. ஏனைய 39 பேரும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். இவ்வாறு வேட்பு மனு தாக்கல் செய்துள்ள ஜனாதிபதி வேட்பாளர்களுள் கடந்த இரண்டு வருடங்களாக ஜனாதிபதியாக இருந்து வரும் சுயேட்சை குழுவில் போட்டியிடும் ரனில் விக்கிரமசிங்கா, எதிர்க்கட்சி தலைவராக இருந்து வரும் ஐக்கிய மக்கள் சக்தியான சமகி ஜனபலவேகய கட்சியின் சார்பாக போட்டியிடும் சஜித் பிரேமதாசா, பாராளுமன்றத்தில் 03 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ள கடந்த பொதுத் தேர்தலில் சுமார் 04 இலட்சம் அளவிலான வாக்குகளைப் பெற்றுள்ள ஜே.வி.பி. கட்சியின் தற்போதைய மறு வடிவமாக திசை காட்டி சின்னத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கா, மஹிந்த ராஜபக்ஷவிக் குடும்ப கட்சியான பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷவின் வாரிசான மொட்டு சின்னத்தில் போட்டியிடும் நாமல் ராஜபக்ஷ உட்பட 39 பேர் அடங்குகின்றனர்.

ஏனைய வேட்பாளர்களுள் குறிப்பிடத் தக்கவர்களாக மவ்பிம ஜனதா பக்ஷ என்ற தாய் நாட்டின் மக்கள் கட்சியின் சார்பில் திலிப் ஜயவீர, ஏனைய கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் சார்பாக போட்டியிடும் சரத் பொன்சேகா, விஜேதாச ராஜபக்ஷ, அக்மீமன தயாரத்ன தேரர், சட்டத்தரணி நுவன் போபகே, முன்னாள் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவராக இருந்த ஜனக ரத்நாயகா உட்பட பல வேட்பாளர்கள் களத்தில் இறங்கி உள்ளனர். இந்த 39 வேட்பா ளர்களுள் ஒவ்வொருவரும் நினைப்பது தாமே இந்த நாட்டின் ஜனாதிபதியாக வந்து நாட்டை ஆட்சி செய்ய தகுதியானவர் என்பதாகும்.

இருந்தாலும் இந்தளவுக்கு ஜனாதிபதி அபேட்சகர்கள் களம் இறங்க காரணம் போனால் போகட்டும் என்று 70 இலட்சம் ரூபாவை கட்டுப்பணமாக செலுத்தி விட்டு பிரபல்யம் அடைவது மட்டுமல்லமாமல் இறுதி நேரத்தில் பிரதான வேட்பாளர்களாக இருக்கும் ரனில், சஜித் அல்லது அநுரகுமார திசாநாயக்கா ஆகிய மூவரில் யாருக்காவது ஒருவருக்கு முக்கடித்து ஆதரவளிப்பதாக கூறி பணத்தையும் வாங்கிக் கொண்டு பதவிக்கு வந்தால் பிரதான பதவி ஒன்றையும் வழங்க வேண்டும் என்று பேரம் பேசி அவருக்கே ஆதரவு வழங்குவதாக கூறி போட்டியில் இருந்து வாபஸ் பெறுவது மறைமுக திட்டங்களாகும். ஏனெனில் கடந்த காலத்தில் இதுபோன்ற ஏராளமான அனுபவங்கள் உள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் ரனில் விக்கிரமசிங்காவை ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதை தடுக்கும் வகையில் தடை உத்தரவு பிறப்பிக்க கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டி ருக்கின்றது. இந்த மனுவை பிலயந்தலையை சேர்ந்த சட்டத்தரணி சான் ரணசூரிய என்பவர் 2024.08.14 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக இருந்துகொண்டு உயர் நீதிமன்றத்தின் உத்தர வுக்கமைய பொலீஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் வெற்றிடத்திற்கு பதில் பொலீஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்காமை, உயர் நீதிமன்ற நீதியரசர் களை நியமித்தல் உட்பட பல விடயங்களில் அரசியல் அமைப்பை மீறி உள்ளார் என்றும் தொடர்ந்தும் இவர் ஜனாதிபதியாக வந்தால் மேலும் மக்கள் பாதிக் கப்படுவார்கள் என்பதால் ரனிலை ஜனாதிபதியாக போட்டியிடுவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. ஆனாலும் ரனில் விக்கிரமசிங்கா சுயாதீன வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு மீதான விசாரணைக்கு நாள் குறிப்பிடப்படவில்லை.

ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இனி மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பதே பிரதான கேள்வியாகும். ஜனாதிபதி தேர்தலுக்கு எஞ்சி உள்ள நாட்களில் மக்களின் இதயங்கள் படபடக்க ஆரம்பித்திருக்கின்றன. யார் இந்த நாட்டை அடுத்து வரும் 05 வருடங்களுக்கு ஆட்சி செய்வதற்கு தகுதியானவர், அதற்கு எப்படிப்பட்டவரை தெரிவு செய்வது, போட்டியிடும் 39 வேட்பாளர்களில் யார் ஜனாதிபதியாக வர பொருத்தமானவர் என்று சிந்திக்கும் போது இதயத் துடிப்பு மேலும் அதிகரிக்கலாம்.

அதே நேரம் 2024.08.19 ஆம் திகதி செய்தியாளர் மாநாடு நடத்திய ஜே.வி.பி.யின் ஜனரிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்காக அவரே ஜனாதிபதியாக வருவது உறுதி என்றம் செல்லுபடியாகும் வாக்குகளில் 51 வீதத்தை அல்லது 01 கோடிக்கு உட்பட வாக்குகளை அவர் பெறுவது உறுதி என்று கணக்கு போட்டிருப்பதாக அறிவித்தார். அதற்காக சில கணிப்பீடகள் பற்றியும் குறிப்பிட்டார். குறிப்பாக இம்முறை வேறு தெரிவு இல்லாமல் நாட்டின் மொத்த வாக்காளர்களும் சமூக உடமைவாத சோசலி மாக்சிச ஜே.வி.பி. யின் வேட்பாளரை ஆதரித்து வாக்களிப்பார்கள் என்பது அவரது கணிப்பீடு. ஒவ்வொரு வேட்பாளரும் இப்படித்தான் தமக்கு சாதகமான கணிப்பீடகளை முன்வைத்து மக்கள் மனங்களை திசை திருப்ப இயலுமான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓரளவுக்கு யாரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என்ற ஒரு அரசியல் தெளிவு இருந்தாலும் 1990 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்த தற்போது 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களாக இருப்பவர் களுக்கு இந்த தெளிவு இல்லை. அதனால் இத்தகைய இளைஞர்களாக உள்ள வர்களை எடுத்துக்கொண்டால் சுமார் 20 இலட்சம் அளவிலான வாக்காளர்கள் உள்ளனர். இந்த வாக்காளர்கள் எந்த பக்கம் திரும்புகின்றார்களோ அந்த வாக்குகளை மிதக்கும் வாக்குகள் என்று கூறலாம்.

இத்தகையவர்கள் பெரும்பாலும் ஜே.வி. பி. யின் மறு வடிவமான தேசிய மக்கள் சக்தியை அல்லது ஜாதிக ஜனபலவேகய கட்சியை ஆதரிக்கும் வகையில் அநுரகுமார திசாநாயக்காவுக்கு வாக்களிப்பதை தெரிவாக கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. ஆனாலும் இந்த தேசிய மக்கள் சக்தியான ஜே.வி. பி இந்ந நாட்டில் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் என்ன செய்தது, அதே போன்று 1989 மற்றும் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இதே ஜே.வி. பி. இந்த நாட்டில் எப்படிப்பட்ட நாசகார நடவடிக்கைகளை மேற்கொண்டது? எந்தளவுக்கு அரச பொதுச் சொத்துக்களை தீக்கிரையாக்கியது அழித்தது, பாடுகொலைகள், கொல்லைகள் புரிந்தது பொதுமக்களுக்கு துன்பங்களை செய்தது போன்ற பிற்பட்ட கால கசப்பான வரலாற்றை இந்த மிதக்கும் வாக்குகளான 1990 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்த 35 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தெரியாது.

அத்துடன் இதே ஜே.வி.பியின் அரசியல், பொருளாதார சிந்தனை என்ன? இப்போது பழைய செயற்பாடுகளை மறப்பதற்காக பெயரை மாற்றியமைத்து தேசிய மக்கள் சக்தி என்று மாற்றம் செய்திருந்தாலும் அதன் சமூக உடமைவாத சோசலிச, மாக்சிச சிந்தனை எவ்வாறு இந்த நாட்டிற்கு பொருந்தும், இந்த கொள்கையாலும் சிந்தனையாலும் ஒரு தேசத்தை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப முடியுமா? முக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியுமா? அதன் பொருளாதார கொள்கையின் பின்புலம் எப்படிப்பட்டது என்றெல்லாம் இந்த இளம் வாக்காளர்கள் அறிந்து வைப்பதற்கு வாய்ப்பில்லை. வெறுமனே கடந்த 75 வருடங்களாக ஆட்சி செய்தவர்கள் நாட்டை நாசமாக்கினார்கள், பாராளு மன்றத்தில் இருக்கின்ற 225 பேர்களும் திருடர்கள் என்றெல்லாம் ஜனாதிபதி அபேட்சகரும் ஜே.வி. பி.யின் தலைவருமான அநுர குமார திசாநாயக்காக கூறி வருகின்ற கதைகளை நம்பி இருக்கின்றனர்.

இந்த நாட்டிற்கு 75 வருட கால சாபம் என்றால் இந்த 75 வருடங்களும் 400 கிராம் பால்மா பெக்கட்ட 1020 ருபாவுக்கு இருந்ததா? அரிசி ஒரு கிலோ 250 – 340 ரூபாவுக்கு இருந்ததா, பெற்றோல் 344 ரூபாவாக இருந்ததா என்றெல்லாம் சிந்திக்கும் ஆற்றல் இல்லாமல் தர்க்க ரீதியாக வினா எழுப்பாமல் வெறுமனே வாய் வாாத்தையாக சொல்வதை 225 பேரும் திருடர்கள், 75 வருட கால சாபம் என்று நம்பி புதிய தலைமைத்துவம் தேவை என்ற அடிப்படையில் வாக்களிக்க தயாராகி இருக்கின்றனர். இந்த அநுரகுமார திசாநாயக்காவின் ஜே.வி. பி. யான தேசிய மக்கள் சக்தியானது திறந்த பொருளாதாரத்தினதும் மேற்குலகத்தினதும் எதிரியாகும். ஆனால் இப்போது கனடா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுக்கு அநுர விஜயங்களை மேற்கொண்டுவிட்டு அதன் அரசியல் பொருளாதார மற்றும் வெளிநாட்டு கொள்கைகளில் மாற்றத்தை கடைபிடிப்பது போன்று காட்டிக்கொள்ள முற்படுகின்றது.

அவ்வாறே 75 வருட கால சாபம் என்ற விடயத்தை அல்லது 225 பேரும் திருடர்கள் என்று தர்க்க ரீதியாக நிரூபிக்க எந்த ஆதாரங்களும் இல்லை. அப்படியாக இருந்தால் 75 வருடங்களாக பொருளாதாரம் இன்று இருப்பது போன்று அதள பாதாளத்தில் விழுந்ததாக இருந்திருக்க வேண்டும். நாடு எந்தவிதமான முன்னேற்றங்களையும் அபிவிருத்தியையும் கண்டிருக்க முடியாது. மக்களின் வாழ்க்கையில் பொருளாதார முன்னேற்றமும் சுபீட்சமும் ஏற்பட்டிருக்க முடியாது. அதே போன்று 225 பேரும் திருடர்கள் என்றால் இதே அநுரகுமார திசாநாயக்காக கடந்த 05 வருடங்களுக்கு மேலாக இதே ஜே.வி. பியை வழிநடத்தி வருகின்றார். 225 பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவரையாவது தகுந்த ஆதாரங்களை தேடி கண்டு பிடித்து ஊழலில் ஈடபட்டாவர் என்ற அடிப்படையில் நிரூபிக்கும் வகையில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து சட்டத்தின் முன் நிறத்தி தண்டனை வாங்கி கொடுத்திருக்க முடியும். மஹிந்த குடும்பம் நாட்டை சூரையாடியதாக குற்றம் சுமத்தப்படுகின்றது.

அந்த குடும்பத்தில் இருந்து ஒருவரையாவது அவர்களது திருட்டை நிரூபிக்க ஆதாரங்களை சமர்ப்பித்து வழக்கு தொடுத்திருக்கலாம். இதுவரையில் வெறும் மேடைப்பேச்சுக்காளக சொல்லி வரும் இந்த ஜே.வி.பி. யின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கா ஊழலில் ஈடுபட்டதாக கூறம் எந்த ஒரு உறுப்பினருக்கும் அதிகாரிக்கும் எதிராக ஏன் சட்ட நடவடிக்கை எடுக்க முற்படவில்லை என்ற கேள்வி எழுகின்றது. குற்றம் சுமத்தி மக்களை தவறான வழிநடத்தலுக்கு முற்படாமல் குறைந்தபட்சம் மஹிந்த குடும்பம் ஊழல் புரிந்ததாக கூறும் அநுர கடந்த ஐந்து வருட காலப்பகுதிக்குள் ஒருவரையாவது சட்டத்தின் முன் நிறுத்த திராணி அற்றதாக இருந்து வரும் நிலையில் ஆட்சிக்கு வந்த பின்னரா அதை செய்வது. அதுமட்டுமல்லாமல் ஏற்கனவே இந்த சொசலிச சமூக உடமைவாத சிந்தனை ஒருபோதும் மதத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இவர்கள் இப்போது கூடுதலாக முஸ்லிம்களை பற்றி பேசுகின்றனர். கடந்த சில வருடங்களாக முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட போது அதனை சாதகமாக பயன்படுத்தி குரல் எழுப்பியமை மற்றும் ஒரு சில இஸ்லமிய மத பக்தர்கள் இணைந்து அநரவின் பாதைதான் சரியானது என்று நினைத்து பிரச்சாரப் பணிகளில் இறங்கி முஸ்லிம்களுக்கு புதிய அரசியல் பாடம் புகட்டி வருகின்றனர்.

ஆனால் இந்த போக்குகளின் யதார்த்தம் என்னவென்பதை இவர்களால் இன்னும் சரியாக உணர முடிவதில்லை. ஆனாலும் இதே அநுர குமார திசாநாயக்காக, சுனில் ஹந்துன் ஹெட்டி ஆகியோர் உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல் நடந்த காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களில் பங்குபற்றி முஸ்லிம் பெண்களின் கருவரைகளில்தான்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...

## கத்தார்...
(6ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாட்டை அழிக்கும் இஸ்லாமிய பயங்கரவாத, அடிப்படைவாத சிசுக்கள் வளர்வதாக சுட்டிக்காட்டி பேசியவர்கள். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இஸ்லாமிய பயங்கரவாதத்தை வளர்த்து அதில் குளிர்காய்பவர்கள் என்று அன்றைய நிலைமைகளை முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு எதிராக திசை திருப்பியவர்கள். பிற்காலத்தில் இந்த தேர்தலை இலக்கு வைத்து முஸ்லிம் சமூகத்தின் அனுதாபிகளாக மாறியவர்கள் என்பது பின்னால் போகும் அல்லது பிரசாரம் செய்யும் மௌலவி மார்களுக்கு தெரியாது.

அதனால் ஜே.வி.பியின் பின்னால் அணி திரளும் இளம் வாக்காளர்கள் சரியான முறையில் கடந்த கால வரலாற்றை புரட்டி பார்க்க வேண்டும். உணர்ச்சியூட்டும் பேச்சுக்களுக்கு மயங்கி வாக்களித்தால் அதனால் தக்கு தாமே தீ மூட்டிக்கொண்டு தற்கொலை செய்துகொள்வதற்கு சமமானதாகவே அமையலாம். அவ்வாறே ஏனைய வேட்பாளர்கள் குறித்தும் சிந்திக்க வேண்டி இருக்கின்றது. இந்நிலையில் பொதுஜன பெரமுனவின் மடியில் இருந்த பாராளுமன்ற உறுப்பி னர்கள் புதிய கூட்டணியை அமைத்து ரனிலுக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்திருக்கின்றனர். அதன்படி பார்க்கின்றபோது ரனிலுக்கென்று அல்லது அவர்சார்ந்த ஐ.தே.க. வுக்கான வாக்கு வங்கி இருக்கவில்லை. இதன் பின்னர்தான் குறைந்த பட்சம் 75 இலட்சம் வாக்குகளையாவது திரட்ட வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களது வாக்கு வங்கியின் நிலையை பார்த்தால்

ஆனாலும் ஏற்கனவே 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சமகி ஜனபலவேகய கட்சியில் போட்டியிட்டவர் என்ற முறையில் சஜித் பிரேமதாசாவுக்கு சுமார் 54 இலட்சத்திற்கு மேற்பட்ட வாக்குகள் இருக்கின்ற நிலையில் இம்முறை தகுதி பெற்றுள்ள மொத்த வாக்குகளான ஒரு கோடி 70 இலட்சம் வாக்குகளில் இருந்து வெற்றிபெறுவதற்கான வாக்குகளாக எதிர்பார்க்கக்கூடிய உத்தேச வாக்குகளான குறைந்த பட்சம் 75 இலட்சம் வாக்குகளை திரட்டுவது இலகுவான இலக்காக அமையலாம். ஆனாலும் இந்த இலக்கை அடைய ஜே.வி.பி. மேலும் 70 இலட்சம் வாக்குகளை புதிதாக தம் பக்கம் கவர்ந்திழுக்க வேண்டும். ரனிலின் நிலையும் இதே நிலைதான். ஆனாலும் மொட்டு கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் நாமல் ராஜபக்ஷவுக்கு முன்னைய கோதாபயவின் வாக்குகளாக இருந்த 69 இலட்சம் வாக்குகளும் இப்போது நான்கு கூறுகளாக உடைந்து சிதறுண்டிருப்பதால் அவரது இலக்கும் கடினமானதாக இருக்கின்றது. அத்துடன் சஜித்திற்கு போடப்பட்ட 55 இலட்சத்து 64 ஆணிரத்து 239 வாக்குகளில் 30 இலட்சம் வாக்குகள் கோதாபயவுக்கு எதிராக போடப்பட்ட வாக்குகளே தவிர சஜித்திற்கு ஆதரவான வாக்குகள் அல்ல என்று அநுர கணக்கு போட்டு காட்டி இம்முறை 01 கோடி 20 இலட்சம் வாக்குகள் அளவில் திசை திரும்பி ஜே.வி.பி. யின் பக்கம் வரும் என்று தப்புக் கணக்கு போட்டுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ரனிலை ஆதரிப்பதற்காக வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுத்தீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியும் இரண்டாக பிளவுபட்டிருக்கின்றது. அதில் பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், அலிசப்ரி, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் ஆகிய மூன்று உறுப்பினர்களும் ரனிலுக்கு ஆதரவு வழங்க தீர்மானத்துள்ளனர்.

மறுபுரமாக ரிசாத் பதியுத்தீன் ஏகமனதாக சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க முன்வந்துள்ளார். விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியும் இரண்டாக பிளவு பட்டு விமல் வீரவங்சவின் அணி திலிப் ஜயவீரவுடனும் முசம்மிலின் அணி ரனிலுக்கு ஆதரவு வழங்கவும் தீர்மானித்தி ருக்கின்றது. இவ்வாறே பொதுஜன பெரமுணவில் இருந்து பிரிந்தவர்களும் ஸ்ரீ.ல.சு. கட்சியில் இருந்து பிரிந்த நிமல் சிரிபால டி. சில்வா அணியும் இணைந்து புதிய கூட்டணியை ஆரம்பித்து ரனிலை ஆதரிக்க முன்வந்துள்ளனர். இலங்கை தொழிலாளர் காங்கிரசும் ரனிலுக்கு ஆதரவளிக்க தீர்மானித் திருக்கின்றது. ஆனாலும் இந்த தொழிலாளர் காங்கிரசும் மூன்று கூறுகளாக உடைந்தி ருக்கின்றது.

இவ்வாறாக புதிய கூட்டணிகள், கட்சிகள் என்று பிரதான வேட்பாளர்களை அணி சூழ ஜனாதிபதித் தேர்தல் நடை ஆரம்பமானாலும் வாக்களிக்கும் மக்கள் தூர நோக்கமும் தெளிவான அரசியல் ஞானமும் இல்லாமல் எடுக்கும் முடிவுகள் மிகவும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். ஆதனால் ஆளமாக சிந்தித்து செயலாற்ற வேண்டி இருக்கின்றது.

# அமானா வங்கி தனது பணிப்பாளர் சபைக்கு அஸ்ரின் சஹீர் அவர்களை வரவேற்கின்றது



அமானா வங்கி தனது நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளராக அஸ்ரின் சஹீர் அவர்களை 2024 ஜூலை 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமித்துள்ளதாக அறிவித்துள்ளது. அஸ்ரின், நிதித்துறையில் 30 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டவராக திகழ்கின்றார்.

தமது தொழில் வாழ்க்கையை மூீஆபு கொழும்பில் ஆரம்பித்து பின்னர் ஏர்னஸ்ட் அன்ட் யங் பஹ்ரெய்னுக்கு மாறியிருந்தார். பின்னர் குவைட் பினான்ஸ் ஹவுசில் முதலீட்டு முகாமையாளராக இணைந்தார். குவைட் பினான்ஸ் ஹவுசில், சர்வதேச வங்கியியல் பிரிவினுள் வங்கியியல் வினைத்திறன் கண்காணிப்பு அலகு மற்றும் கடன் கண்காணிப்பு அலகு ஆகியவற்றின் தலைமை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றதுடன், துணை வங்கிகளின் வினைத்திறனை மேற்பார்வை செய்திருந்தார். உறுதியான நிதிசார் அனுபவத்தின் காரணமாக, குவைட் பினான்ஸ் ஹவுஸ் மலேசியா பேர்ஹாட்டின் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளராக நியமிக்கப்பட்டு 2011 முதல் 2017 வரையான காலப்பகுதியிலும், 2020 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலான காலப்பகுதியிலும் கடமையாற்றியிருந்தார். தமது முதல் தவணையில், பணிப்பாளர் சபை மாற்றியமைப்பு செயற்குழுவின் தவிசாளராக செயலாற்றியதுடன், இதன் போது, வங்கியின் இலாகாவை மீளமைப்பது மற்றும் புதிய கடன் வழங்கல் வழிகாட்டலை நிறுவுவது தொடர்பில் சர்வதேச ஆலோசகர்களுடன் இணைந்து செயலாற்றியிருந்தார். தற்போது இவர் பணிப்பாளர் சபை கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபை பிரேரிப்பு மற்றும் சம்பள சபை ஆகியவற்றின் தவிசாளராக சேவையாற்றுகின்றார்.

கணக்கீடு, வரி மற்றும் வியாபாரத்துடன் தொடர்புடைய விடயங்களுக்கு ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமான Frontier Advisory Ltd.இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாக அஸ்ரின் செயலாற்றுகின்றார்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தின் (CA Sri Lanka) அங்கத்தவராக அஸ்ரின் திகழ்வதுடன், இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் (ICMA) அங்கத்தவராகவும், பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவகத்தின் (CIMA-UK) இணை அங்கத்தவர் மற்றும் சான்றளிக்கப்பட்ட இடர் பகுப்பாளராகவும் (CRA) திகழ்கின்றார்.

இந்த நியமனம் தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பராலி கருத்துத் தெரிவிக்கையில், “எமது பணிப்பாளர் சபைக்கு அஸ்ரின் சஹீர் அவர்களை வரவேற்பதில் நாம் பெருமை கொள்கின்றோம். புகழ்பெற்ற சர்வதேச நிதி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் பணியாற்றிய அனுபவத்தை கொண்டுள்ளதுடன், வட்டிசாராத வங்கியியல் முறைமையில் நிபுணத்துவம் பெற்றுள்ளார். எமது அணிக்கு பெருமளவு அறிவையும் நிதிசார் நிபுணத்துவத்தையும் கொண்டு வருகின்றார். அவரின் பெறுமதி வாய்ந்த உள்ளார்ந்த அம்சங்கள் மற்றும் ஆலோசனைகளை நாம் எதிர்பார்ப்பதுடன், எமது பணிப்பாளர் சபைக்கு சிறந்த பெறுமதி சேர்ப்பாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.” என்றார்.

இந்த நியமனத்துடன், அமானா வங்கியின் பணிப்பாளர் சபையில் அடங்கியிருப்போர்: அஸ்கி அக்பராலி (தவிசாளர்), மொஹமட் அஸ்மீர் (முகாமைத்துவ பணிப்பாளர்ஃ பிரதம நிறைவேற்று அதிகாரி), திஷான் சுபசிங்க (நிறைவேற்று அதிகாரமற்ற சிரேஷ்ட சுயாதீன பணிப்பாளர்), மொஹமட் அதாவுர் ரஹ்மான் சௌத்ரி (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்), தில்ஷான் ஹெட்டியாரச்சி (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்), செயித் முஹம்மத் அசிம் ராஸ ா (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்), மொஹம்மட் ஹஸன் (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்), மொஹமட் ஆடமலி (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர்), கைருல் முஸமெல் பெரேரா பின் அப்துல்லாஹ் (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்), டெல்வின் பெரேரா (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்) மற்றும் அஸ்ரின் சஹீர் (நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்).

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பிஎல்சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் ஐளனுடீ குரூப் பிரதான பங்காளராக திகழ்கின்றது. ஐளனுடீ குரூப் ‘யுயுயு’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. வட்டிசாராத வங்கியியல் மாதிரியை கொண்டுள்ள அமானா வங்கியை, உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2023 ஆம் ஆண்டில் 37ஆம் ஸ்தானத்தில் ஏசியன் பாங்கர் தரப்படுத்தி கௌரவித்துள்ளது.

அமானா வங்கி எவ்விதமான துணை அல்லது இணை நிறுவனங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், அநாதரவான சிறுவர்கள் காப்பக அமைப்பான ழுசிாயவெயசந நம்பிக்கை நிதியத்தின் ஸ்தாபக அனுசரணையாளராக தனது ஈடுபாட்டை பேணி வருகின்றது.

# தேசிய ரீதியில் இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் தெரிவு செய்யப்பட்டவருக்கு விருது வழங்கிவைப்பு



(எம் எப். நவாஸ்)

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் அரச ஓய்வூதிய திட்டத்திற்கு பயனாளிகளை இணைக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டின் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் சார்பில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் ஐ. மனாப் தெரிவு செய்யப்பட்டார்.

அவருக்கான தேசிய விருதினை (National Level Achievement Award) அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் பீரிஎம்.இர்பான் அண்மையில் (21) வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வின் போது இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் மாவட்ட இணைப்பாளர் எஸ் ரீ. சுதாகரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ எல். மஜீட், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ எம் ஹமீட், பிரதேச செயலக சமூக பாதுகாப்பு சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம் எல். நஜிமுத்தீன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 2024 பாரிஸ் பாராலிம்பிக்கில் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளராக இணைந்த MAS Holdings



இலங்கையின் மிகப்பெரிய ஆடை ஏற்றுமதியாளரும், தெற்காசியாவின் மிகப்பெரிய ஆடை தொழில்நுட்ப உற்பத்தி நிறுவனமுமான MAS Holdings, 2024 பாரிஸ் பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் இலங்கை பரா அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளராக இணைந்து கொண்டுள்ளது.

இதுதொடர்பிலான உத்தியோகபூர்வ அறிவிப்பும், ஆடை அறிமுக நிகழ்வும் ஆகஸ்ட் மாதம் 14ஆம் திகதி கொழும்பில் மிக விமர்சையாக இடம்பெற்றது.

இதன்படி, இம்முறை பாராலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து இலங்கை பாரா வீர வீராங்கனைகளுக்கும் மரியாதை அணி வகுப்புக்கான ஆடையுடன், தடகளம், நீச்சல் மற்றும் சக்கர நாற்காலி டென்னிஸ் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளுக்கான விளையாட்டு ஆடைகளை ஆயுளு உழடனைபெள வழங்கவுள்ளது.



# மக்கள் படும் துன்பத்தை கண்டும் சஜித், அனுர மக்களுக்கு அனுதாபம் காட்டவில்லை

## – ஜனாதிபதி ஏறாவூரில் தெரிவிப்பு –

மட்டக்களப்பு ஏறாவூர் அஹமட் பரீட் விளையாட்டரங்கில் வெள்ளியன்று (23) பிற்பகல் நடைபெற்ற “இயலும் ஸ்ரீலங்கா” வெற்றிப் பேரணியில் ஜனாபதி மற்றும் அமைச்சர்கள் உரையாற்றியவை:



அன்று மக்கள் படும் துன்பங்களைக் கண்டு இரக்கமில்லாமல் தப்பியோடி, ஒளிந்த சஜித் பிரேமதாசவும் அநுர திஸ ாநாயக்கவும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தகுதியானவர்களா என்பதை இந்நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கு உரம் வழங்குவதே தாம் செய்த முதல் காரியம் என்பதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த 04 போகங்களையும் வெற்றியடையச் செய்ததன் மூலம் நாட்டில் நெல் உற்பத்தியை அதிகரித்து வயல்களையும் சமையலறைகளையும் நிரப்பியதாக குறிப்பிட்டார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் இந்த பொதுக்கூட்டத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி

பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர். பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த ஜனாதிபதியை மக்கள் அமோகமாக வரவேற்றனர்.

முஸ்லிம்களின் ஜனாசா நல்லடக்கம் தொடர்பில் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினை குறித்தும் இங்கு கருத்து தெரிவித்த ஜனாதிபதி, விருப்பியோர் நல்லடக்கம் செய்யவும், தகனம் செய்யவும், மருத்துவ பீடத்திடம் ஒப்படைக்கவும் முடியுமான வகையில் புதிய சட்டங்களைக் கொண்டு வருவது தொடர்பான சட்ட வரைவு அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் அந்த நிலைமைக்கு முகம் கொடுத்த தரப்பினருக்கு இழப்பீடு வழங்க குழுவொன்று நியமிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

– தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க:

“மக்கள் உணவு இல்லாமல் இருந்தார்கள். விவசாயம் செய்ய முடியாமல் இருந்தார்கள். உரம் இருக்கவில்லை. எரிபொருள் இருக்கவில்லை. டீசல் இருக்கவில்லை. விவசாயம் செய்ய முடியாது. வாகனம் ஓட்ட முடியாது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. உணவு, மருந்துகள் இருக்கவில்லை. மக்கள் கஷ்டத்தில் வாழ்ந்தனர். நான் ஜுலை மாதம் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற போது உரத்தை வழங்கி விவசாயம் செய்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று நான் தீர்மானித்தேன்.

ஐந்து போகங்களும் விதைக்கப்பட்டன. ஒரு முறைகூட கைவிடப்படவில்லை. வயலையும் நிரப்பினோம். சமையல் அறையும் நிரப்பினோம். இதுதானே மக்களின் தேவை. எரிபொருள் வழங்கினோம். மருந்துகள் இருக்கின்றன. தேவையான அனைத்துப் பொருட்களும் இருக்கின்றன. பொருளாதாரம் எழுச்சி பெறுகிறது. சுற்றுலாப் பயணிகளும் வருகின்றனர். வியாபாரமும் தடையின்றி நடக்கிறது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. இன்னும் குறைக்க வேண்டும் என்று கோருகின்றனர். அதனை ஏற்றுக்கொள்கிறேன். மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இன்னும் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும். ரூபாவை வலுப் பெறச் செய்ய வேண்டும்.

நான் பொறுப்பேற்கும் போது டொலர் ஒன்றின் விலை 370 ரூபாவாகும். தற்போது 300 ரூபா வரை குறைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தி 2019ஆம் ஆண்டு 89 பில்லியன் டொலர்களாக இருந்தது. ஆனால் நான் பொறுப்பேற்ற போது 76 பில்லியன் டொலர்களாக குறைந்திருந்தது. ஆனால் 2023ஆம் ஆண்டின் இறுதியில் அது 84 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. எமது மொத்தத் தேசிய உற்பத்தி அதிகரித்து, பணவீக்கம் குறைந்து பொருட்களின் விலைகளும் குறைந்தன. இன்னும் நிவாரணத்தை எதிர்பார்த்துள்ளீர்கள். அதனை எப்படி வழங்கலாம்?. தேசிய உள்நாட்டு உற்பத்தியை 89 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும். பணவீக்கத்தை 9 வீதமாக குறைக்க வேண்டும். ரூபா அப்போது இன்னும் வலுப்பெறும். ரூபா வலுப்பெற்றால் அதிக பொருட்களை வாங்க முடியும். மொத்த தேசிய உற்பத்தியை 92 பில்லியன் டொலர்களாக உயர்த்தினால் ரூபா மேலும் வலுப்பெறும். பொருட்களின் விலைகள் குறையும். யாருக்கு இந்த இலக்கை அடைய முடியும்?

உள்நாட்டு உற்பத்தியை யாருக்கு அதிகரிக்க முடியும். சஜித்தினால் முடியுமா? அநுரவிற்கு முடியுமா? அவர்களால் முடியாது. எதற்காக வாக்கு கோருகின்றனர். அவர்கள் நேரத்தை வீணடிக்காது வீட்டில் இருக்க வேண்டும். வாய்ப்பு கொடுத்த போது ஓடிவிட்டார்கள். இவர்களுக்கு ஒரு நாட்டை நிர்வகிக்க முடியுமா? மக்கள் கஷ்டப்பட்டபோது தப்பியோடிவிட்டார்கள். எனக்கு ஒரேயொரு ஆசனம் தான் இருந்தது. எனினும், மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் நான் இதனை ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறி இதனை ஏற்றுக்கொண்டேன். எமது வீடுகளிலும் குறைபாடுகள் இருந்தன. ஆனால் கஷ்டம் இருக்கவில்லை. ஆனால் நாட்டு மக்கள் கஷ்டப்பட்டனர். முச்சக்கர வண்டியொன்றை ஓட்ட முடியாமல் கஷ்டப்பட்டனர். நீங்கள் இந்த கஷ்டத்தை அனுபவித்தீர்கள். இவற்றைப் பார்த்தும் ஏன் இந்தத் தலைவர்கள் அனுதாபம் கொள்ளவில்லை. அரசாங்கத்தை பொறுப்பேற்க சொன்ன போது தப்பியோடிவிட்டார்கள். நான் பொறுப்பேற்றேன். நான் துரோகி என்று என்னைத் திட்டுகின்றனர். திருடர்களை பாதுகாப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

உங்களின் சமையல் அறை, பணப் பை, வீட்டில் இருந்த நிலை குறித்து அவர்கள் சிந்திக்கவில்லை. சமுர்த்தி வழங்க பணமில்லை என்றார்கள். சமுர்த்திக்குப் பதிலாக அஸ்வெசும மூலம் மூன்று மடங்கு வழங்கினேன். 24 லட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கினேன்.உலக வங்கி எங்களுக்கு உதவியது. சில உதவிகள் தாமதமாகியுள்ளன. குறைந்த வருமானம் பெறுவோருக்கு 10 கிலோ அரிசியை தலா இரண்டு மாதங்களுக்கு வழங்கினோம். பாடசாலை மாணவர்களுக்கு உணவுகளை வழங்கினோம். வேறு என்ன செய்ய வேண்டும். முதியோருக்கான கொடுப்பனை அதிகரித்தேன். இவற்றை செய்ய ஏன் அவர்கள் என்னுடன் ஒன்றுசேரவில்லை. மக்களுடன் அவர்களுக்கு கோபம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அநுரகுமாரவிற்கும், சஜித் பிரேமதாசவிற்கும் நீங்கள் ஏதாவது பிழை செய்துள்ளீர்களா? ஏன் அவர்கள் உதவ முன்வரவில்லை. உங்களின் பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் சிந்திக்க வில்லை. தங்களின் பிரச்சினகளைப் பற்றி மட்டுமே சிந்தித்தார்கள். இதனை செய்ய முடியாது. இது தோல்வியடைந்தால் தங்களின் பெயர் கெட்டுவிடும் என்று நினைத்தார்கள். தற்போது எமது முயற்சி வெற்றியளித்துள்ளது. அவர்களின் பெயர்கள் கெட்டுவிட்டன.

அவர்களுக்காகவா வாக்களிக்கப் போகிறீர்கள்? நான் “உறுமய“ காணி உறுதிப்பத்திரங்களை வழங்கினேன். கொழும்பில் குறைந்த வருமானம் பெறுவோருக்கு அவர்கள் வசிக்கும் அடிக்குமாடிக் குடியிருப்புக்களின் உரிமைகளை வழங்கினோம். மலையகத்தில் கிராமங்களை உருவாக்கி, வீடுகளை வழங்குவோம். ஏன் அவர்கள் இவற்றை செய்ய முன்வரவில்லை. ஏன் அவர்கள் இவற்றை முன்மொழியவில்லை. ஏன் அவர்கள் இதுபற்றி பேசுவதில்லை. மக்கள் வாழ்வதற்கு காணி இருக்க வேண்டும். கோரளைப்பற்று உள்ளிட்ட இந்தப் பிரதேசத்திலும் பிரச்சினைகள் இருக்கின்றன. நெருக்கடி இல்லாமல் காணிகளை அடையாளம் கண்டு காணிகளை வழங்க எமது புதிய அரசாங்கத்தில் நடவடிக்கை எடுப்போம்.

முஸ்லிம் மக்களுக்கு அநீதி ஏற்பட்டது. முஸ்லிம்களின் ஜனாசாக்கள் நல்லடக்கம் செய்ய முடியாமல் தகனம் செய்யும் நிலை ஏற்பட்டது. இவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாதிருக்க நான் புதிய சட்டமொன்றைக் கொண்டுவருகின்றனர். விரும்பியோர் நல்லடக்கம் செய்யவும், தகனம் செய்யவும், விரும்புவோர் உடலை மருத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கவும் முடியும். அமைச்சர் அலி சப்ரி இந்தச் சட்டத்தை அமைச்சரவைக்கு கொண்டுவந்த பின்னர் நாம் வர்த்தமானியில் வெளியிடுவோம். ஏன் சஜித், அநுர இவ்வாறான சட்டமூலத்தை கொண்டுவரவில்லை. எந்தவொரு உறுப்பினருக்கும் இந்த சட்டமூலத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் குழுவொன்றை நியமிக்கவுள்ளேன். கடந்த அரசாங்க காலத்தில் இது நிகழ்ந்திருந்தாலும் இந்தச் சம்பவத்திற்கு அரசாங்கம் என்ற ரீதியில் முஸ்லிம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம்.

சஜித், அநுர இவ்வாறு செய்வார்களா? நாம் முன்நோக்கிச் செல்ல வேண்டும். இன்னும் சில வருடங்கள் தேவைப்படுகின்றன. எங்களுக்கு உதவிகள் தேவை. ஐ.எம்.எப்., 17 நாடுகள், சீனா ஆகிய தரப்பினருடன் கதைத்து உதவிகளைப் பெற்றுள்ளேன். இந்த உடன்பாட்டிற்கு வந்துள்ளோம். இதனை மீறினால் நிதி கிடைக்காது. சஜித் அநுர, இந்த உடன்படிக்கைகளில் மாற்றம் செய்வோம் என்று கூறுகின்றனர்.

அவ்வாறு செய்தால் டொலர் மீண்டும் 370 ரூபா வரை செல்லும். ஆற்றில் விழுந்து சாகச் சென்றவரை காப்பாற்றி மீண்டும் கரைக்குக் கொண்டுவந்த பின்னர் மீண்டும் ஆற்றில் குதிப்பதா? அவர்கள் அதனைத் தான் செய்வதாக சொல்கிறார்கள். நாம் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இங்குள்ளவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை வழங்க வேண்டும். இது ஆரம்பம் மட்டுமே. நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். அதனால் தான் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறேன். உங்களின் எதிர்காலத்தை பற்றி சிந்தியுங்கள். இதனை பாதுகாத்துக் கொள்ள கேஸ் சிலிண்டருக்கு வாக்களிக்குமாறு கோருகிறேன். அல்லது கேஸ் சிலிண்டர் இன்றி வாழ நேரிடும்.““ என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

### வெளிவிவகார, நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் அலி சப்ரி உரையாற்றுகையில்,




“2019 இல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற போது முஸ்லிம் காங்கிரசும் மக்கள் காங்கிரசும் சஜித் பிரேமதாஸ வை ஆதரித்தன. சமூக ஒற்றுமைக்காக நாம் அன்றை அரசுடன் இருந்தோம். முஸ்லிம்களின் ஜனாசாக்கள் தகனம் செய்யப்பட்ட போது அதற்கு எதிராக நாம் செயற்பட்ட போது ஹாபிஸ் நஸ ீர் அஹமடும் எம்முடன் இணைந்து செயற்பட்டார். அன்றைய பாகிஸ்தான் ஜனாதிபதி இம்ரான் கான் எமது நாட்டுக்கு வந்த போது அவருடன் கலந்துரையாடி தகனம் செய்வதை நிறுத்தி, 3000 பேரின் ஜனாசாக்களை உங்கள் பிரதேசத்தில அடங்கம் செய்து இந்த பிரச்சினையைத் தீர்க்க எம்மால் முடிந்தது.

நெருக்கடி நிலையில் நிதி அமைச்சைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நிலையில் 2022 இல் நிதி அமைச்சை நான் பொறுப்பேற்றேன். எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு ஐ.எம். எப் அறிவித்த நிலையில் எதிர்க்கட்சி தலைவருடம் பேசி ஆட்சியை ஏற்குமாறு கோரும் படி அன்றைய ஜனாதிபதி கோட்டாபய என்னிடம் கேட்டார். சஜித் பிரேமதாஸவுடன் பேசிய போது, ஹர்ச டி சில்வாவுடன் பேசுமாறு சொன்னார். மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர் ஆகியோருடன் பேச வேண்டும் என்று ஹர்ஷ கோரியதற்கு அமைய அவர்களை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்க அனுப்பினேன். ஆட்சியை ஏற்பது மிகவும் கஷ்டமான விடயம் என்றும் இதனை ஏற்பவருக்கு மிகவும் கடினமாக இருக்கும் எனவும் ஹர்ச டி சில்வா கூறினார். அவரது டுவிட்டர் தளத்திலும் இதனைப் பதிவிட்டிருந்தார். ஆனால் ரணில் விக்ரமசிங்க ஆட்சிப் பொறுப்பை தைரியமாக ஏற்றார். அது தான் தலைமைத்துவத்திற்கு அழகாகும். அதன் பின்னர் கேஸ், பெற்றோல் வரிசை முடிவுக்கு வந்தது. மருந்தை தடையின்றி வழங்கினோம். உரத்தை வழங்கினோம்.

2 வருடங்களில் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய ஜனாதிபதிக்கு நாம் வாக்களிக்க வேண்டுமா? இல்லையா? என்ற கேள்வி உங்கள் மத்தியில் இருக்கும்? முஸ்லிம் சமுதாயம் எப்பொழுதும் நாட்டைப் பற்றி சிந்தித்துச் செயற்படும் சமுதாயமாகும். நாட்டை கட்டியெழுப்பிய ஜனாதிபதிக்கு நாட்டை கையளிப்பதா? அல்லது அன்று ஏற்க மறுத்தவர்களுக்குப் பரீட்சார்த்தமாக கொடுப்பதா?

மலையகத்தில் உள்ள கட்சிகளில், ஒரு கட்சி அரசுடனும் ஒரு கட்சி எதிரணியடனும் இருக்கும். ஆனால் முஸ்லிம் கட்சிகளில் இரு கட்சிகளும் ஆளும் தரப்பில் தான் இருக்கும். மலையக அபிவிருத்திக்கான அமைச்சையோ கல்வி அமைச்சையோ மலையக கட்சிகள் கோருவார்கள். ஆனால் எமது முஸ்லிம் கட்சிகள் தமது நலனக்காக அமைச்சுப் பொறுப்பை கேட்பார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில் முஸ்லிம் நாடுகளுக்கு அடுத்தபடியாக பலஸ்தீன மக்களுக்கு அதிகளவு குரல் கொடுத்தது எமது நாடுதான். பலஸ்தீன மக்களுக்காக நிதியமொன்றை ஜனாதிபதி ஆரம்பித்தார். கடினமான நிலையிலும் கூட அந்த மக்களுக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திரட்டிக் கொடுத்தோம். எதிர்காலத்தில் அங்கு ஒரு பாடசாலை கட்டுவதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.” – என்றார்.

# நாம் அனைத்து மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச





அனைத்து இனங்களிலும், அனைத்து மதங்களிலும் அடிப்படைவாதிகள் இருக்கின்றார்கள். அது ஒரு மதத்தோடும் ஒரு இனத்தோடும் மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதில்லை. நாம் அனைத்து மதங்களுக்கும் இனங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அனைவரும் ஒன்றாக கைகோர்த்து சகோதரத்துவத்துடனும் நட்புடனும் செயற்பட வேண்டும். இது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கையாக இருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான கௌரவ சஜித் பிரேமதாசவிற்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடலொன்று இன்று(23) கொழும்பிலுள்ள உலமா சபை தலைமையகத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் என்ற வகையில் தானும், தனது குழுவும் முஸ்லிம் சமூகம் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் ரணசிங்க பிரேமதாசவின் கொள்கையுடனே செயற்படுகின்றோம். அந்தப்பழக்கம் தன்னிடம் இருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அதேபோன்று ஒற்றுமை, நல்லிணக்கம், நட்பு மற்றும் தேசிய ஒருமைப்பாடு தொடர்பில் ஏனையோர் கருத்து வெளியிட்டாலும், அதனை தாம் இந்தத் தாய் மண்ணின் நிதர்சனப்படுத்தியுள்ளோம், செயல்படுத்தி உள்ளோம். தனது தந்தையின் ஆட்சிக் காலத்தில் முஸ்லிம் விவகார அமைச்சொன்று இருந்தாலும், இன்று அந்த அமைச்சு இல்லை. அந்தக் குறைபாட்டை உணர்ந்திருக்கிற தான் அரச மட்டத்தில் அதற்காக ஒரு அமைச்சை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் ஆகிய மதங்களை அடிப்படையாகக் கொண்டு அறநெறி பாடசாலைகளை உருவாக்கியிருக்கிறோம். சிசு தஹம் சவிய திட்டத்தின் ஊடாக அதனை முன்னெடுத்தோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னரும் இவ்வாறு அறநெறி பாடசாலைகளை முன்னெடுத்தோம். தான் வெறும் பேச்சுக்களுக்கு பதிலாக வேலை திட்டங்களின் ஊடாக தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

– நல்லடக்கம் செய்வதா எரிப்பதா என்கின்ற பிரச்சினையின் போது நாம் வீதிக்கு இறங்கினோம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கொரோனா தொற்று பரவிய காலத்தில் ஒரு துரதிஷ்டமான சூழ்நிலை உருவாகியது. அது மதவாத இனவாத அடிப்படைவாத செயற்பாடாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் தாக்கப்பட்ட பள்ளிவாயல்களையும் நாம் புனரமைப்புச் செய்தோம். கொரோனா தொற்று ஏற்பட்ட காலத்தில் நல்லடக்கம் செய்வதா? எரிப்பதா ? எனும் பிரச்சினை எழுந்தபோது அது முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு பாரபட்சமாகவே இருந்தது. அதற்கு இன்று அவர்கள் அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக மன்னிப்பு கோரியிருக்கிறார்கள். அந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் வாய் மூடி மௌனித்திருந்தார்கள். தாம் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியே வீதிக்கு இறங்கி போராட்டங்களை முன்னெடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

– பாரபட்சமாக நடத்தப்பட்ட முஸ்லிம் சமூகத்திற்கு நட்ட ஈடு வழங்கப்படும்.

தான்தோன்றித்தனமாக பலவந்தமாக மேற்கொண்ட இந்த செயற்பாடு குறித்து விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் ஊடாக நட்ட ஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து அன்று நாம் வீதிக்கு இறங்கிய போது அதற்கும் தடை ஏற்படுத்தியவர்கள் இருந்த போதும் அவற்றை பொருட்படுத்தாமல், முஸ்லிம் மக்களின் உரிமைக்காக வீதிக்கு இறங்கினோம் என எதிர்க்கட்சித் தலைவர் இதன் போது தெரிவித்தார்.

– பாலஸ்தீன பிரச்சினை குறித்தும் நான் நேரடியாக கதைத்துள்ளேன்.

பாலஸ்தீன பிரச்சினை குறித்து, குறித்த நாட்டு தலைவர்களின் பெயரை குறிப்பிட்டு முதுகெலும்போடு கதைத்துள்ளேன். ஹிட்லரின் நாசிப்படை ஜெர்மனியில் செய்ததைப் போன்று இன்று இஸ்ரேல் பாலஸ்தீனுக்கு செய்து கொண்டிருக்கிறது. இதனை எந்தவித அச்சமும் இன்றி நான் வெளிப்படையாக தெரிவிக்கிறேன்.

பாலஸ்தீன மக்களின் இன வன்கொடுமையை கண்டிக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இன்று எமது நாட்டுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் தொடர்பிருகின்றது. அதேபோன்று எனக்கும் தொடர்பிருகின்றது. எனது தந்தையும் அந்தக் காலத்தில் பலஸ்தீனத்துக்காக குரல் எழுப்பி இருக்கிறார். நானும் எனது தந்தையின் கொள்கையை பின்பற்றி பலஸ்தீன மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பேன்.

இந்த நாட்டில் உள்ள முஸ்லிம் சமூகத்தை பாதுகாத்து அச்சமின்றி வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பேன். பல்வேறுபட்ட பிரச்சினைகள் இருந்தாலும் அதற்கு காத்திரமான பதில்களை வழங்கி பன்முக கலாச்சார ஒற்றுமையை ஏற்படுத்தும் மத்திய நிலையம் ஒன்றை உருவாக்கி, இன மதங்களுக்கு கௌரவம் அளிக்கின்ற ஸ்மார்ட்

பிரஜைகளுடன் கூடிய ஒரு பரம்பரையை உருவாக்க நடவடிக்கை எடுப்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இந்த சந்தர்ப்பத்தில் மேலும் தெரிவித்தார்.

# இனவாதத்துக்குப் பதிலாக தேசிய ஒற்றுமைக்காக நாம் பாடுபட்டோம்

## உலமா சபை சந்திப்பில் பின் அனுர குமார திஸாநாயக்க







அண்மையில் பிரதானமாக பேசப்படுகின்ற ஒரு விடயம் தான் பாராளுமன்றத்தில் நான் கூறிய ஒரு விடயத்தை திரிபுபடுத்தி கொண்டுச் செல்கிறார்கள். குறிப்பாக நான் கண்டேன், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் இதனைப் பற்றி பகிரங்கமாக கூறிவருகிறார். அரசியல் ரீதியாக நிர்க்கதி நிலையுற்றுள்ள குழுக்களின் பிரதான பணியாக அமைந்துள்ளது என்னவென்றால் தேசிய மக்கள் சக்தியை இலக்காகக் கொண்டு பொய்யான தகவல்களை பரப்புவதாகும்.

தேசிய மக்கள் சக்தி அனைத்து மதங்களினதும் சுதந்திரமான வழிப்பாட்டு உரிமைகளையும் அனைத்து கலாச்சார உரிமைகளையும் பேணி பாதுகாத்து முன்னெடுத்துவருவதை ஏற்றுக்கொள்கின்ற ஒரு அரசியல் இயக்கமாகும். மொழி ரீதியாக, மத ரீதியாக அதைப்போலவே கலாச்சார ரீதியாக எமது நாட்டில் பிளவுகளை வைத்துக்கொள்ளக்கூடாது. நாங்கள் இலங்கையர்கள் என்ற வகையில் ஒன்று சேரவேண்டுமென நம்புகின்ற ஒரு இயக்கமாகும். அன்று நான் பாராளுமன்றத்தில் மிகவும் தெளிவாக சுட்டிக்காட்டியது எமது நாட்டில் வன்முறையும் முரண்பாடுகளும் உருவாவது அந்தந்த சமூகத்தில் நிலவுகின்ற தீவிரவாத அரசியலின் காரணமாகவேயாகும்.

எங்களுக்குத் தெரியும் சிங்கள சமூகத்தில் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைகளுக்கு அழைப்புவிடுக்கின்றன. அதைபோலவே தமிழ் சமூகத்தில் நிலவுகின்ற தீவிரவாத கூற்றுக்கள் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைக்கு வழிசமைத்தன. அதைபோலத்தான் முஸ்லிம் சமூகத்திலும் தீவிரவாத செயற்பாடுகள் தான் வன்முறைக்கு வழிசமைத்தது. அது ஒட்டுமொத்த மக்களுமல்ல. அந்த தீவிரவாதத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் இல்லை. அந்த தீவிரவாதத்தில் ஒட்டுமொத்த சிங்கள மக்களும் இல்லை. அந்த தீவிரவாதத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இல்லை. எனினும் அத்தகைய மிகவும் சிறிய குழுக்கள் நிலைமையை திரிபுப்படுத்தி உண்மையான இறைவனோ அல்லது புத்த பிரானோ உபதேசித்த விடயங்களுக்கு பதிலாக அதற்கு தாமாகவே வியாக்கியானம் கற்பித்து சமூகத்தை தீவிரவாதத்தை நோக்கி கொண்டு செல்கின்றன.

அதோ அந்த தீவிரவாதம் தான் அந்த சமூகத்தின் தோன்றுகின்ற தீவிரவாதம் தான் வன்முறைகளின் கருவறையாக மாறுகின்றன. அந்த விடயங்களை நாங்கள் மிகவும் தெளிவாக எடுத்துரைத்த பின்னர் அது பற்றிய மிகுந்த குறைக்கூறல்கள் வட்சப் மூலமாக சஞ்சரித்து வருவதை நாங்கள் அறிகிறோம். நாங்கள் அனைத்து மக்களிடமும் வேண்டிக்கொள்வது கடந்த காலங்களில் இந்த நாட்டில் இனவாத அரசியல் மேலோங்கும்போது எங்களுடைய நடைமுறைகளை சற்று பாருங்கள். நாங்கள் எந்த விதமான இனவாதத்திற்கும் கட்டுப்படாத, மிகவும் சிரமமான தருங்களில் கூட இனவாதத்திற்கு பதிலாக தேசிய ஒற்றுமைக்காக பாடுபட்ட இயக்கமாகும்.

எனவே, திடீரென தேர்தல் மேடைகளில் சிங்கள பௌத்தத்திற்கு எதிரான இயக்கமொன்று முஸ்லிம்களுக்கு எதிரான இயக்கமொன்று முஸ்லிம் மக்களின் மதவுரிமைகளுக்கு எதிரான இயக்கமொன்று அவர்களின் மார்க்க நம்பிக்கைகளுக்கு எதிரான இயக்கமொன்று என எம்மை குற்றச்சாட்ட தொடங்கியிருக்கிறார்கள். இவை எல்லாமே எமக்கு எடுத்துக்காட்டுவது சரித்த ஹேரத்தின் திஸ்ஸ அத்தநாயக்கவின் ரவூப் ஹக்கீமின் அரசியல் வங்குரோத்து நிலைமையையும் நிர்க்கதி நிமையையுமேயாகும். மக்களின் உண்மையான பிரச்சினைகள் பற்றிய தீர்வோ அதனை தீர்ப்பதற்கான ஆற்றலோ இவர்களுக்கு கிடையாது. எனவே இவர்களின் ஒட்டுமொத்த அரசியலும் குறைக்கூறல்கள் மற்றும் பொய்யான தகவல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. கரு சம்பந்தப்பட்டு திருபுபடுத்தப்பட்ட செய்திகளை பரப்புகிறார்கள். நாங்கள் குறிப்பாக ஜம்மியத்துல் உலமா அமைப்பிற்கு இந்த இனவாத போக்கு பற்றியும் பொய்யான விடயங்கள் பற்றியும் எமது சார்பிலான விடயங்களை எடுத்துரைத்தோம்.

# கட்சி தீர்மானத்தை மீறிய முபீன், பரீதுக்கு எதிராக நடவடிக்கை

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் ஹிஸ்புல்லாஹ்**

(எம்.பஹத் ஜுனைட்)

கட்சி எடுத்த தீர்மானத்துக்கு எதிராக செயற்படும் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான யூ.எல். எம்.என். முபீன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எல். பரீட் ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க தீர்மாணித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இதில் தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் யூ.எல்.எம்.என். முபினுக்கு கட்சி நேரடியாக நடவடிக்கை எடுக்கும் எனவும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கே.எல்.பரீட்க்கு உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வேட்பாளரில் இருந்து நீக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் இவ் இருவரையும் கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.



இந்த தேர்தலில் கட்சி எடுத்த தீர்மானத்திற்கு அமைய கட்சி ஆதரிக்கும் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாக முழுமையான பிரச்சாரத்தை முன்னெடுக்கவுள்ளோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தலைவர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்



இஸட்.ஏ.றஹ்மான்

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் (19) தலைவர் மீரா இஸ்ஸதீன் தலைமையில் ஒலுவில் கிறீன்வாசலில் நடைபெற்றது .

இதன் போது புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அதன்படி ஆலோசகர்களாக எம்.ஐ.சம்சுதீன், எஸ்.எம். சிறாஜுதீன், ஏ.எல்.எம்.சலீம், எம்.ஐ.எம்.ஆரிப், ஆர்.சிறிவேல் ராஜ் தலைவராக- கலாபூசனம் மீரா இஸ்ஸதீன் பிரதிதலைவர்-ஐ.எல்.றிஸான், உதவித்தலைவர்கள்- ஏ.எம். இஸ்ஹாக், எஸ்.எல்.ஏ. அஸீஸ் ஆகியோரும் செயலாளராக எம்.எம்.ஏ.சமட், உதவி செயலாளர்-எம்.எல்.சரிபுதீன், பொருளாளர்-இஸட்.ஏ.றஹ்மான், கணக்காய்வாளர்-சீ.எம்.ஹலீம், அமைப்பாளர் -எஸ்.எல்.நிசார் ஆகியோரும் ஏனையோர் ஏனைய பதவிகளுக்கும் தெரிவானார்கள்.

# முதியோருக்கான கண் பரிசோதனை





இஸட்.ஏ. றஹ்மான்

சாய்ந்தமருது பிரதேச செயலக முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் முதியோர் சங்க அங்கத்தினருக்கான கண்வில்லை வைப்பதற்கான கண் பரிசோதனை(22) சாய்ந்தமருதில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சகிலா இஸ்ஸதீனின் பணிப்புரைக்கு அமைவாக சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் டி.பிரபா சங்கர் தலைமையில் இடம் பெற்றது.


இதில் சுமார் 100 முதியோர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

இந்நிகழ்வில் திட்டமிடல் வைத்தியர் ஏ. ஆர்.நியாஸ் அஹமட், கண் வைத்திய நிபுணர் வைத்தியர் ஐ. என். எம்.சியாத் மற்றும் தாதிமார்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இல்யாஸின் மறைவு வேதனை தருகிறது

**மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்**





யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர். ஐதுருஸ் இல்யாஸ் திடீர் என காலமானது, நிலையற்ற உலக வாழ்க்கையை உணர்த்துவதாக அகில இலஙகை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இல்யாஸின் மறைவு குறித்து, அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

"முஸ்லிம் சமூக அரசியலில் புதுமையான அனுபவங்களைக் கொண்ட அவர், யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு, மிகக் குறைந்த வாக்குகளால் பாராளுமன்றத்துக்கு தெரிவானவர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த தலைவர் மர்/ஹூம் அஷ்ரபின் பாசறையில் வளர்க்கப்பட்டதால், சிறந்த முன்னோடி அரசியல்வாதியாக அடையாளம் காணப்பட்டார்.

அரசியலைக் கடந்து தனிப்பட்ட ரீதியில் எனது நட்பு அவரிடம் நிலைத்தது. வட மாகாணத்திலிருந்து அரசியலுக்கு வந்திருந்த மர்ஹூம் இல்யாஸ், முஸ்லிம் அரசியலில் நிலவும் சவால்களைத் தெரிந்திருந்தார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடனும் நல்லுறவைக் கொண்டிருந்தார். இம்முறை ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் போட்டியிடவிருந்தார்.

எந்தக் கட்சியில் அரசியலை முன்னெடுத்தாலும் சமூக முனேற்றம் பற்றியே அவர் சிந்தித்ததுடன், அடக்கு முறைகளுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்களை தலைமையேற்று நடத்தியவர்.

அன்னாரின் மறைவினால் துயறுற்றிருக்கும் அவரது குடும்பத்தினர்களுக்கு எல்லாம் வல்ல அல்லாஹ்! இழப்பைத் தாங்கும் மனதைரியத்தைக் கொடுக்கப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் மறுமை வாழ்வுக்காகவும் துஆச் செய்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# சம்மாந்துறை பிரதேச செயலாளர் சீனா பயணம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

"ஈ-வர்த்தகம்(E-Commarce) எனும் கருத்திலான சர்வதேச பயிற்சி பட்டறை எதிர்வரும் ஆகஸ்ட் 29 தொடர்க்கம் செப்டம்பர் 11 வரை சீனாவின் செங்டு சிச்சுவான் மாகாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கை நிர்வாக சேவையில் 18 வருடங்கள் அனுபவத்தைக் கொண்ட சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தின் உரிமய தேசிய வேலைத் திட்டத்தில் தேசிய ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் சிறப்பாக செயற்பட்டவர்கள் என்ற வகையில் இந்த தெரிவு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது விடயமாகும்.

# என்.கே.பி ஸ்டடீஸ் என்ட் மீடியா கல்லூரியினுடைய இறுதி வகுப்பு

என்.கே.பி ஸ்டடீஸ் என்ட் மீடியா கல்லூரியினுடைய இறுதி வகுப்பு என்.கே.பி ஸ்டடீஸ் என்ட் மீ-டியா கல்லூரியினுடைய ஒருமா-தகால மருதாணி பாடத்திற்குரிய இறுதி வகுப்பு கடந்த 17ஆம் திகதி பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தில் நடை-பெற்றது.

கல்லூரியின் தலைவர் என்.நக்க-ீப் மற்றும் செயலாளர் ஜெ.பா. சாலினா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இப்பாடநெறியில், தேர்ச்சி மிக்க விரிவுரையாளரான எச்.மரியம் மற்றும் கல்லூரியின் உறுப்பினர்கள் ஏ.எப் அஜீமா, எம். எப்.மின்னா ஆகியோர் கலந்து கொ-ாண்டனர்.

மாணவர்களின் நலன் கருதி மிக குறைந்த கட்டணத்தில் வழங்க-ப்பட்ட இப்பாடநெறியில் என். கே.பி ஸ்டடீஸ் என்ட் மீடியா கல்லூரியினுடைய நோக்கத்தின் அடிப்படையில் தந்தை இல்லாத மாணவர்கள் இலவசமாக கலந்து கொண்டு பயிற்சியின் முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழினையும் பெற்றுக்கொண்டனர்.

# சிறந்த பெண் விளையாட்டு செய்தித் தொகுப்பாளராக ஆஷிகா பர்ஸான் தெரிவு




( ஐ. ஏ. காதிர் கான் )

கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் (20) நடைபெற்ற "ஐகானிக் விருது - 2024" நிகழ்வில், சிறந்த பெண் விளையாட்டுச் செய்தித் தொகுப்பாளராக, ஆஷிகா பர்ஸான் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் கத்தாரில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற யுகுஊஊ ஆசிய கோப்பை கால்ப்பந்தாட்டப் போட்டியில், கத்தார் நாட்டின் முன்னணி தமிழ் ஊடகமான 'ஸ்கை தமிழ்' சார்பாக ஊடகப் பணியாற்றியமைக்கு இச்சிறப்பு விருது வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, தயாசிறி ஜயசேகர மற்றும் வசந்த யாப்பா பண்டார உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாக்காளர் அட்டைகள் விநியோகம்

( ஐ. ஏ. காதிர் கான் )

ஜனாதிபதித் தேர்தல் தபால் மூல வாக்களிப்புக்காக, அரசாங்க அலுவலகங்களுக்கு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள், எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் செயலகத்தில் அண்மையில் (20) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் விளக்கமளிக்கும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.



அதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு 27 அங்குலம் நீளமானது என்றும், தற்போது வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணிகள், அரசாங்க அச்சகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நற்பிட்டிமுனையில் பெண் சுய தொழில் முயற்சியாண்மை திட்டம் அங்குரார்ப்பணம்





(எம்.எம். ஜெஸ்மின்)

ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேசனினால் "பொருளாதார ரீதியாக வலுப்படுத்தப்பட்ட பெண் சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை, சாய்ந்தமருது , நாவிதன்வெளி ,காரைதீவு மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெண் மேம்பாட்டு திட்டம் ஒன்றை ஏ.ஆர். மன்சூர் பௌண்டேஷயின் தலைவி சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுதீன் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் ஒரு அங்கமான பெண் சுயதொழில் முயற்சியாண்மை எனும் பெண்கள் நலன் உதவித் திட்டத்தின் ஆரம்பகட்ட நிகழ்வானது நற்பட்டிமுனை பிரதேசத்திலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்களின் வளர்ச்சிக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதற்கான வளங்களை அமைத்துக் கொடுத்து, பெண்களின் நலன்புரி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன் போது பெண்களுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளை வழங்குவதற்காக பெண் சுயதொழில் முயற்சியான்மை செயல் திட்டத்தின் விண்ணப்பப் படிவங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# 'வலம்புரி' கவிதா வட்டத்தின் 103 ஆவது கவியரங்கு



( ஐ. ஏ. காதிர் கான் )

'வலம்புரி' கவிதா வட்டத்தின் 103 ஆவது கவியரங்கு, திங்கட்கிழமை (19) கொழும்பு பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்றது. வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தலின் கீழ் 'கலைஞானச் சுடர்' சுபாஷினி பிரணவன் தலைமையில் சிந்தையள்ளும் வகையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

இக் கவியரங்கில், கவிஞர்களான அமீர் அலி, தி. ஸ்ரீதரன், மஸீதா அன்சார், இ. கலைநிலா, எம்.ஏ. ரஹீமா, அருந்தவம் அருணா, என்.பி.எம். தஸ்லீம், காகிதம் அநாமிகா ஷினாஸ், அலி அக்பர், எம்.எஸ். அப்துல் லதீப், தாமரைச் செல்வி, எம். பிரேம்ராஜ், ரமீஸ், முஸம்மில், டிவாங்ஸோ, ராஜா நித்திலன், இரா. சிவராஜா, ஆர். தங்கமணி,எம். வஸீர், ஜஹாங்கீர், பாலா, இக்பால்,ஏ. சிவகுமார், ஆர்.எஸ். ரஸ்மியா, ஏ.கே. இளங்கோ, இளநெஞ்சன் முர்ஷிதீன் ஆகியோருடன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இலக்கிய முதுசம் அஸீஸின் பொன் விழா நிகழ்வு





( ரிம்ஸா முஹம்மத்)

சிரேஷ்ட எழுத்தாளர் கலாபூஷணம் பீ.ரீ. அஸீஸின் இலக்கியத் துறைப் பயணத்தின் 50 ஆண்டு கால நிறைவினையொட்டி அண்மையில் (18) கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் பொன் விழா நிகழ்வுகள் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 'பொன்னொளி மலர்' வெளியீடு, கிழக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வெளியீடு செய்யப்பட்ட நூலாசிரியிரின் 50 நூல்களின் திறன் நோக்குகளைக் கொண்ட 'முதுமையில் விளைந்த புதுமைகள்' நூல் வெளியீடு, மற்றும் விருது வழங்கல் நிகழ்வு ஆகிய மூன்று நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு ஆய்வாளர் எம்.எஸ்.எம். நியாஸ் தலைமை வகித்ததோடு முன்னாள் இலங்கைத் தூதுவர் ஏ.எல்.எம். லாபிர், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம். அஜித், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ரீ. கபீபுள்ளா, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சீ. எம். முஸ்ஸில் ஆகியோர் உட்பட இலக்கிய வாதிகள், ஆர்வல்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பன்னூலாசிரியர் பீ.ரீ. அஸீஸ் அவர்கள் இதுவரை செய்த இலக்கியப் பங்களிப்புகளைப் பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சஜித் இக்கட்டான நிலையில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்கவில்லை என்பதற்கு இம்ரான் பதில்



( ஐ. ஏ. காதிர் கான் )

"நாடு நிர்க்கதியாக இருந்தபோது, சஜித் பிரேமதாஸ அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முன் வரவில்லை என்ற குற்றச்சாட்டு மிகவும் அப்பட்டமானதாகும். உண்மையில் நடந்தது அதுவல்ல, இன்னும் பொய்ப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்" என, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உதவிச் செயலாளருமான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

"அத்துடன், சஜித் பிரேமதாஸவிடம் அரசாங்கத்தை ஒப்படைக்க அச்சம் கொண்டிருந்த கோத்தாபயவும் ராஜபக்ஷ ாக்களும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே ரணிலைத் தேர்த்தெடுத்தனர். சஜித் மீது இருந்த பயமே, அவர்களின் இந்தத் தீர்மானத்திற்குக் காரணம்" என்றும், அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, திருகோணமலை குச்சவெளி பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான்,

"2019 இல் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற கோத்தாபய ராஜபக்ஷ வின் பிழையான பொருளாதாரக் கொள்கையினால், நாடு அதள பாதாளத்திற்குச் சென்றது.

அத்தோடு, கொரோனா பெருந்தொற்றை முறையான ஆலோசனைகளுக்கு அமைய நிர்வகிக்காது, அந்த நோய்த்தொற்று மேலும் வீரியமடைவதற்கும் அவர்களே காரணமாகினர். இந்த விடயங்களில் சிறப்பாகச் செயற்படத் தவறிய கோத்தா அரசாங்கம், முஸ்லிம்களையும் சிறுபான்மையினரையும் இலக்குவைத்து, மிக மோசமான இனவாதச் செயற்பாடுகளை அரங்கேற்றியது. இவர்களின் முறைகேடான அரசியல் நடவடிக்கையினாலேயே, நாடு படுபாதாளத்திற்குச் சென்றது.

ராஜபக்ஷாக்கள் நாட்டைப் பிழையாக வழி நடத்துவதை உணர்ந்த இளைஞர்களும் பெரும்பான்மையின மக்களும் கிளர்ந்தெழுந்து, அவர்களுக்கு எதிராக வீதிக்கு இறங்கினர். இந்தப் போராட்டங்களையும், ஐக்கிய மக்கள் சக்திதான் ஆரம்பித்து வைத்தது.

இவ்வாறு, நாட்டுமக்கள் ராஜபக்ஷக்களைக் குற்றவாளிகளாக இணங்கண்டு, அவர்களை வீட்டுக்கு அனுப்ப முற்பற்றனர். இந்த நிலையிலும் கூட ராஜபக்ஷக்கள், அரசாங்கத்தை விட்டுச் செல்ல விரும்பவில்லை. தம்பியோடவும் முடியவில்லை. இதனாலேயே, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, முதலில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கினர். பின்னர், கோத்தாவுக்கு இதற்கு மேலும் தாக்குப்பிடிக்க முடியவில்லை என்பதனால், அவர் நாட்டை விட்டே தப்பியோடினார்.

ஆனால், உண்மையில் அவர்களே தங்களைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு காவலனைத் தெரிவு செய்துகொண்டே, எமக்கு அழைப்பு விடுப்பது போன்று நாடகமாடினர். அந்தக் காவலன், ராஜபக்ஷக்களைப் பாதுகாத்து நாட்டை விட்டும் தப்பிச் செல்லவிருந்த ராஜபக்ஷக்களை, தேர்தலில் போட்டியிடும் அளவுக்குக் கொண்டு வந்துள்ளார். அந்த நேரத்தில், சஜித் பிரேமதாஸ பிரதமராக ஆகியிருந்தால், இன்று ராஜபக்ஷக்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள்.

'சஜித் பிரேமதாஸ, நாட்டை இக்கட்டான நிலையில் பாரம் எடுக்கவில்லை' என்பது, ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷக்களும் சேர்ந்து ஆடிய அரசியல் நாடகம். ஆகவே, இதனை யாரும் நம்புவதாக இல்லை" என சுட்டிக்காட்டினார்.

# தலதா அத்துக்கோரள சஜித்துக்கு முதுகில் குத்தியுள்ளார்

## முஜீபுர் ரஹ்மான்

( ஐ. ஏ. காதிர் கான் )

"ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சி அமைக்க பிரதானமாகச் செயற்பட்ட தலதா அத்துக்கோரள, தற்போது கட்சி பிளவுபட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது என முதலைக் கண்ணீர் வடிக்கிறார்.

இறுதி நேரத்தில், கட்சியை விட்டும் செல்வதன் மூலம் அவர் சஜித் பிரேமதாஸவுக்கு முதுகில் குத்தியுள்ளார்" என, முஜீபுர் ரஹ்மான் குற்றம் சுமத்தி உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துக்கோரள, பாராளு மன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிவிட்டு, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டுச் சென்றமை தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தலைமைப் பதவி தொடர்பில் பிரச்சினை வந்தபோது, சஜித் பிரேமதாஸவுக்கு தலைமைப் பதவி வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர்களில் தலதாவும் ஒருவர். ஐக்கிய தேசியக் கட்சியில் சஜித் பிரேமதாஸவுக்கு தலைமைப் பதவி கிடைக்காத நிலையில் கட்சியில் இருந்து வெளியேறி, சஜித் பிரேமதாஸ தலைமையில் புதிய கட்சி ஒன்றை உருவாக்கவும் அவர் முன்னிருந்து செயற்பட்டார். அதனால், பாராளு மன்றத்தில் அவர் தெரிவித்த கருத்து பொய் என்பதை, அவரின் மனச்சாட்சி சொல்லும்.

ஐக்கிய தேசியக் கட்சியை பிளவுபடுத்தி, தற்போது தலைவர்கள் இரண்டு பேரும் இரண்டு முனைகளில் போட்டியிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவிப்பது, புதுமையாக இருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க தனது ஜனாதிபதி கனவுக்காக, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை, சின்னம் என அனைத்தையும் விட்டு, இனவாதிகளுடனும், திருடர்களுடனும் கைகோர்த்துக் கொண்டுள்ளார்.

அதேபோன்று, மஹிந்தானந்த, பிரசன்ன ரணதுங்க, ராஹித்த அபேகுணவர்தன போன்றவர்கள் தங்களின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ் என்றே தற்போதும் தெரிவிக்கின்றனர். அவ்வாறு இருக்கும்போது, ரணில் விக்கிரமசிங்கவுடன் நாங்கள் எவ்வாறு கை கோர்த்துக் கொள்ள முடியும் எனக் கேட்கிறோம்.

அதேபோன்று, ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது மோசடிக் காரர்கள் இணைந்து கொண்டுள்ள தாகவும் தெரிவித்திருந்தார்.

எங்களுடன் இணைந்து கொண்டுள்ளவர்களில் யாருக்காவது மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இருக்கிறதா? அல்லது நீதிமன்றத்தால் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் இருக்கின்றார்களா? என அவரிடம் கேட்கிறோம்.

ஆனால், அவர் தெரிவிக்கும் மோசடிக் காரர்கள் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவுடனேயே இருக்கின்றனர். மஹிந்தானந்த அளுத்கமகே 'டொப் டென்' என பத்துப் பேரின் பெயரைக் குறிப்பிட்டு எமது அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்களுக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டைத் தெரிவித்து வந்தார்.



அந்த 10 பேரில் ஆரம்பமாக இருந்தவர் தலதா அத்துக்கோரளவின் பெயராகும். 'தலதா மோசடிக்காரர்' எனக் குற்றம் சாட்டிய மஹிந்தானந்தவும் தற்போது ரணில் விக்கிரமசிங்கவுடனேயே இருக்கிறார்.

எனவே, கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தனித்துப் போட்டியிடும்போது, தலதா அத்துக்கோரள ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டே வெற்றிபெற்றார்.

அப்போது கட்சி பிளவுபடுவதைக் கண்டுகொள்ளாத அவர், தற்போது ஐக்கிய தேசியக் கட்சி பிளவு பட்டிருப்பதாக முதலைக் கண்ணீர் வடிக்கின்றார்" என்றார்.

# இஸ்மாலியா பாடசாலைக் கட்டிடம் இடிந்து விழும் அபாயம்

மாத்தளை கொங்காவல வீதியில் அமைந்துள்ள 1939 ம் ஆண்டில் கட்டப்பட்ட மிக பழைமையான இஸ்மாலியா பாடசாலை கட்டிடத்தின் முன்பக்க பகுதியில் நீண்ட வெடிப்பொன்று ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இதுகுறித்து இப்பாடசாலை அதிபர் மற்றும் பெற்றோர் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய கவனத்துக் கொண்டு வந்தும் இதுவரை பயன் கிட்டவில்லை யெனத் தெரிவிக் கப்படுகிறது.

250 மாணவ மாணவியர்கள் கல்வி கற்கும் இக்கட்டிடத்தில் முன்பக்கப்பகுதி உடைந்துவிழும் என்ற அச்சத்திலேயே அவர்கள் கல்விகற்கும் நிலையேற் பட்டிருக்கின்றது. இந்நிலையில் இக்கட்டிடத்தை காலம் தாழ்த்தாது உடன் சீரமை த்துத் தருமாறு பெற்றோர் சம்பந்தப் பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாதனையாளர் ஷஹ்மி



(பீ.எம் முக்தார்)

உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் அலாதியான விஷேட ஆற்றல்களுடனேதான் உலகில் பிறந்து வளர்கிறான். தன்னகத்தே கொண்டுள்ள அத்தகைய ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் போதுதான் அம்மனிதன் சாதனையாளனாகிறான். அவரை நாடும், சர்வ தேசமும் போற்றிப் புகழவே செய்கின்றன.

மனிதனிடம் பொதிந்துள்ள ஆற்றல்களை சுயமாக வெளிக்கொண்டு வருவோருமுள்ளனர் மற்றும் சிலரோ பிறரின் தூ ண்டுதல், ஒத்துழைப்பு அல்லது அனுசரணையோடு வெளிக்கொணர்வோரும் உள்ளனர். இவர்களுக்குப் புறம்பாக ஆற்றல்களை தமக்குள்ளே அடக்கி ஊமைகளாக உள்ளோரும் எங்கள் மத்தியில் உள்ளார்கள் என்பதையும் கவலையுடன் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

எப்படியோ, தன்னிடமுள்ள ஆற்றலை வெளிக்கொண்டு வருவோர் சாதனையாளராக வரலாற்றில் தடம்பதித்து போற்றிப் புகழப்பட்டுக் கொண்டே இருப்பார் என்பதில் ஐயமில்லை.

இத்தகையோர் வரிசையில், சுய முயற்சியோடும், நலன் விரும்பிகளது அனுசரணையோடும் சாதனை ஒன்றை நிலைநிறுத்த முன் வந்திருக்கிறார் ஓர் இளம் வாலிபத் துடிப்பாளர். அவர் தான் பேருவளையைச் சேர்ந்த ஷஹ்மி ஷஹீத் என்ற சாதனை தொடப்போகும் வீரராவார்.

இவர் கிட்டத்தட்ட ஐம்பது நாட்களில் சுமார் 1500 கிலோ மீற்றர் தூரத்தை நடை பவனியாக சென்று நிறைவு செய்வதே இவரால் மேற்கொள்ளப்படவுள்ள சாதனையாகும். இது இலங்கை பிரஜை ஒருவரால் மேற்கொள்ளப்படவுள்ள முதலாவது சாதனை முயற்சி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் கரையோர வழியாக முழு நாட்டையும் சுற்றி வருவதே இவர் மேற் கொண்டு வரும் சாதனை முயற்சியாகும். சாதனையாளர் பேருவளையைப்



பிறப்பிடமாகக் கொண்டவர் எற்பதால், வரலாற்றில் பல தடங்களைப் பதித்து பேரும் புகழும் பெற்றுள்ள பேருவளை மைக்கல்லை தொடுகிறது.

அரேபியர்களின் வர்த்தக தொடர்போடு, இலங்கையில் முஸ்லிம்களின் ஆரம்பக்குடியேற்றம் தொடர்ந்து நிகழ்வதோடு, பேருவளை முஸ்லிம்களின் வரலாற்றில் முதல் முதல் மைக்கல்லை தொட்டு பேரும் புகழோடும் விளங்கிவரும் பிரதேசமாகவுள்ளது.

கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையில் கால் பதித்த ஐரோப்பியரான போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்பே நாட்டின் இராணுவ முற்றுகை நடந்த நிகழ்வதோடு சீனங்கோட்டை என்ற நாமம் பூண்ட வரலாற்றுப் புகழும் பேருவளைக்கு உண்டு என்பதை எழுத்தாளர் அஷ்ரப் யூஸ/ப் எழுதிய ”வேர்கள்” என்ற நூல் சான்று பகர்கிறது.

பின்னர், பேருவளை கடற்கரையை வந்தடைந்த யெமன் தேசத்தின் இளவரசர் சுல்தான் ஜெலாலுத்தீனின் வருகையால், இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான மஸ்ஜிதுல் அப்ராரின் தோற்றம், முஸ்லிம்களின் முதல் குடியேற்றம் என்று பிரசித்தம் பெற்றுள்ள ஊர் என்பதும் வரலாறாகும்.

இதே போன்று, இரத்தினக்கல் வர்த்தகமும், காலத்திற்கு காலம் தோன்றும் கொடைவள்ளல்கள், மேலும் சமூக கலை, கலாசாரம், கட்டிடக் கலைஞர்கள், விளையாட்டு உள்ளிட்ட துறைசார் சாதனையாளர்களின் பங்களிப்புகள் என்று பேருவளை உள்நாட்டிலும், சர்வ தேச மட்டத்திலும் புகழ் பூத்துக்குலுங்கும் நகராகத் திகழ்கிறது. இன்று ஷஹ்மியின் சாதனையால் மேலும் மெருகேற்றப்படுகிறது.

ஷஹ்மி ஷஹீத் தனது 25 ஆவது வயதில் இந்த சாதனையை நிலைநிறுத்தப் போகிறான். பேருவளை, சிமி ஹோல்டிங் நிறுவனத்தின் பிரதான அலுவலக வளாகத்திலிருந்து, பயணத்தின் பூரண அனுசரணையாளரும்,சிமி மோல்டிங் நிறுவன உரிமையாளருமான அல்ஹாஜ் இஜ்லாம் யூசுஃப் அவர்களின் வாழ்த்தோடு,இலங்கையின் தென் முனையை நோக்கி தனது நடை பவனியை 2024, ஜூலை 13 ஆம் திகதி ஆரம்பித்துள்ளார்.

காலி வீதியூடாக காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனராகலை, கிழக்கிலங்கையின் பொத்துவில், அம்பாறை, மட்டக்களப்பு, அக்கரைப்பற்று, கல்முனை, திருகோணமலை, வவுனியா, முல்லைதீவு, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, மொரட்டுவை, பாணந்துறை, களுத்துறை வழியாக கால்நடையாகவே பயணித்து புறப்பட்ட தனது பிறந்தகத்தை இன்னும் சில நாட்களில் வந்தடைய உள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 30 கிலோ மீற்றர் வரை நடந்து 50 நாட்களில் தனது 1500 கிலோ மீற்றர் தூரத்தைப் பூர்த்தி செய்வதே இவரின் இலக்காகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போக்குவரத்து சாதனம் கண்டு பிடிக்கப்பட முன்னரான கற்கால மனிதன் மிகவும் தூர இடங்களுக்கெல்லாம் கால்நடையாகவே சென்றுள்ளதை நாம் கற்கால வரலாற்றேடுகளில் தான் படித்திருக்கிறோம். ஆனால், நவீன யுகத்தில் அத்தகைய செயற்பாடு மனிதனால் நிகழ்த்தப்படும் போது இன்று அது சாதனையாகப் போற்றப்படுகிறது. ஆனால், அன்றும் இன்றும் வித்தியாசம். காடுகள் அடர்ந்த பாரிய மர நிழலிலே தான், அதுவும் மண் பாதையூடாகவே அன்றைய நடை பவனி அமைந்துள்ளது.

இன்று மர நிழல்கள் இல்லாத கற்பாதை ஊடாகவே ஷஹ்மி ஷஹீத் சாதித்துக் கொண்டிருக்கிறார். தன்னந்தனியாக தற்துணிவோடு நடைபயிலும் நிலை, மேலே சுட்டெரிக்கும் சூரியனின் சூடு, சூடேற்றப்பட்ட தார் வீதியின் அனல் கக்கும் உஷ்ணம், இவை ஒரு புறம். மறுபுறத்தில் அவ்வப்போது பொழியும் மழை. இப்படி இயற்கையின் தற்ப, வெப்பங்களையெல்லாம் தாங்கிக் கொள்ள வேண்டிய மனோநிலையோடே இவரின் நடை சஞ்சாரம் நகர வேண்டியுள்ளது.

இலங்கையின் பெயர் போன காட்டு வனப் பகுதிகளையும் கடந்தே செல்ல தற்துணிவு இருந்தால் தான் முடியும். அதுவும் இன்று மனிதனை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. காட்டு யானைகளின் நகரப்பிரவேசம். இந்தப் பீதிக்கும் முகங் கொடுக்க வேண்டிய சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பிறரது நடைப்பயணத்தின் போது ஊண், உறக்கம், இயற்கை உபாதைகள் என்று தன் வழக்கத்திற்கு மாறான புது அனுபவங்களையும் பெற வேண்டிய நிலைக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்திலையில் ஷஹ்மி பிறந்து வளர்ந்து வந்த வாழ்க்கை பின்னணியை சற்று சீர்த்தூக்கி அலசுவோம்.

பேருவளையில் வறிய குடும்பம் ஒன்றில் பிறந்த இவர், இளம் பருவத்திலேயே தந்தையை இழந்துள்ளார். இதனால் இவரது குடும்ப வண்டி, மேடு - பள்ளம், மலை - மடு எல்லாம் தாண்டியே பயணித்துக் கொண்டிருக்கிறது. இந்த கரடு முரடான பயணம் இவரது சாதனை முயற்சிக்கு இப்போது பக்க பலமாக கைகொடுத்துக் கொண்டிருக்கிறது என்றே செல்லலாம். தந்தை எனும் துடுப்பறுந்த படகை செலுத்திய அனுபவம் இவருக்கு துணை நிற்கிறது. அத்தோடு நடையின் போது மாகாணம், மாவட்டம், மாநகரம், நகரம், பட்டிணம், கிராமம், குக்கிராமம் என்றெல்லாம் கடந்து செல்கையில் அந்தந்த இடங்களில் வசிக்கும் பல்லின மக்களாலும் மகத்தான வரவேற்புக்கிடைப்பது இவருக்கு மேலும் உந்து சக்தியை கொடுக்கிறதென்பதை அவ்வப்பகுதி ஊடக செய்தியாளர்களின் அறிக்கையூடாக உணர முடிகிறது.


எத்தகைய, இன, மத வேறுபாடுகளையும் தாண்டி இவர் சந்திக்கும் பிரதேச சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் இவருக்கான உபசரிப்புக்களை சம்பிரதாய பூர்வமாக வழங்கிக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. குறிப்பாக வட-கிழக்கு மாகாணம் உள்ளிட்ட தமிழ் முஸ்லிம் ஊர்களில் எல்லாம் மிகவும் பரந்த உற்சாகத்துடன் தமிழ்,முஸ்லிம்களால் நன்கு உபசரிக்கப்பட்டார் தற்போது இவர் புத்தளம் மாவட்டத்தை வந்தைந்துள்ளார்.

மேலும், ஐவேளை தொழுகைகளையும் இவர் போகும் இடங்களில் உரிய நேரத்தில் நிறைவேற்றவும் தவறாது ஆண்மீக பலத்தையும் நிலை நாட்டி வருவதும் இவரின் முயற்சியின் மற்றொரு சிறப்பம்சமெனலாம்.

கடந்த காலமெல்லாம் கஷ்டங்கள் மட்டுமே எனவிருந்த இவர் வாழ்க்கையின் திருப்புனையை தேடிக்கொள்ள, இவரது அனுசரணையாளர் சிமி ஹோல்டிங் நிறுவன உரிமையாளர் அல்ஹாஜ் இஜ்லான் யூசுஃப் வழியமைத்துக் கொடுத்தமை, அவரின் தாராளத் தன்மையைப் புடம் போட்டுக் காட்டுகிறது.

மேலும்,இவரது இச்சாதனைப் பயணத்தை வெற்றிகரமாக முடித்து,அடுத்தகட்ட திட்டமாக வெளிநாடு ஒன்றில், இதே 1500 மு.ஆ தூரத்தை வெறும் 25 நாட்களின் கடந்து உலக சாதனை படைக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.






# நிஷா மன்சூரின் பின்தங்கிய படையணியிலிருந்து ஓர் அபயக்குரல்

நாச்சியாதீவு பர்வீன்

கண்ணன் விஸ்வகாந்தி

கவிஞர் நிஷா மன்சூர் அவர்களின் மூன்றாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும்.

கவிஞர் ஹாமீம் முஸ்தபா அவர்களின் சிறப்பான மதிப்புரையுடனும் அழகான அர்த்தம் பொதிந்த அட்டைப்படத்துடனும் வெளிவந்துள்ளது

பின்தங்கிய படையணியிலிருந்து ஓர் அபயக்குரல் கவிதை நூல்.

தொகுப்பில் நூற்றி ஐம்பது கவிதைகள் இருக்கின்றன.

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் பாடல்கள், சமயம் சார்ந்த கவிதைகளில், தொகுப்பெங்கும் வருகிறது.

கவிதைகளின் பாடுபொருள் காதல், காமம், சமூக நீதி, சமயம், குழந்தைகள், சுய விமர்சனம் எனப் பரந்து இருக்கின்றது. அழகான படிமங்கள் தொகுப்பெங்கும் காணக்கிடைக்கிறது.

அடர்வனப் பொதும்பு கவிதை ஒரு சுய அலசல். மயிலும் இருக்கிறது, ராஜாளியும் இருப்பதால், 'மற்றபடி நானொரு நடமாடும் அடர்வனம்' என்கிறார் கவிஞர்.

உம்மத்தே வஸதெனும் சமநிலைச் சமுதாயம் கவிதை, தன்னுடைய சமயத்திலிருக்கும் போலிகள் குறித்த விமர்சனம்:

'சூரியன் பிருஷ்டத்தைச் சுட்டபோது
திகைத்தெழுந்து
ஸ்டேட்டஸ் போட்டான்
முஸ்லிம்களைக் கண்டு இஸ்லாத்தை
எடை போடாதீர்கள்
எங்கள் மார்க்கம் பரிசுத்தமானது'

கவிதைத் தொகுப்பின் தலைப்புக் கவிதையான 'பின்தங்கிய படையணியிலிருந்து ஓர் அபயக்குரல்' கவிதை, பேருண்மையை அடைவதற்கும், லௌகீக வாழ்விற்குமான போர். இதில் கவிஞர் பின்தங்கிய படையணியிலிருந்து அபயக்குரல் கொடுக்கிறார்:

'விரைந்து முன்னேறும் சூபியின்
கடைக்கண் பார்வையை
யாசித்தபடி
பீற்றற் துருத்திதனை தூக்கிச் சுமந்து
கொண்டிருக்கிறேன்'

தேடலின் மற்றும் ஒரு உதாரணம் நான் கவிதை:

'அடிவாரத்தில் மேய்ந்து
கொண்டிருக்கும்
வெள்ளாடு நான்'

போதாமைகளின் பெருநகரம் ஐந்து தொடர் கவிதைகளில், போதாமைகளால் இளைப்பாறிக் கொள்ளும்
உன் முத்தத்துக்கோ
மழைநேரத்து மண்வாசனை'

'சொல்ல முடியாத வார்த்தைகள்
கண்களில் கோர்த்து நிற்க
வெல்லமுடியாத மனசை
கோபச் சிறையிலிடுகிறோம்'

'ஓசைகளற்ற கொலுசுகளின் துயரம்
மின்னும் மூக்குத்திக்களுக்கில்லை
மின்னும் மூக்குத்திக்களுக்கில்லை'

'நீ என்பது நினைவுச்சுழல் எனில்
நின்னைக் காண்பது நிகழ்கனா'

'எல்லா தேன்மொழிகளும் திருமணப்
பத்திரிகையை
அழுது வீங்கிய கண்களுடன்
நடுங்கும் கரங்களில் திணித்துவிட்டுச்
செல்கிறார்கள்'

வாக்குமூலம் தொடர் கவிதைகளில் சுயதேடல்:

'எனினும் நேற்றின் அழுக்குகளோ
இன்றைய அழுக்குகளோ
நினைவடுக்குகளில் ததும்பி
விழுமெனில்
நாளைக்கும் வரமுடியாமற் போகலாம்'

காமத்தை அழகான வரிகளில் விவரிக்கின்றன பல கவிதைகள்:

'இவ்வுலகின் சகல இசைக்கருவிகளும்
சேர்ந்திசைக்கும்
உன்னத இசையில் நம் சுயத்தைத்
தொலைக்கிறோம்
அல்லது மீட்டெடுக்கிறோம்'

இச்சமூகத்தின் மீது எவ்வளவு அவநம்பிக்கையுடன் இருந்தாலும், நம்பிக்கையையும் விதைக்கிறார் கவிஞர்:

'அப்படியொன்றும் மோசமில்லாத
ஒரு தேநீர்
எங்காவது கிடைத்து விடுகிறது
அப்படியொன்றும் மோசமில்லாத
ஒரு அறையும்
ஒரு வாகனமும்
ஒரு பயணமும்
ஒரு தோழமையும்
ஒரு வழித்துணையும்
எப்படியாவது அமைந்துவிட
அப்படியொன்றும் மோசமில்லை
இந்த வாழ்க்கை'

வரம் கவிதை குழந்தைகளின் உலகில் கவிஞர்:

'ஏந்தும் கரங்களை வெறுங்கையாக்க
விரும்பாத
ரட்சகனின் வாக்கை
தேவதைகள்தான் எவ்வளவு இலகுவாக
நிறைவேற்றி விடுகிறார்கள்'

பாஹிமாவுக்கான கவிதை ஒரு மகளதிகாரம்:

'அசந்து உறங்கும் தகப்பனின்
ஆடைகளைப் சரிசெய்து நகரும்
மகளுக்கு ஒரு தாயின் தோரணை' குறுங் கவிதைகளில் இயற்கையை இழந்த வெறுமை:

'மரித்த காடுகளின் சிதிலங்கள் மிதிபடும்
நகரமெங்கும் தென்படுகின்றன
மரம் வளர்க்க வலியுறுத்தும் பதாகைகள்'

படிமங்களின் அழகில் ஜெயராம் ஹோட்டல் கவிதை.

விரிந்து கொண்டே செல்லும் நகரத்தில் மூச்சுத் திணற வசிக்கும் கவிஞனின் ஆற்றாமை. திடுக்கென்று அதிர்வலைகள் படிப்பவர்கள் மனதில்:

'பள்ளிகளில் வன்புணர்வு செய்யப்படும்
சிறுமிகளின் கூக்குரல்கள் விண்ணைப்
பிளக்கும் வளர்ச்சி கோஷங்களில்
அமுங்கி மறைகின்றன அடையாளமற்று'

பூ மலரும் தருணத்தில் கவிதையில் நிகழ்கால வாழ்வின் கொடுமையை விவரிக்கிறது:

'எங்கோ ஒரு பதின்மவயதுச் சிறுமி
தன் வயிற்றுச் சிசுவைச் சுரண்டியெடுத்து
குப்பையிலிட்டுக் கடந்துபோகிறாள்'.

பெருநகரத்தின் நவீன வாழ்வில் இது சகஜமான ஒன்றாக இருக்கக் கூடும். ஆனால் படிக்கும் நமக்கு மிகப்பெரிய அதிர்வைக் கடத்துகிறது.நமது கலாச்சாரம் எங்கே செல்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் இருக்கிறது.

காதல் கவிதைகளில் இவரா அவர் என்னுமளவிற்கு சிறப்பான வரிகளுடனான கவிதைகள்:

'எந்நேரமும் நினைவுவைத்து




பற்றுச்சீட்டுகளில் நெளியும் சர்ப்பம் கவிதை கம்பெனி முதலாளிகளின் மனநிலையைச் சொல்கிறது:

'மானுட மாமிசம்
அப்படியொன்றும் முன்னம் போல
சுவையாக இல்லையெனச் சலித்துக்
கொள்கிறோம்'

நாற்பதுகளின் பூதம் கவிதை முதுமையை நெருங்கும் பெண்களின் மனநிலை.

இப்படியாக பல சிறப்பான கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன.

சமயம் சார்ந்த கவிதைகளைத் தனியாக ஒரு தொகுப்பாகக் கொண்டு வந்திருக்கலாம். நமக்கு சூபிக் கவிதைகளை தனியாக படிக்க வாய்ப்பு கிடைத்திருக்கும்.

தேவையற்ற கவிதைகளை கருணையின்றி நீக்கி இருக்கலாம்.

குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களின் பாடல்களைத் தேடிப் படிக்கத் தூண்டும் ஒரு தொகுப்பு.

சிறப்பான வாசிப்பு அனுபவம்.

# அடங்க மறு

**சிரம் பணிக...**
**கட்டளை பிறக்க-**

**நான் நெருப்பு**
**மண்ணுக்குப்**
**பணிய மாட்டேன்**

**நான் உயரம் நோக்கி**
**எழுந்து எரிபவன்**
**மண்,**
**தாழ்ந்து கிடக்கும்**
**வஸ்து**

**என் சிரம் பணிவது**
**ஒருவனுக்கே அன்றி**
**மண்ணுக்கு அல்ல..**

**குதர்க்கம் புரிந்து**
**சாபம் பெற்று,**
**விரட்டப்பட்டு**
**வீழ்ந்தது.**

**வாழ்நாள் முழுவதும்**
**வரம் பெற்று**
**வாழ்கிறது**

**அடங்க மறுத்தலின்**
**அதி ரகசியம்**
**ஆரறிவர்?**

– தீரன் –

# இதுவரை $131 பில்லியன் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ள சவூதி அரேபியா!

மன்னர் அப்துல் ரஹ்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களது காலம் தொட்டே மனிதாபிமான உதவிகளை உலகம் பூராகவும் செய்து வருவதில் சவூதி அரேபிய இராச்சியம் முன்னனி வகித்து வருகிறது. இந்த நாமத்தை இன்றும் சவூதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களும் பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களும் கட்டிக் காத்து வருகின்றனர். உலக மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கும் கடினமான நேரங்களில் கைகொடுக்கும் நோக்கோடுமே இந்த தொண்டு மற்றும் மனிதாபிமான உதவிகளை சவூதி அரசாங்கம் செய்து வருகிறது.

1975 ஆம் ஆண்டிலிருந்து 2024 வரையான காலப்பகுதிக்குள், சவூதி அரேபியா 171 நாடுகளுக்கு தோராயமாக 131 பில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாகவும் உதவிகளாகவும் வழங்கியுள்ளதோடு, 7090 மனிதாபிமான, நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டின் முடிவில், இவ்வாண்டில் உலகளவில் மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை வழங்கும் நாடுகளுல் நான்காவது பெரிய நன்கொடை வழங்கும் நாடு என சவூதி அடையாளப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டில் மாத்திரம்




1.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதிவிகளுக்காக சவூதி செலவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய நாடுகளின் நிதி கண்காணிப்பு சேவையின் (FTS) படி, வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் பேரழிவுகள் மற்றும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்கு பிற நாடுகள் வழங்கும் அனைத்து உதவிகளிலும் இந்த தொகை 3.6% ஆகும்.

இந்த மனிதாபிமான முயற்சியை மேலும் மேம்படுத்தும் வகையில், 2015 ஆம் ஆண்டு மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையம் (KSrelief) நிறுவப்பட்டது. அது நிறுவப்பட்டது தொடக்கம், 100 நாடுகளில் 3009 உதவித் திட்டங்களை மேற்கொண்டுள்ளதோடு 6.94 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பெறுமதியுள்ள உதவிகளை வழங்குகியுள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து மில்லியன் கணக்கான வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள் சவூதியின் உதவிகளால் பயனடைந்துள்ளமை மறுக்கமுடியாத உண்மையாகும்.

உலகின் முதன்மையான மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடிய நாடு என்ற சவூதியின் நிலையை உயர்த்த, சவூதி உதவி தளம், சவூதி சர்வதேச தன்னார்வ இணையதளம் மற்றும் சஹேம் மின்னணு நன்கொடை தளம் போன்ற தளங்களும் அந்நாட்டு அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளன.

முளுசநடநைக ஆனது மனிதாபிமான உதவிகளை உலக நாடுகளுக்கு வழங்குவதில் குறிப்பாக யெமன், காசா, சிரியா மற்றும் துருக்கி போன்று நாடுகளுக்கான உதவிகளில் முன்னணியில் உள்ளது. இலங்கைக்கும் பல மனிதாபிமான உதவித் திட்டங்களை வழங்கி வெற்றிகரமாக செய்து முடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அதில் மிக முக்கியமாக அன்மை நாட்களில் இலவச கண் அறுவை சிகிச்சைத் திட்டத்தை இலங்கை மக்களுக்காக நடாத்தியமை யாவரும் அறிந்ததே.

யெமன் நாட்டைப் பொருத்தமட்டில் முளுசநடநைக, கண்ணிவெடி அகற்றலுக்கான சவூதி திட்டம் (MASAM), செயற்கை மூட்டு மையங்கள் மற்றும் ஆயுத மோதலுடன் தொடர்புடைய குழந்தைகளுக்கான மறு ஒருங்கிணைப்புத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. யெமன் அகதிகளை சவூதிக்கு வரவேற்று, அவர்களுக்கு சுகாதாரம், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குகியிருக்கிறது.

காசாவில் மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்ள, KSrelief வான் மற்றும் கடல் மார்கங்களினூடாக 185 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவப் பொருட்களை விநியோகித்துள்ளது. ஜோர்தானில் உள்ள 150 காசான் மக்களுக்கு 300 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான புற்றுநோய் சிகிச்சைக்கு இந்த மையம் நிதியளித்தது.

சிரியா மற்றும் துருக்கியில் ஏற்பட்ட பேரழிவு நிலநடுக்கங்களுக்கு உதவி செய்யும் வகையில், முளுசநடநைக செவிப்புலன் மறுசீரமைப்பை மற்றும் செவிப்புலனுக்கான இயந்திரம் வழங்குதல் தன்னார்வத் திட்டத்தை நடைமுறைப் படுத்தியது. இது உலகின் மிகப்பெரிய தன்னார்வ மனிதாபிமான முயற்சியாக கருதப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையானது நவம்பர் 24ம் திகதியை, சவூதி அரேபியவின் பரிந்துரையின் பெயரில் உலக ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் தினமாக ஏற்றுக்கொண்டது. இது மனிதாபிமான உதவிகளை உலகுக்கு வழங்குவதல் சவூதி அரேபியாவின் ஆர்வத்துக்கான தக்க சான்றாக அமைகிறது. சவூதி அரேபியா ஒட்டிப் பிறந்த இரட்டையர்களை பிறிக்கும் இத் திட்டத்தின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், KSrelief நவம்பர் மாதம் ரியாத்தில் ஒட்டிப்பிறந்த இரட்டையர்களுக்கான சர்வதேச மாநாட்டையும் நடாத்தவுள்ளது.

இந்த முயற்சிகள் உலக மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரணத்தில் சவுதி அரேபியாவின் முக்கிய பங்கை எடுத்துக்காட்டுகின்றன, இது இராச்சியத்தின் விஷன் 2030 இலக்குகளில் ஒன்றாகும்.

(காலித் ரிஸ்வான்)



# முத்து விழா காணும் ரவூப் ஹக்கீம்

## நாடாளுமன்ற வாழ்வில் மூன்று தசாப்தம் நிறைவு

**- எம்.என்.எம்.யஸீர் அறபாத் -**

இலங்கை அரசியலில் மூத்த அரசியல்வாதி, சிறந்த இராஜதந்திரி, சர்வதேச அரங்கில் அறியப்பட்ட சிறுபான்மை இனத்தலைவரான கௌரவ ரவூப் ஹக்கீம் பாராளுமன்றத்திற்கு பிரவேசித்து முப்பது வருடங்களை பூர்த்தி செய்து முத்து விழா காண்கிறார்.

இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் முகவரி பெற்றுக்கொடுத்த உரிமைக்குரலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இஸ்தாபகத்தலைவர் மர்/ஹும் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்களோல் அறிமுகமாகிய ரவூப் ஹக்கீம்,1988ம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து தலைவர் அஷ்ரஃப்பின் வேண்டுகோள்களின்படி சிறப்பாகச்செயற்பட்டது மாத்திரமின்றி, கட்சி வளர்ச்சிப்பணிகளிலும் அயராது பாடுபட்டார்.

ரவூப் ஹக்கீமிடமிருந்த தலைமைத்துவ விசுவாசம், மும்மொழி அறிவு, துடிப்பான செயற்பாடு எனப்பல நற்குணங்கள் காரணமாக 1992ம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டதுடன், கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது அவர் தலைமைக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார்.

ரவூப் ஹக்கீமின் தலைமைத்துவ விசுவாசத்திற்கு எடுத்துக்காட்டாக, அன்றைய தலைவரின் கூற்றை இங்கு பார்க்கலாம்.

“என்னுடைய ஓயாத அரசியல் வாழ்க்கையில், எனக்கு கிடைத்த ஆறுதல்களில் ஒன்று ரவூப் ஹக்கீம்” - எம்.எச்.எம்.அஷ்ரஃப்.

ரவூப் ஹக்கீமின் ஆளுமைப்பண்புகள், கட்சியின் செயலாளராக சிறப்பாகச்செயற்பட்டமை, கட்சி வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்பவற்றோடு தலைமைத்துவ விசுவாசம் கருத்திற்கொள்ளப்பட்டதால் 1994ம் ஆண்டு ரவூப் ஹக்கீமின் 34வது வயதில் தேசியப்பட்டியலூடாக பாராளுமன்ற உறுப்புரிமை அஷ்ரஃப்பினால் வழங்கப்பட்டது. அத்தோடு, பாராளுமன்றத்தில் குழுக்களின் பிரதித்தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

1999ம் ஆண்டு தலைவர் அஷ்ரஃப் தூரநோக்கோடு தேசிய ஐக்கிய முன்னணியை ஆரம்பித்தார். முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளராக இருந்த ரவூப் ஹக்கீமை அப்பதவியிலிருந்து அகற்றி, தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளராக பதவி மாற்றம் செய்தார்.

2000ம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி மரச்சின்னத்தில் பாராளுமன்றத்தேர்தலில் அஷ்ரஃப்பினால் ரவூப் ஹக்கீம் களமிறக்கப்பட்டார். வடக்கு, கிழக்கிற்கு வெளியே பிரதான அரசியல் நீரோட்ட தேசிய கட்சிகளில் அல்லாது ஒரு முஸ்லிம் கட்சியிலிருந்து ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெற்றமை அதுவே முதல் தடவையாகும்.

2000ம் ஆண்டு பெருந்தலைவர் அஷ்ரஃப்பின் திடீர் மறைவைத்தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸிக்குள் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மற்றும் பேரியல் அஷ்ரஃப் ஆகிய இருவரும் கட்சித்தலைமைத்துவத்திற்கு இணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

அதன் பின், சிறிது காலத்திலேயே சில முரண்பாடுகள் ஏற்பட, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக பேரியல் அஷ்ரஃப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீமும் நியமிக்கப்பட்டார்கள்.

2000ம் ஆண்டு ரவூப் ஹக்கீம், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், முஸ்லில் சமய விவகாரங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக சந்திரிக்கா அம்மையாரின் தலைமையிலான அமைச்சரவையில் நியமிக்கப்பட்டார்.

2001ம் ஆண்டு மாவனெல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின்னணியில் அரசசார்பு அரசியல்வாதிகள் இருந்ததனை ஹக்கீம் வெளிப்படையாகவும் பலமாகவும் கண்டித்ததன் காரணமாக அமைச்சரவையிலிருந்து சந்திரிக்கா அம்மையார் ரவூப் ஹக்கீமை இரவோடிரவாக அதிரடியாக நீக்கினார். அதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியதனால் சந்திரிக்கா அரசு பெரும்பான்மையை இழந்து தடுமாறி கவிழ்ந்தது.

2001ம் ஆண்டு ஒக்டோபரில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது. அதே ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கண்டியில் போட்டியிட்டு ரவூப் ஹக்கீம் மீண்டும் அங்கு வெற்றி பெற்றார்.

பாராளுமன்றத்தேர்தல் வெற்றியின் பின்னர் அமைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, முஸ்லிம் விவகார மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

2004ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் அதாவுல்லாஹ், ஹறீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி, சந்திரிக்கா அணியோடு இணைந்து ஒரு சவால்மிக்க சூழலை கிழக்கு அரசியலில் தோற்றுவித்த போதும், மிகவும் துணிச்சலோடு களத்தில் இறங்கிய ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு அமோக வெற்றியை ஈட்டி, மீண்டும் பாராளுமன்றத்திற்குத்தெரிவு செய்யப்பட்டார்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை இழந்ததன் காரணமாக பங்காளிகட்சியான முஸ்லிம் காங்கிரஸ/ம் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது.

2007ம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு வழங்கப்பட்டது. அதே வருடம் டிசம்பர் மாதம் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

2008ம் ஆண்டு முதன் முதலாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது.

அன்று ஹிஸ்புல்லாஹ் திடீரென கட்சி மாறியதால் உருவான சவால்மிக்க சூழலை தைரியமாக எதிர்கொண்ட தலைவர் ரவூப் ஹக்கீம், தனது பாராளுமன்ற ஆசனத்தை இராஜினாமாச்செய்து விட்டு திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்றார்.

கிழக்கு மாகாண சபை ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கைப்பற்றியதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மாகாண சபை உறுப்பினர் பதவியை விட்டு விலகி ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப்பட்டியலூடாக மீண்டும் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

2010ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியோடு இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதன் காரணமாக நீதியமைச்சராக ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷ அரசின் இனவாதச்செயற்பாடுகள் முஸ்லிம் சமுகத்தை மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கி இருந்ததனால் அரசுக்குள்ளிருந்து கொண்டே சமூகத்திற்கான போராட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்கின்ற சாணக்கியமான நகர்த்தல்களை மேற்கொண்டிருந்த ஹக்கீம், 2014ம் ஆண்டு இறுதிப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அன்றைய எதிரணி பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்.

2015ம் ஆண்டு மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2015ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. இதன் போது ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.



நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரவையில் நகரத்திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சராக இருந்தார். அந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற 52 நாள் அரசியல் குழப்பத்தின் பின்னர் ரவூப் ஹக்கீமுக்கு முன்னைய அமைச்சுக்களுடன் சேர்த்து உயர்கல்வியமைச்சும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகம் நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் போது அமைச்சுப்பதவிகளைத்துறந்து வெளியேறி துணிச்சலுடன் சவால்களுக்கு முகங்கொடுத்து வெற்றிகண்டவர் ரவூப் ஹக்கீம்.

ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தை அழிக்க அக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்திய போது கட்சியை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு அரசாங்கத்தில் இணைந்து கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் அவற்றிற்கும் ரவூப் ஹக்கீம் முகங்கொடுக்க நேர்ந்தது.

2020ம் ஆண்டு பாராளுமன்றத்தேர்தலில் கண்டி மாவட்டத்தில் சஜித் பிரமதாசா தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டு முதன்மை வெற்றியாளராக வெற்றி பெற்றார். பொதுஜன பெரமுன கட்சி ஆட்சியைக்கைப்பற்றியதால், எதிர்க்கட்சி அரசியலை முன்னெடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாய மக்களால் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், அவரின் மீதமான காலத்திற்கு ராஜபக்ஷ மொட்டு அணியினர் தங்களை பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றப் பெரும்பான்மையூடாக நியமித்தார்கள்.

இதன் பின்னரான ஆட்சியில் நாட்டை வங்குரோத்து அடையச்செய்த ராஜபக்ஷக்களையும், மொட்டு அணியினரையும் பாதுகாக்கும் நோக்கில் செயற்பட்டு நாட்டை சர்வதிகார போக்கில் கொண்டு சென்றமை, கட்சிகளை உடைத்து ஆள் பறிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடல், தேர்தல்களை நடத்துவதில் கரிசணை காட்டாது, அவைகளை ஒத்திவைப்பதில் ஆர்வமாகச் செயற்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதியோடு இணைந்து பயணிப்பதைத் தவிர்ந்து கொண்டு, எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு, எந்த எதிர்க்கட்சித்

தலைவரும் முன்னெடுக்காத தேசத்தின் நலனுக்காக சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களில், மூச்சுத்திட்டம், பாடசாலைகளுக்கு பேரூந்து, நவீன வகுப்பறைகள் வழங்கும் திட்டம் எனப்பல்வேறு திட்டங்களை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச முன்னெடுத்துக் கொண்டிருப்பதாலும், அவரை பலப்படுத்தி நாட்டைக்கட்டியெழுப்பும் செயற்றிட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது.

இம்மாதம் 25ம் திகதி ரவூப் ஹக்கீம் தனது பாராளுமன்ற வாழ்வில் 30து வருடங்களைப்பூர்த்தி செய்து ”முத்து விழா” காணும் சந்தர்ப்பத்தில், 30து வருட பாராளுமன்ற அனுபவத்தின் வெளிப்பாடாக இவ்வாறான தீர்மானங்கள் நோக்கப்படுகின்றன.

உதயம் E-Paper - uthayam.lk

2024 AUGUST 26 - MONDAY

## மனநலமும் ஆலோசனையும் 45

# எங்கள் மீதான அன்பு

நம்மில் சிலர் அன்புக்காக ஏங்குகிறார்கள்.

இன்னும் சிலர் தங்களுக்கு உறவுகள் இல்லை என்று கவலைப்படுகிறார்கள். மற்றவர்களின் அன்பும் உறவும் இல்லாமல் வாழவே முடியாது என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

இவை எல்லாம் என்றைக்கோ ஒரு நாள் பல பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று நம்மில் பலர் புரிந்து கொள்ளவில்லை.

அன்பும் உறவும் எங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டுமே, அவை எங்கள் முழு வாழ்க்கையும் அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும்.

அன்பும் உறவும் மட்டும் தான் வாழ்க்கை என்று நினைக்கத் கூடாது.

எங்கள் வாழ்க்கையில் அர்த்தமுள்ள பல அம்சங்கள் உள்ளன.

எங்கள் ஆற்றல்கள்,

எங்கள் தனித்துவமான பண்புகள்,

எங்கள் பயனும் பெறுமதியும்,

எங்கள் எண்ணங்கள்,

இந்த உலகில் நாங்கள் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் விடயங்கள்,

எங்கள் நட்புகள்,

எங்கள் குடும்பம் என முக்கியமான பல அம்சங்கள் உண்டு.

எங்கள் ஆர்வங்களும் ஆற்றல்களும் எங்களுக்கு முக்கியமானவை,

எங்கள் தகுதியும் தரமும் எங்களுக்கு அவசியமானவை.

எங்கள் ஆசைகளும் ஆர்வங்களும் புதிய விடயங்களை ஆராயவும், கற்றுக்கொள்ளவும் வழிவகுக்கும்.

எமது அறிவும் ஆற்றலும் நாங்கள் வளரவும் எங்களை இந்த உலகை நோக்கி விரிவுபடுத்தவும் வழிவகுக்கும்.



நாங்கள் உண்மையாகவே எங்கள் சொந்த வாழ்க்கையை உருவாக்க எத்தனிக்கும் போது..

நாங்கள் நேர்மையான, அழகான, ஆரோக்கியமான ஒரு வாழ்க்கை வாழ வாய்ப்புகளை உருவாக்கித் தரும்.

தனிமையை நீக்கி தைரியத்தை தந்துவிடும்.

அன்பில் தங்கியிருக்காமல் தரமான வாழ்க்கை வாழ வழிகாட்டிவிடும்.

மற்றவர் உறவில் உறைந்துபோகாமல்

நாங்களே எங்களை நேசிக்கும் தன்மையை உருவாக்கிவிடும்.

நம் மீதான அன்பு மிகவும் இன்றியமையாதது என்பதை நாம் அறிய வேண்டும். நாம் மற்றவர்களை நேசிப்பதற்கு முன், நம்மை நேசிக்க ஆரம்பிக்க வேண்டும். நாம் நம்மை உண்மையாக நேசிக்கவில்லை என்றால், யாரிடமிருந்தும் உண்மையான அன்பைப் பெற முடியாது.

நாம் நம்மை நேசிக்கத் தகுதியானவர்கள்.

நாம் நம்மை செதுக்கிக் கொள்ள ஆற்றல் பெற்றவர்கள்.

ஏமது குறைபாடுகளை, எமது உள்ளார்ந்த மனிதநேயத்தை ஏற்றுக்கொள்ளவும் கற்றுக்கொள்ள ஆசையோடு உழைக்க கடமைப் பட்டவர்கள்.

அப்படியானால், நம் எமது குறைகளை, பலவீனங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டும்.

எமது இதயத்திலும் ஆன்மாவிலும் இருக்கும் விரிசல்களைத் அகற்றி மகிழ்ச்சியாக இருக்க தயராக வேண்டும்.

நம்மை நாமே நேசிக்க கற்றுக்கொள்வதன் மூலம் இதை இலகுவாக அடையலாம். ஏனென்றால் நாம் அனைவரும் சுய ஏற்றுக்கொள்ளலுக்கு, சுய அன்புக்கும் தகுதியானவர்கள்.

அன்பும் உறவும் எங்களுக்குள் இருந்து ஊற்றேடுகட்டும்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

---




பயாஸா பாஸில்

# உறவில் விரிசல்:

## களையவேண்டிய பத்து காரணங்கள்...

செல்போன் வருகைக்கு முந்தைய காலத்தில் காதலை சொல்லவே ஆணுக்கும் பெண்ணுக்குமான தயக்கம் நிறைய இருக்கும். பார்வையாலேயே பல நாட்கள் ஓடும். அதன் பிறகு ஒருவழியாக காதலை சொல்லி அது கல்யாணத்தில் முடிந்தால் அவர்களுக்கு இடையிலான புரிதல் நிறைய இருக்கும். கூட்டுக் குடும்பமாக ஆட்கள் நிறைந்திருக்கும். அங்கே அந்த காதல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் கண்களால் நடக்கும் உரையாடல். அதற்காக அவர்களுக்குள் சண்டைகள் வராமல் இருந்தது இல்லை. சண்டைகளைத் தாண்டி அவர்களுக்குள் இருந்தது புரிதல்.

இன்று?

பார்த்ததும் ஒரே நாளில் காதலைச் சொல்லி, இரண்டே நாட்களில் எல்லாம் பேசி முடித்து வாழ்க்கை என்பது சலித்துவிடுகிறது. சீக்கிரத்தில் தொடங்கி சீக்கிரத்தில் முடிந்து விடுகிறது. கணவன் மனைவிக்குள் மட்டுமல்ல பொதுவாகவே உறவுகளுக்குள் விரிசல் எங்கிருந்து வருகிறது? விரிசலை ஏற்படுத்த காரணங்கள் ஆயிரம் இருக்கலாம். எப்படி சுற்றி வளைத்துப் பார்த்தாலும் எல்லா காரணங்களும் பெரும்பாலும், இந்த பத்துக்குள் நிச்சயம் அடங்கிவிடும். அப்படியான பத்து காரணங்களை பார்க்கலாம்.

**1. ஈகோ (Ego):**

குடும்பத்துக்குள் எட்டிப் பார்க்கக்கூடாத விஷயம் ஈகோ, அந்த வார்த்தைக்குள்ளேயே 'கோ' என்பது இருப்பதால், யாராவது ஒருவருக்கு அது வந்துவிட்டால், நிம்மதியை விரட்டிவிடும். நீ பெரியவனா! நான் பெரியவளா! என்று போட்டிபோடும் மைதானம் அல்ல, வாழ்க்கை. கணவனுக்கு தெரியாதது மனைவிக்கு தெரிந்திருக்கலாம் மனைவிக்கு தெரியாதது கணவனுக்கு தெரிந்திருக்கலாம் எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. இன்னொரு பக்கம் மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையில் இந்த ஈகோ அடிக்கடி வந்து போகும். அதனால் ஈகோவை தவிர்த்துவிடுவோம்.

**2. தாழ்வு மனப்பான்மை: (Inferiority Complex)**

இது எந்த நேரத்தில் மனிதனுக்குள் எட்டிப்பார்க்கும் என்பது தெரியாது. ஏதாவது ஒரு விஷயத்தை செய்ய முடியாமல் போய், அதற்காக வீட்டில் உள்ளவர்கள் சாதாரணமாக கிண்டல் செய்தால் கூட, அது சிலருக்கு தாழ்வு மனப்பான்மையாக மாறிவிடும். அது நாளடைவில் அதிகமாகி தங்களுக்குள் ஒரு வட்டத்தைப் போட்டுக் கொள்வார்கள். அந்த வட்டமே விரிசலாக மாறும். சமையல் தொடங்கி படிப்பு வரை இந்த தாழ்வுமனப்பான்மை எதற்காக வேண்டுமானாலும் வரலாம்.

**3. தவறான புரிதல்: (Misunderstanding)**

வாழ்க்கையை அழகாக மாற்றுவதே புரிதல்தான். அது கணவன் மனைவியாக இருந்தாலும் சரி அப்பா பிள்ளை, அண்ணன் தங்கை என எந்த உறவுகளானாலும் புரிதல் என்பது அவசியம். புரிதல் மட்டும் இருந்தால் வாழ்க்கை வரமாகும். அதுமட்டும் இல்லாமல் போய்விட்டால், தொட்டதற்கெல்லாம் பிரச்னை எழ ஆரம்பித்துவிடும். 'நான் சொல்றதை யாரும் கேட்க மாட்டேங்குறாங்க' என்று எல்லோரிடமும் எரிந்து விழ ஆரம்பித்து விடுவீர்கள். மற்றவர்கள் எப்படி உங்களை புரிந்துகொள்ள வேண்டும் என நினைக்கிறீர்களோ அதேபோல வீட்டில் மற்றவர்களின் உணர்வுகளை நீங்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

**4. பொஸசிவ்னஸ்: (Possessiveness)**

'தனக்கு மட்டுமே சொந்தம்' என்று என்ற பொஸசிவ்னஸ் நமக்கு இந்நாளில் பழக்கமாகிவிட்டது. அளவு கடந்த அன்புதான் இந்த பொஸசிவ்னஸ். கணவன் வேறு ஒரு பெண்ணிடமோ, மனைவி வேறு ஓர் ஆணிடமோ சாதாரணமாக பேசினால் கூட அதை தாங்கிக்கொள்ள முடியாது. இந்த இடத்தில் அப்படியான ஒன்று நிகழ்ந்தால், 'ஹேய் லூசு அவளும் நீயும் ஒண்ணா' என அதே இடத்தில் சொல்லி உங்கள் துணையின் முக்கியத்துவத்தை புரியவைத்துவிட வேண்டும். அப்படியே அதை வளரவிட்டால், ஆபத்துதான். இது கல்யாணம் ஆனதும் வரலாம். 40 வயதிலும் வரலாம். எந்த நேரத்திலும் இது என்ட்ரி ஆகலாம்.

**5. சந்தேகம் (Suspicion):**

பொஸசிவ்னஸ்'க்கும் இதற்கும் மெல்லிய கோடுதான் வித்தியாசம். அதன் அடுத்த கட்டம் இது. வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் வீட்டுக்குள் வரவே கூடாத ஒன்று சந்தேகம். வாழ்க்கையை நரகமாக மாற்றும் சக்தி சந்தேகத்துக்கு உண்டு. பல வீடுகளில் புகுந்த சந்தேகப்பேய், வீட்டையே புரட்டிப்போட்டு, சில இடங்களில் உயிரையும் குடித்திருக்கிறது. அதனால் சந்தேகம் என்ற பேயை மனசுக்குள் விடாதீர்கள். அப்படி உங்களுக்கு எதாவது தோன்றினால் அதை உடனே உங்கள் துணையுடன் கலந்து பேசி தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். உங்கள் சந்தேகத்தை வளரவிட்டால் அது வெட்ட முடியாத முள் காடாக வளர்ந்துவிடும்.

**6. மனம் விட்டுப் பேசாதது: (Not being open about their feelings)**

எவ்வளவு பெரிய பிரச்னையாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசினால் தீர்ந்துவிடும். ஆனால், அப்படி பேசுவதற்குதான் பலர் தயாராக இருப்பதே இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வரும் சண்டைகளை இருவரும் பேசாமல் தள்ளிப்போடுவது தான் விரிசலை விரிவுபடுத்துகிறது. அதேபோல குழந்தைகளாக இருந்தாலும் சரி!

பெற்றோராக இருந்தாலும் சரி! அவரவர்களுக்குள் ஒரு எண்ணம் இருக்கும். மற்றவர்கள் அதில் இருந்து மாறுபட்டு இருப்பார்கள். அந்த நேரத்தில் பேசினால் மட்டுமே தீர்வு கிடைக்கும். ஆளுக்கொரு விஷயத்தை மனசுக்குள் மட்டுமே நினைத்திருந்தால் அதற்கு தீர்வு கிடைக்காது. அது விரிசலில் மட்டுமே முடியும்.

**7. மூன்றாம் நபரின் தலையீடு: (The intervention of a third person)**

குறிப்பாக இது கணவன- மனைவி கவனிக்க வேண்டிய விஷயம். எந்த பிரச்னை வந்தாலும் அதை எந்த காரணத்துக்காகவும் மூன்றாம் நபரிடம் கொண்டு போகக் கூடாது. அவர்கள் இருவருமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். கணவனுக்கு மனைவியைவிடவும், மனைவிக்கு கணவனைவிடவும் வேறு எவரும் நல்லது நினைக்க முடியாது நல்லது செய்யவும் முடியாது. மூன்றாவது நபர் ஒருவர் உங்கள் பிரச்னைக்குள் வந்தாலே நீங்கள் வேறு ஒரு பிரச்னைக்குள் சிக்க தயாராகி வருகிறீர்கள் என்பதுதான் மறைமுகப் பொருள்.

**8. துன்புறுத்தல்: (Harassment)**

கணவன் மனைவிக்கு இடையில் இருக்கும் பாசம், குழந்தைகளின் வரவுக்குப்பின் கொஞ்சம் குறைய ஆரம்பிக்கும். அதுவும் 40 வயதைக் கடந்த பெண்கள், குழந்தைகள் மீது அன்பையும் அக்கறையையும் காட்டிக் கொண்டு, கணவனை கண்டு கொள்ளாமல் இருப்பார்கள். கணவன் நெருங்கி வந்தாலும் விலகிப் போவார்கள். அந்த நேரத்தில்தான் உங்கள் துணைக்கு அரவணைப்பு முக்கியம். அடிப்பது, சண்டை போடுவது மட்டுமல்ல, விட்டு விலகிப்போவதும் ஒருவகையில் துன்புறுத்தல்தான். அப்படியான ஒன்று நிகழும்போது இருவருக்கும் இடையில் விரிசல் தொடங்கியிருக்கும்.

வீட்டில் இருக்கும் குழந்தைகள் சொல்வதையும் காதுகொடுத்துக் கேளுங்கள். உங்கள் எண்ணங்களை அவர்கள் மீது திணித்தால், அவர்களைப் பொருத்தவரையில் அதுவும் ஒருவகையில் துன்புறுத்தல்தான். அந்தத் திணிப்பு நாளடைவில் உங்கள் மீது வெறுப்பை உண்டாக்கும்.



**9. விட்டுக் கொடுக்காதது: (Being Selfish)**

குடும்பத்துக்குள் சண்டை வருவது இயல்பு. சண்டைக்குப் பிறகு யார் முதலில் பேசுவது என காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. எந்த பிரச்னையாக இருந்தாலும் இரவு தூங்கப் போவதற்குள் முடிவுக்கு வந்துவிட வேண்டும். இருவரில் ஒருவர் விட்டுக்கொடுத்தாலே போதும் மற்றவர் தானாக சமாதானம் ஆகிவிடுவார். 'அடச்சே! இதுக்கா சண்டை போட்டோம்!' என மறுநாள் உங்களுக்கே தோன்றலாம். அதேபோல குழந்தைகளிடமும் சில விஷயங்களில் பெரியவர்கள் விட்டுக்கொடுத்தே ஆக வேண்டும். 'அவன் என்ன சின்ன குழந்தைதானே! நான் சொன்னால் கேட்க மாட்டானா?' என்ற எண்ணம் வரவே கூடாது. விட்டுக்கொடுத்தவன் கெட்டுப்போக மாட்டான் என பெரியவர்கள் சொன்னதில் எவ்வளவு உண்மை அடங்கியிருக்கிறது.

**10. சோசியல் மீடியா: (Social Media)**

இன்று பல குடும்பங்களில் ஏற்படும் பிரச்னைக்கும் விரிசலுக்கும் முக்கிய காரணமாக இருப்பது சோஷியல் மீடியாக்கள். பெரும்பாலானோர் அதிக நேரத்தை இங்கேதான் செலவிடுகிறார்கள். வீட்டில் இருப்பவர்களிடம் பேசுவதை விட சோஷியல் மீடியாவுக்குள் முன் பின் தெரியாதவர்களிடம் பேசுவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். சாப்பிடுவதற்கு, குளிப்பதற்கு, அலுவலகம் செல்வதற்கு என எல்லாவற்றும் தனித்தனியாக நேரம் ஒதுக்குகிறோம். ஆனால் நேரம் காலமில்லாமல் சோஷியல் மீடியா நம்மை ஆக்ரமித்துவிடுகிறது.

இதைக் கேட்டால் பிரச்னை தொடங்கிவிடுகிறது. அதேபோல் போன். உங்கள் கட்டுப்பாட்டில் போன் இருக்க வேண்டும். அதன் கட்டுப்பாட்டில் நீங்கள் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீட்டில் இருக்கும்போது - முக்கியமாக படுக்கையறையில் - எந்தக் காரணத்துக்காகவும் போனை நோண்டிக் கொண்டிருப்பதை நிறுத்துங்கள். அது உங்கள் துணையை எரிச்சல்படுத்தும்.

இந்த பத்து காரணங்களை திரும்ப ஒருமுறை படியுங்கள். நீங்கள் எங்கே தவறு செய்கிறீர்கள் என்பதை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். அதை சரி செய்யுங்கள். வாழ்க்கை வரமாகும்.



அரபாத் பஹுர்தீன்







# கமிந்துவின் சதம் வீண்போக தோற்றுப் போனது இலங்கை; வெற்றியுடன் முன்னிலை பெற்றது இங்கிலாந்து

இலங்கை அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் கமிந்து மெண்டிஸின் அசத்தல் சதம் வீணாகிப் போக இங்கிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தொடரில் 1:0 என முன்னிலை பெற்றது.

சுற்றுலா இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 21ஆம் திகதி மென்செஸ்டரில் ஆரம்பித்திருந்தது. இப் போட்டியில் இலங்கை அணியின் சார்பில் மிலான் ரத்ணாயக்க தனது சர்வதேச டெஸ்ட் அறிமுகத்தை பெற்றுக் கொண்டார். இப்போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி வெற்றி பெற்று முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்திருந்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு முன்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆரம்பத்தைக் கொடுக்கத் தவறினர். இருப்பினும் மத்திய மற்றும் பின்வரிசையில் வந்த அணித்தலைவரான தனஞ்சய டி சில்வா மற்றும் அறிமுக வீரரான மிலான் ரத்ணாயக்க ஆகியோரின் அரைச்சதம் கடந்து பெற்றுக் கொண்ட 74 மற்றும் 72 ஓட்டங்களால் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 236 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் கிறிஸ் வோர்க் மற்றும் சொகைப் பசீர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு ஆரம்பம் சரியாக அமையாத போதிலும் இளம் வீரரான ஜமி ஸ்மித்தின் பொறுப்பான கன்னிச் சதம் கடந்த 111 ஓட்டங்கள் மற்றும் ஹறி புரூக்கின் அரைச்சதம் கடந்த 56 ஓட்டங்கள் ஆகியன இங்கிலாந்து அணிக்கு வலுச் சேர்க்க 358 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்தது. பந்துவீச்சில் இலங்கை சார்பில் அசித பெர்ணான்டோ 4 விக்கெட்டுக்களையும், பிரபாத் ஜெயசூரிய 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பின்னர் 122 ஓட்டங்கள் முதல் இன்னிங்ஸ் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரரான நிஷான் மதுஷ்க மற்றும் 3ஆம் இலக்க துடுப்பாட்ட வீரரான குசல் மெண்டிஸ் ஆகியோர் டக் அவுட் ஆகி மீண்டும் ஏமாற்றம் கொடுத்தனர். இருப்பினும் களத்திலிருந்த மற்றைய ஆரம்ப வீரரான திமுத் 27 ஓட்டங்களை பெற்று கொடுத்து ஆட்டமிழந்தார். ஆனாலும் களத்தில் நின்ற அனுபவமிக்க துடுப்பாட்ட வீரரான அஞ்சலோ மெத்யூஸ் அரைச்சதம் கடந்து 65 ஓட்டங்களைப் பெற்று அணியின் ஓட்ட வேகத்திற்கு வலுச் சேர்த்து ஆட்டமிழந்தார். பின்னர் எதிர்பார்க்கப்பட்ட தனஞ்சய 11 ஓட்டங்களுடனும், மிலான் ரத்ணாயக்க 10 ஓட்டங்களுடனும் பெவிலியன் திரும்பினர்.

இருப்பினும் உபாதைக்கு உள்ளாகி 3ஆம் நாள் ஆட்டத்தின் இடை நடுவில் பெவிலியன் திரும்பிய சந்திமால் மீண்டும் துடுப்பாட வர அவருக்கு சிறப்பான துடுப்பாட்டஇணையினை கொடுத்த கமிந்து மெண்டிஸ் ஆகியோர் இலங்கை அணியின் ஓட்ட வேகத்தை 300 ஓட்டங்களுக்கு மேல் உயர்த்தினர். பொறுப்புடன் துடுப்பாடிய சந்திமால் 79 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்தும் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கமிந்து மெண்டிஸ் டெஸ்ட் அரங்கில் தொடரான 3ஆது சதத்தை பதிவு செய்து 113 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனால் இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் கிரிஸ் வோர்க்ஸ் மற்றும் மெத்யுவ் போர்ட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

அதற்கமைய இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்ட 205 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு அனுபவமிக்க உலகின் தலைசிறந்த வீரரான ஜோ ரூட் அரைச்சதம் விளாசி ஆட்டமிழக்காமல் 62 ஓட்டங்களையும், முதல் இன்னிங்ஸில் சதம் விளாசிய ஜெமி ஸ்மித் 39 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுக்க 57.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 205 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது இங்கிலாந்து அணி. பந்துவீச்சில் அசித பெர்ணான்டோ மற்றும் பிரபாத் ஜெயசூரிய ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி 1:0 என முன்னிலை பெற்றுள்ளது. அத்துடன் டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் இப்போட்டிக்கு முன்னர் 4 ஆம் இடத்திலிருந்த இலங்கை அணி இப் போட்டியில் கிடைத்த தோல்வியால் 5ஆது இடத்திற்கு கீழிறங்கியிருக்க , இப்போட்டியில் ெற்றி பெற்ற இங்கிலாந்து அணி ஒரு படி மேலுயர்ந்து 4ஆவது இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி உலகப்புகழ் பெற்ற லோட்ஸ் மைதானத்தில் இடம்பெறள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 10 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை வெற்றி கொண்டு வரலாற்றைய மாற்றியது வங்கதேசம்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அனுபவ வீரரான முஸ்பிகுர் ரஹீம் பெற்றுக் கொடுத்த 191 ஓட்டங்களின் உதவியுடன் 10 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றதுடன் பாகிஸ்தான் அணிக்கு எதிராக தமது முதல் சர்வதேச டெஸ்ட் வெற்றியையும் பதிவு செய்து வரலாறு படைத்தது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் பாகிஸ்தானில் இடம்பெற்றுவருகின்றது. அதில் கடந்த 21ஆம் திகதி ஆரம்பித்த முதல் டெஸ்ட் போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை பாகிஸ்தான் அணிக்கு கொடுத்திருந்தது.

இதற்கமைய தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முஹம்மது ரிஸ்வான் மற்றும் ஷவுத் ஷகீல் ஆகியோரின் 240 ஓட்ட இணைப்பாட்டம் கைகொடுக்க 6 விக்கெட்டுக்களை இழந்து 448 ஓட்டங்களைப் பெற்று இன்னிங்ஸை நிறைவு செய்தது. துடுப்பாட்டத்தில் ரிஸ்வான் 171 ஓட்டங்களையும், ஷகீல் 141 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஹசன் மற்றும் ஷரீபுல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் தமது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணிக்கு அனுபமிக்க வீரரான முஸ்பிகுர் ரஹீம் சதம் கடந்து 191 ஓட்டங்களையும், ஆரம்ப இளம் வீரரான சட்மன் இஸ்லாம் (93), மொஹ்மீனுல் ஹக் (50), லிட்டன் தாஸ் (56) மற்றும் மெஹ்தி ஹசன் மிராஸ் (77) ஆகியோர்அரைச்சதம் கடந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க சகல விக்கெட்டுக்களையும் இழந்த பங்களாதேஷ் அணி 565 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பந்துவீச்சில் நஷீம் ஷா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து 117 முதல் இன்னிங்ஸ் ஓட்டங்கள் பின்னிலையுடன் தமது 2ஆவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி 5ஆவதும் இறுதியுமான நாள் ஆட்டமான நேற்று (25) முஹம்மது ரிஹ்வானை தவிற மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் நிலைக்காமல் 55.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 146 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் இறுதி வரை போராடிய ரிஸ்வான் 51 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் மெஹ்தி ஹசன் மிராஸ் 4 விக்கெட்டுக்களை அள்ளிச் சுருட்டினார்.

பின்னர் 30 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கினை நோக்கி தமது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி விக்கெட் இழப்பின்றி 6.3 ஓவர்களில் 30 ஓட்டங்களைப் பெற்று 10 விக்கெட்டுக்களால் வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. இதுவரையில் பாகிஸ்தான் அணியை பங்களாதேஷ் அணி சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் வெற்றதில்லை என்ற சொல்லை இப்போட்டியில் வென்று மாற்றி எழுதியது ஹதுருசிங்கவின் பயிற்றுவிப்பின் கீழ் விளையாடிவரும் பங்களாதேஷ் அணி.

# யூடியூபை மிரளவிட்ட ரொனால்டோ

சமூக ஊடகமான யூடியூப் தளத்தில் மிக வேகமாக ஒரு மில்லியன் சப்ஸ்கிரைபர்களை (subscribers) இணைத்து பிரபல உதைப்பந்தாட்ட நட்சத்திரமான போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனைப் படைத்துள்ளார்.




புகழ்பெற்ற போர்த்துக்கல் உதைப்பந்தாட்ட அணியின் வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ தனது யூடியூப் பக்கத்தை கடந்த 21ஆம் திகதி புதன்கிழமை தொடங்கினார். இந்நிலையில், வெறும் 90 நிமிடங்களில் ஒரு மில்லியன் பேர் அவரது யூடியூப் பக்கத்தை சப்ஸ்கிரைப் (subscribe) செய்து இணைந்துள்ளனர். அத்துடன் ஒரு நாளில் 10 மில்லியன் சப்ஸ்கிரைபர்களை பெற்று யூடியூப் நிறுவனத்தால் வழங்கப்படும் கோல்டன் பட்டன் விருதையும் பெற்றுக் கொண்டார்.

அது மட்டுமல்லாமல், ரொனால்டோவின் யூடியூப் பக்கம் தொடங்கப்பட்ட ஒரு நாளில் இப்போது 11 மில்லியனுக்கும் அதிகமான சப்ஸ்கிரைபஸ்கள் (subscribers) இணைந்துள்ளனர். மேலும் தனது அதிகாரப்பூர்வ யூடியூப் பக்கம் குறித்து ரொனால்டோ சமூக ஊடகங்களில் அறிவித்திருந்தார்.அதற்கமைய நேற்று பிற்பகல் வரை 42.9 மில்லியன் சப்ஸ்கிரைபஸ்கள் அவரது பக்கத்தை பின்தொடர்கின்றனர்.

ரொனால்டோவை மற்றைய சமூக வலைத்தளங்களான ஓ தளத்தில் 112.5 மில்லியன் பின்தொடர்பவர்களும், பேஸ்புக்கில் 170 மில்லியன் மற்றும் இன்ஸ்டாகிராமில் 636 மில்லியன் பின்தொடர்பவர்களும் உள்ளனர்.

சிறந்த உதைப்பந்தாட்ட வீரர்களில் ஒருவரான ரொனால்டோ தற்போது சவுதி புரோ லீக்கில் அல் நாசருக்கு விளையாடுகிறார். 39 வயதான அவர் தொடர்ந்தும் விளையாடி வருகின்றார். எவ்வாறாயினும், விளையாட்டு வாழ்கையில் இருந்து ஓய்வுபெறும் அவர் தனது வணிக நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 60 மீற்றர் ஓட்டப்போட்டியில் வடமாகாண சம்பியன் ஆனார் ரிஸ்பி முஹம்மது ரனா

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற 12 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டி நிகழ்ச்சியில் 8 செக்கன்களில் போட்டித் து10ரத்தை நிறைவு செய்து வடமாகாணத்தின் சம்பியனானார பொற்கேணி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் மாணவன் ரில்பி முகம்மது ரனா.

கல்வி அமைச்சின் அனுசரணையில் இடம்பெற்றுவரும் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டிகளில் வட மாகாணத்திற்கான போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

அதில் கடந்த புதன்கிழமை (21) இடம்பெற்ற 12 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டப் போட்டியில் பொற்கேணி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையை பிரதிநிதித்துவம் செய்து பங்கேற்ற ரில்பி முகம்மது ரனா முதல் மற்றும் அறையிறுதி சுற்றுக்களில் முதலிடம் பிடித்ததுடன் இறுதிப் போட்டிக்கும் தெரிவானார்.

அதற்கமைய இடம்பெற்ற இறுதிச் சுற்று போட்டியில் போட்டித் தூ ரத்தை வெறும் 8 செக்கன்களில் நிறை செய்து முதலிடம் பிடித்ததுடன் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து அகில இலங்கை ரீதியிலான போட்டிக்குள் தடம்பதித்தார் ரில்பி முஹம்மது ரனா என்பது குறிப்பிடத்தக்கது.




இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.